REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஜுன் 12 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
வரு. 91 இல. 137
Monday 12, June, 2023
16 பக்கங்கள்
50/-

## ஆளுநர் செந்திலுக்கு ஸ்டாலின் வாழ்த்து

**தொலைபேசியில் கருத்துப்பரிமாறல்**



கிழக்கு மாகாண ஆளுநராக பொறுப்பேற்றுள்ள இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமானுக்கு தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தனது வாழ்த்துக்களை தொலைபேசியூடாக

06

## ஜனாதிபதி 17 இல் UK, பிரான்ஸ் விஜயம்

**05 தினங்கள் உத்தியோகபூர்வ விஜயம்**

லோரன்ஸ் செல்வ நாயகம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 17ஆம் திகதி லண்டன் மற்றும் பிரான்ஸ்

06

**அதியுயர் பாதுகாப்பு வலயங்களினுள் மக்களது காணி;**

## வடக்கு, கிழக்கு பகுதியில் காணிகளை விடுவிக்க விசேட அலுவலகம்



**துரிதமாக நடைமுறைப்படுத்த அரசு ஏற்பாடு**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் காணப்படும் மக்கள் காணிகளை விடுவிப்பதற்காக விசேட அலுவலகமொன்றை ஸ்தாபிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான

06

## எமது பல்கலைக்கழகங்களின் தரம், நற்பெயர் மீண்டும் உலகின் முன் உறுதிப்படுத்தல் அவசியம்

**அதன் மூலம் வெளிநாட்டு மாணவர்களையும் ஈர்க்க முடியும் – ஜனாதிபதி**



இலங்கைப் பல்கலைக்கழகங்கள் அன்று ஆசிய பல்கலைக்கழகங்களின் பட்டியலில் முதன்மையான இடத்தில் இருந்ததாகவும், அந்தத் தரம் மற்றும் நற்பெயரை இந்நாட்டின் பல்கலைக்கழக கட்டமைப்பில் மீண்டும் ஏற்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

06

## நாட்டில் கடும் மழைக்கு வாய்ப்பு




லோரன்ஸ் செல்வநாயகம்

தென் மேற்கு பருவப்பெயர்ச்சி காரணமாக நாட்டில் நிலவும் கடும் மழையுடனான

06

**குடிவரவு, குடியகல்வு பணிகளுக்காக விரைவில்**

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் தானியங்கி கட்டுப்பாட்டு முறை

**சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றுடன் அரசு கைச்சாத்து**



கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தரும் மற்றும் வெளியேறும் பயணிகளுக்கு வினைத்திறனான சேவையை வழங்குவதற்காக, தானியங்கி குடிவரவு, குடியகல்வு முகாமை

06

## சகல அரசாங்க பல்கலைக்கழகங்களிலும் இதுவரை இடம்பெற்ற

# பகிடிவதை சம்பவங்களை அறிக்கையிடுமாறு உத்தரவு



* உபவேந்தர்களுக்கும் IGPக்கும் உச்ச நீதிமன்றம் பணிப்பு
* பகிடிவதையால் பாதிக்கப்பட்ட பல்கலை மாணவன் பசிந்து ஹர்சன சில்வா தொடர்ந்த அடிப்படை உரிமை மனு மீதான விசாரணையின் போதே மேற்படி உத்தரவினை உச்ச நீதிமன்றம் பிறப்பித்தது

லோரன்ஸ் செல்வநாயகம்

அரச பல்கலைக்கழகங்களில் கடந்த மூன்று வருடங்களாக இடம்பெற்றுள்ள பகிடிவதை சம்பவங்கள் மற்றும் அதுதொடர்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் தனித்தனியாக அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறு உச்ச நீதிமன்றம் பல்கலைக்கழக உபவேந்தர்கள் மற்றும் பொலிஸ் மா அதிபருக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதுதொடர்பான அறிக்கைகளை 8 வாரங்களுக்குள் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கையெடுக்குமாறு அதற்கிணங்க அனைத்து பல்கலைக்கழக உபவேந்தர்களுக்கும் பொலிஸ் மாஅதிபர்களுக்கும் நீதிமன்றத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் கடந்த 2020 ஆம் ஆண்டு இடம்பெற்றுள்ள பகிடிவதை சம்பவத்தில் பாரிய பெகோ ரயர்

06

**முறையற்ற நிர்வாகத்தால் சேவைகள் பலவீனம்;**

## புகையிரத சேவையை நிச்சயம் தனியார் மயமாக்க வேண்டும்



லோரன்ஸ் செல்வநாயகம்

ரயில்வே துறை தனியார் மயப்படுத்தப்படாவிட்டால் கண்டிப்பாக அதனை அதிகார சபையாக்குவது அவசியமென போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். ரயில்வே சாரதிகள் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போதே அமைச்சர்

06

## எரிபொருள் விநியோகத்தில் எந்தவித சிக்கலும் இல்லை

**தட்டுப்பாட்டுக்கு இடமில்லை என்கிறார் கஞ்சன**

நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தட்டுப்பாடு இன்றி எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும் என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தனது டுவிட்டர் பதிவில் இது தொடர்பில் மேலும் கூறியுள்ளதாவது,

கடந்த 10 நாட்களில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் ஆடர்கள்

06



## மத்திய அரசு பறித்த மாகாண அதிகாரங்கள் விரைவில் மீளவும்

**பிரதமருடனான சந்திப்பில் சாதகமான பதில் - விக்கி**



13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் சிலவற்றை மத்திய அரசு எடுத்துள்ள நிலையில், அதனை மீள வழங்குவதற்கு பிரதமர் சாதகமாகப் பதிலளித்துள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர்

06

## நாட்டில் டெங்கு அபாயம் பன்மடங்காக அதிகரிப்பு

**டாக்டர் நீலிகா மலவிகே மக்களுக்கு எச்சரிக்கை**



இலங்கையில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளதாக பேராசிரியர் நீலிகா மலவிகே தெரிவித்துள்ளார். டுவிட்டர் பதிவொன்றின் ஊடாக அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் ஜனவரி மாதம் முதல் ஜுன்

06

## அதிபர்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

**நிபுணர்கள் குழுவுக்கு கல்வியமைச்சர் யோசனைகள் முன்வைப்பு**



லோரன்ஸ் செல்வநாயகம்

அதிபர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் மேற்படி பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்கள் குழுவுக்கு கல்வியமைச்சர் யோசனைகள் சிலவற்றையும் முன்வைத்துள்ளார். அதிபர்கள் சேவை அதிகாரிகளின்

06

**டெங்கு நுளம்பு பரவும் இடங்கள்;**

## அடையாளம் காணப்படின் அபராதம் விதிக்கப்படும்

**இந்த வாரம் முதல் கடும் அமுலுக்கு**



வீடுகளில் அல்லது டெங்கு நுளம்பு பரவும் இடங்கள் அடையாளம் காணப்பட்டால் அதற்கான அபராதம் விதிக்கும் நடைமுறை அடுத்தவாரம் முதல் அமுலுக்கு வரவுள்ளது. சமீப


06



**எல்லை நிர்ணய குழுவின் அறிக்கையை ஏற்க முடியாது**

SJB திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

03



**மின்கட்டண குறைப்பு குறித்து புதிய யோசனை**

இலங்கை மின்சார சபையில் முன்வைப்பு

03





**வெளிநாட்டிலிருந்து வந்த இருவருக்கு "எயிட்ஸ்"**

வவுனியாவில் பரிசோதனையில் உறுதியானது

03

## மூன்றாம் தரப்பு மூலம் சாரதி அனுமதி அட்டை

**எட்டரை இலட்சம் பேருக்கு வழங்க முடிவு**



இலங்கையில் இது வரையில் வழங்க முடியாத சாரதி அனுமதி அட்டைகளை மூன்றாம் தரப்பினர் மூலம் வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது. இதற்குத் தேவையான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மோட்டார்

06

## 120 நாட்களில் 3000 சிறுவர் துஷ்பிரயோகங்கள்

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தகவல்**



இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் மூவாயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் உதயகுமார அமரசிங்க ஊடகமொன்றிக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்,

06

## நவீன் திசாநாயக்கவுக்கு விரைவில் ஆளுநர் பதவி

**UNP ருவன் விஜேவர்தன தெரிவிப்பு**



லோரன்ஸ் செல்வநாயகம்

முன்னாள் அமைச்சர் நவீன் திசாநாயக்கவுக்கு ஆளுநர் பதவியொன்றை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

06

**புல்வெட்டும் இயந்திரத்தில் சிக்கிய**

## 05 வயது சிறுவன் சடலமாக மீட்பு

**பணியாளரும் பாட்டனாரும் கைது**



முல்லேரியாவில் ஐந்து வயதுச் சிறுவனின் சடலம் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள சிறுவனின் பாட்டனார், இன்று நீதவான்

06

**கையடக்க தொலைபேசிகளின்**

## விலைகளை உடனடியாக குறைக்க முடியாது

**தொடர்பாடல் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு**

லோரன்ஸ் செல்வநாயகம்



கையடக்க தொலைபேசிகளின் விலைகளை உடனடியாகக் குறைக்க முடியாது என அகில இலங்கை தொடர்பாடல் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# நகர்வலம்



# கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளின் வெள்ள பாதிப்பை குறைக்க நடவடிக்கை

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



இவ்வருடம், கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்டுள்ள பாதிப்பைக் குறைப்பதற்கும் நிலையான நீண்டகாலத் தீர்வை நடைமுறைப்படுத்துவதற்கும் அமைச்சரவைப் பத்திரமொன்றை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

இலங்கை காணி மீட்புக் கூட்டுத்தாபனத்தினால் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கொழும்பு மாநகரப் பகுதியிலும், கொழும்பிற்கு வெளியே உள்ள பகுதிகளிலும் வெள்ளத்தைத் தணிக்கும் திட்டங்களை இலங்கை காணி மீட்புக் கூட்டுத்தாபனம் அடையாளம் கண்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி இவ்வருடம் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2,100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டம் பல கட்டங்களாக செயல்படுத்தப்பட உள்ளது.

மொத்த ஒதுக்கீட்டில் 20 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான திட்டங்களுக்கு 1991 மில்லியன் ரூபாவும் 20 மில்லியன் ரூபாவிற்கும் குறைவான திட்டங்களுக்கு 109.00 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

களனி கங்கை பெருக்கெடுத்து ஓடுவதன் காரணமாக கொலன்னாவை மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகள் தொடர்ந்து வெள்ளத்தில் மூழ்கி வருகின்றன. இதனால் அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

வெள்ளத் தணிப்புக்கான உட்கட்டமைப்பு மேம்பாடு இன்றியமையாத வளர்ச்சிக் கூறு ஆகும். கடந்த தசாப்தங்களில், இந்த பகுதிகள் போதுமான மற்றும் பொருத்தமற்ற வடிகால் அமைப்புகளால் தொடர்ந்து வெள்ளத்தால் அச்சுறுத்தப்படுகின்றன.

கொலன்னாவை மழை நீர் வடிகால் மற்றும் சுற்றுப்புற சூழலை மேம்படுத்தி மக்களை அந்த நிலையிலிருந்து விடுவிப்பதில் முன்னுரிமையளித்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

### கொழும்பு தமிழ்ச் சங்க

# 80ஆவது அமுத விழாவில் ஐவருக்கு முனைவர் பட்டம்



**அஷ்ரப் ஏ சமத்**

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் 80வது ஆண்டு அமுத விழாவினை முன்னிட்டு ஐந்து கல்விமான்களுக்கு முனைவர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. வெள்ளி, சனி, ஞயிறு ஆகிய மூன்று நாட்கள் அமுத விழா நிகழ்வுகள் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி நடராஜா காண்டீபன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது இயல் முனைவர் பட்டங்கள் பேராசிரியர் சி. தில்லைநாதன், பேராசிரியர் சி.பத்மநாதன், சாகித்தியரத்ன டொக்டர் தி ஞானசேகரன், ஜனாதிபதி சட்டத்தரணி முனைவர் கனக ஈஸ்வரன், முனைவர் செல்வி திருச்சந்திரன் ஆகியோர்களுக்கு தமிழ் சங்கத்தின் தலைவரினால் பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.



ரஷ்ய நாட்டின் தேசிய தின வைபவம் கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் தூதுவர் Levan Dzhagaryan தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த கலந்து கொண்டார். வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன, ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரட்நாயக்க, மற்றும் வெளிநாட்டு தூதுவர்கள் உட்பட முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர். *(படங்கள்: ருஸைக் பாரூக்)*

# டெங்கு நோயாளர்களில் 25 வீதமானோர் பாடசாலை மாணவர்கள்

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்த வருடத்தின் நேற்றுவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 42,000க்கும் மேற்பட்ட டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும் அவர்களில் 25 வீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்பு பிரிவு அது தொடர்பில் தெரிவிக்கையில், டெங்கு நோயிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பது தொடர்பில் அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினரும் பெற்றோர்களும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

அந்த வகையில் கடந்த 2 தினங்களாக பாடசாலை மற்றும் பாடசாலையை அண்டிய பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பாடசாலையின் சுற்றாடல் பகுதிகள் துப்புரவு செய்யப்படும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த பிரிவு தெரிவித்தது.

அதேவேளை, இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 42,184 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதுடன் மேல் மாகாணத்திலேயே அதிக டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும் அந்த பிரிவு தெரிவித்தது.

அந்த வகையில் நாட்டின் பல பகுதிகளிலும் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகள் பல டெங்கு எச்சரிக்கை வலயங்களாக பெயரிடப்பட்டுள்ளதுடன் அவ்வாறு 61 சுகாதார மருத்துவ அதிகாரி நிர்வாகப் பிரிவுகள் இனங்காணப்பட்டு எச்சரிக்கை வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

# 'ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி ஸ்வாமிகளின் குருசரித்திரம்'

### கொட்டாஞ்சேனையில் 18ஆம் திகதி வெளியீட்டு விழா



திருமதி. ரமா சுப்பிரமணியன் எழுதிய ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி (தேம்பே) ஸ்வாமிகளின் 'குருசரித்திர புத்தகம்' வெளியீட்டு விழா இம்மாதம் 18ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கொழும்பு, கொட்டாஞ்சேனை வரதராஜ விநாயகர் சாயிநாதனின் சரணாலயத்தில் நடைபெறும்.

கொட்டாஞ்சேனை, அவிசாவளை சாயிநாதரின் சரணாலயத்தின் அறங்காவலர் ஈஸ்வரன் தெய்வநாயகம் (கணேஷ்) தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், 'ஈஸ்வரனின் கனவு உதயம்' என்ற தலைப்பில் தலைமை உரையை நிகழ்த்துவார். இந்த புனித நூலை தொழிலதிபர் தெ. சண்முகசுந்தரம் வெளியிட ஜிந்துபிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய அறங்காவலர் தெ. பிரம்மநாயகம் பெற்றுக்கொள்வார். தொடர்ந்து அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

# இ.ஒ.கூட்டுத் தாபனத்தில் மதுர கீதங்கள் நிகழ்ச்சி



படங்கள்: எம்.நசார்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மதுர கீதங்கள் 08வது இசை நிகழ்ச்சி நிலையத்தின் ஆனந்த சமரக்கோன் கலையகத்தில் கூட்டுத்தாபன தலைவர் ஹட்சன் சமரசிங்க தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வட மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியை பிரபல இசையமைப்பாளர் இ ஒ கூ ஆலோசகர் விசாரத கலாபூஷணம் A மகேந்திரன் ஆகியோர் ஏற்பாடு மற்றும் நெறியாள்கை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ரட்னம் ரட்னதுரையின் ரட்ணம் and பேண்ட் இசையில் நம் நாட்டு பிரபல பாடக பாடகிகள் பாடினர். ஜனரஞ்சக பாடகர் டொக்டர் M.A.M முபாரிஸ் அவர்களுக்கு மதுர குரல் என்ற சிறப்பு விருதும் தங்க நாணய பரிசும் வழக்கி கௌரவிக்கப்பட்டதோடு தென்றல் FM இன் 5 சிறந்த நேயர்களுக்கு இதன் போது நினைவுச்சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

### க.பொ.த சா/த பரீட்சையில் இறுதிப்பாடத்தை

# எழுதிவிட்டு வீடு திரும்பிய மாணவன் விபத்தில் பலி!

### மரதங்கடவளையில் சம்பவம்

**திறப்பனை தினகரன் நிருபர்**



கடந்த 08ஆம் திகதி முடிவடைந்த க.பொ.த சா/த பரீட்சையை முடித்துவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிச் சென்ற பாடசாலை மாணவர்கள் இருவர், மற்றுமொரு மாணவி பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மாணவர்களில் ஒருவரான தனுஷ்க மிஹிரங்க என்ற பாடசாலை மாணவன் இதன் போது உயிரிழந்துள்ளார். இவர் மரதங்கடவளை ஸ்ரீ ராகுல மகா வித்தியாலயத்தில் தரம் 11 ல் கல்வி கற்றுவந்த மாணவராவார்.

மரதங்கடவளை ஸ்ரீ ராகுல மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுதிவிட்டு, குறித்த மாணவன் தனது வகுப்பைச் சேர்ந்த மற்றொரு நண்பரின் மோட்டார் சைக்கிளில் வீட்டுக்குப் புறப்பட்டுள்ளார். இச்சந்தர்ப்பத்தில் இப்பலோகம தம் பலஸ்ஸாகம நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் தம்பலசாகம பகுதியை நோக்கி வந்தபோது மற்றுமொரு பாடசாலை மாணவியின் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் இவ் விபத்து இடம் பெற்றதாக இப்பலோகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ் விபத்தின் போது பலத்த காயமடைந்த குறிப்பிட்ட மாணவர்கள் மரதங்கடவல கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர், இரு மாணவர்களும் மாணவியும் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு இடம்மாற்றப்பட்டனர். இவர்கள்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த (09) காலை மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து சென்ற மாணவன் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவருடன் சிகிச்சை பெற்று வந்த ஏனைய மாணவர்களில் பாடசாலை மாணவி கடந்த (09) காலை வைத்தியசாலையை விட்டு வெளியேறியதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. விபத்துக்குள்ளான இரு மோட்டார் சைக்கிள்களும் தற்போது பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இபலோகம பொலிஸார் இது பற்றிய மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

### அல் இஹ்சான் சமூகசேவை அமைப்பின் ஏற்பாட்டில்

# கொழும்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவிக்கரம்

**ருஸைக் பாரூக்**



கொழும்பை தலைமையகமாக கொண்டு இயங்கும் 'அல் இஹ்சான் டிரஸ்ட் நிறுவனம்' 2004ஆம் ஆண்டு முதல் இலங்கையில் பல்வேறு துறைகளிலும் தனது சமூக சேவை பணிகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறது. கடந்த சுனாமியினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிக்கரம் நீட்டி ஆரம்பமான மேற்படி சமூக சேவை அமைப்பு தொடர்ந்தும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தனது சேவையை முன்னெடுத்து வருகிறது.

அதன் நிறுவனரும் அறங்காவலருமான சமூகசேவையாளர் நிஸ்தார் அனீஸ், பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் வாழும் ஏழைகளுக்கு உதவிக்கரம் நீட்டவேண்டும் என்ற அடிப்படையில் எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி தனது பணிகளை இலங்கையில் வாழும் மூவின மக்களுக்கும் முன்னெடுத்து வருகின்றமை விசேட அம்சமாகும்.

மேற்படி அமைப்பு தொடக்கத்தில் இருந்து, தலைவர் டாக்டர் ஹாரிஸ் தீனின் திறமையான வழிகாட்டுதலின் கீழ் பாதிக்கப்படக்கூடிய அநாதைகள், விதவைகள், பாடசாலை சிறுவர்களுக்கு தேவையான கல்வியை பெற்றுக்கொடுத்தல் மற்றும் உலர் உணவுப் பொருட்கள் விநியோகம், இலவச கண் சிகிச்சை முகாம், மருத்துவ முகாம் போன்றவற்றையும் தேவையுடையோருக்கு மேற்கொண்டு வருகின்றது.

அண்மையில் கொழும்பில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு சுமார் 12,000 ரூபா பெறுமதியான புத்தகப்பை வழங்கும் நிகழ்வில் சென். ஜோன்ஸ் கல்லூரியின் அதிபர் ஜி.எஸ். நவரத்ன, ஸாஹிரா வித்தியாலய அதிபர் ஜே. நிஸாம்தீன், அல் இஹ்சான் ட்ரஸ்ட் தலைவர் கலாநிதி ஹாரிஸ் டீன், நிறுவனரும் அறங்காவலருமான நிஸ்தார் அனீஸ், இலங்கை இஸ்லாமிய நிலையச் செயலாளர் எஸ்.எச். மொஹம்மட் , ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# தென் மாகாணத்திலிருந்து அதிகமானோர் ஹஜ் கடமைக்கு பயணம்

**வெலிகம தினகரன் நிருபர்**

இம்முறை புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற தென் மாகாணத்திலிருந்து கணிசமானோர் செல்ல ஆயத்தமாகியிருக்கிறார்கள். கடந்த ஓரிரு வருடங்களாக நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ் நிலையால் ஹஜ் கடமையை நிறைவேற்ற முடியாமல் இருந்த நிலையில், தற்போது நாட்டின் அமைதியான சூழ்நிலை காணப்படுவதால் அதிகமானோர் மக்கா செல்ல தயாராகியுள்ளனர். இதில் ஆண்கள், பெண்கள், சிறுவர்களும் அடங்குவர்.

ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்வோர் நாட்டின் சுபீட்சத்துக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் விசேட துஆ பிரார்த்தனையிலும் ஈடுபடவுள்ளனர்.

மேலும் துல் ஹஜ் முதல் 10 நாட்களையும் அமல்களில் ஈடுபடவும், குறிப்பாக நோன்பு நோற்றல் மற்றும் இன்னோரன்ன பல நன்மையான காரியங்களில் ஈடுபடுமாறும் தென் மாகாண ஜம்இய்யதுல் உலமா கேட்டுக்கொண்டுள்ளது.

## மாணிக்கக்கல் வியாபாரி வீட்டில் துப்பாக்கி முனையில் கொள்ளை

அவிசாவளை, கெடஹெத்த பகுதியில் உள்ள மாணிக்கக்கல் வியாபாரி ஒருவரின் வீட்டுக்குள் நேற்று அதிகாலை ஐந்து பேர் கொண்ட கும்பல் நுழைந்து, அங்கிருந்தவர்களை துப்பாக்கிகளை காட்டி மிரட்டி, அறையில் வைத்து பூட்டிவிட்டு, வீட்டில் இருந்த விலையுயர்ந்த கையடக்கத் தொலைபேசிகள் பலவற்றைத் திருடிச் சென்றுள்ளதாக அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தின் போது பெண் ஒருவர் காயமடைந்து அவிசாவளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தின் போது வீட்டில் பெண்களும் சிறு குழந்தைகளும் மாத்திரமே இருந்ததாகவும், வீட்டினுள் நுழைந்தவர்கள் துப்பாக்கிகளை காட்டி மிரட்டி வீட்டில் உள்ள அனைவரையும் வலுக்கட்டாயமாக அறைக்குள் அடைத்து கதவுகளை பூட்டி வீடு முழுவதும் சோதனையிட்டு பணத்தை கண்டெடுத்துள்ளனர்.

"கடையில் கொண்டு வந்த பணத்தை கொடுங்கள்" என்று கூறி வீட்டில் உள்ள அனைத்து அலுமாரிகளையும் அடித்து நொறுக்கியதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட பெண்ணின் நிலைமை

06

# மின் கட்டண குறைப்பு குறித்து புதிய யோசனை

## இலங்கை மின்சார சபையில் முன்வைப்பு

எதிர்வரும் ஜூலை மாதம் மேற்கொள்ளப்படவுள்ள மின்கட்டண திருத்தத்தின் போது மின்கட்டணம் குறைக்கப்படவுள்ள அளவு தொடர்பில் இலங்கை மின்சார சபை யோசனைகளை முன்வைத்துள்ளது.

இந்த நிலையில், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு குறித்த யோசனைகளை வெளிப்படுத்தியுள்ளது.

இதற்கமைய, 0 – 30 வரையான மின்சார அலகுகளை பயன்படுத்தும் நுகர்வோருக்கான மின் கட்டணம் 26.9 சதவீதத்தாலும் 31 முதல் 60 வரையான மின்சார அலகுகளை பயன்படுத்தும் நுகர்வோருக்கு 10.8 சதவீதமும், 61 முதல் 90 வரையான அலகுகளுக்கு 7.2 சதவீதமும் கட்டணம் குறைக்கப்பட வேண்டும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மின்சார சபையின் யோசனைக்கு அமைய, அதிகளவான மக்கள் பயன்படுத்தும் 91 முதல் 180 வரையான அலகுகளுக்கு 3.4 சதவீதம் கட்டணம் குறைக்கப்படும். 180 அலகுகளுக்கும் அதிகமாக மின்சாரத்தை பயன்படுத்தும் நுகர்வோருக்கான கட்டணத்தை 1.3 சதவீதத்தால் குறைப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



## தடுப்பு முகாமிலிருந்து 3 சிறுமிகள் தப்பியோட்டம்

### மடாட்டுகமவில் சம்பவம்; பொலிஸார் தேடுதல்

லோரன்ஸ் செல்வநாயகம்



அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள மடாட்டுகம நகருக்கு அருகாமையில் அமைந்துள்ள தடுப்புக் காவல் மத்திய நிலையத்திலிருந்து மூன்று சிறுமிகள் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மடாட்டுகம பொலிஸார் அது தொடர்பில் நேற்று தெரிவிக்கையில், 15, 16 மற்றும் 17 வயது நிரம்பிய மூன்று சிறுமிகளே இவ்வாறு பராமரிப்பு மத்திய நிலையத்திலிருந்து தப்பியோடியுள்ளதாக தெரிவித்தனர்.

06



ரயில்வே சாரதிகள் தொழிற்சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட போக்குவரத்து, ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன உரையாற்றுவதையும் ரயில்வே பொது முகாமையாளர் மற்றும் மேலதிக பொது முகாமையாளர் உள்ளிட்ட அதிகாரிகளையும் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## எல்லை நிர்ணய குழுவின் அறிக்கையை ஏற்க முடியாது

### SJB திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



தேசிய எல்லை நிர்ணய குழுவின் செயற்பாடுகளில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. எனவே, அதன் அறிக்கையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. புதிய எல்லை நிர்ணயத்துக்கமைய, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த இடமளிக்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில்,

06

## வெளிநாட்டிலிருந்து வந்த இருவருக்கு "எயிட்ஸ்"

### வவுனியாவில் பரிசோதனையில் உறுதியானது




வெளிநாட்டில் இருந்து வருகை தந்த இருவர் வவுனியாவில் எச்.ஐ.வி தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்தனர். மேற்படி நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போதே இரண்டு ஆண்களும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் எச்.ஐ.வி சிகிச்சைப் பிரிவு 2003ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து கடந்த 2022 டிசம்பர் வரை 30 பேர் தொற்றாளர்களாக

06

## ஐ.தே.க யாப்பில் திருத்தம்; அடுத்த மாதம் மேற்கொள்ள நடவடிக்கை

### கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன எம்.பி. தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டுக்கு பலமான தலைமைத்துவமொன்றை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பில் எதிர்வரும் ஜூலை மாதத்தில் மாற்றங்களை ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதம் கட்சியின் மாநாடு நடைபெறவுள்ள நிலையில் அதன்போது, கட்சியின் யாப்பில் மாற்றங்களைக் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பில் மாற்றங்களைக் கொண்டு வந்ததன் பின்னர் நாட்டில் அரசியல் அமைப்பிலும் மாற்றங்களை கொண்டுவரவேண்டியுள்ளதாக தெரிவித்துள்ள அவர், வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமானால் பலமான கட்சி யாப்பு மட்டுமன்றி பலமான அரசியலமைப்பும் அவசியமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

1987 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின்

06


## Sincerity & Ethical Work Practices are the Core of Asia Asset Finance

Asia Asset Finance PLC, a public quoted finance company is a subsidiary of Muthoot Finance Ltd. Asia Asset Finance PLC is a Licensed financial institution regulated by the Central Bank of Sri Lanka and has been in the financial service industry for over 50 years.

We provide professional assistance to our customers by understanding their needs and putting them at the center of everything. Our expertise and experience is being provided in the fields of accepting public deposits, Providing finance leasing, hire purchase, gold loan and asset backed finance purchase for both individuals and corporates.

We have over the years built a strong loyalty base through our customer oriented service. To enhance this quality further and provide an excellent service we have incorporated the Finance Business Act Direction No.1 of 2018 Financial Customer Protection Framework and Good Governance. Hence, Asia Asset Finance PLC wishes to make our client aware of the following:

Client should not make a payment without a recepit.

வாடிக்கையாளர் பற்றுச்சீட்டு இன்றி கட்டணம் செலுத்துதலாகாது.

No payments should be made to any member of the company to obtain a loan or service from the Company

Client has the right to demand indentifi cation from the staff confirming his/her employment with the Company

The client has the right to demand any information regarding the client's facility

Client is advised to make all payments marked "Account Payee" addressed to the Company

Client is advised to refrain from doing any personal business with any staff of the Company

ASIA ASSET FINANCE PLC

Customer Safty is Our Priority
What to Know More About Us?
Call us now +94 777 999 922
Head Office +94 117 699 000

Asia Asset Finance PLC is licensed by Monetary Board of Central Bank of Sri Lanka under the Finance Business Act No. 42 of 2011. Incorporated date 1970- September 23. Eligble deposit liebilities are insured with the Sri Lanka Deposit Insurance scheme implemented by the Monetary Board for Compensation up to a maximum of Rs. 1,100,000 per depositor.


## தெஹிவளையில் ஒருவர் கொடூரமாக கொலை





கொழும்பின் புறநகர் பகுதியான தெஹிவளை பகுதியில் தனிப்பட்ட தகராறு காரணமாக நபர் ஒருவர் மிகவும் கொடூரமான முறையில் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார். தாக்குதலில் படுகாயமடைந்த நபர் களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளபோதிலும் குறித்த நபர்

06

## கொஸ்கொடவில் சிக்கிய போதைப் பொருட்கள்

### ஆறு கோடி என மதிப்பீடு; இருவர் கைது



கொஸ்கொட பிரதேசத்தில் ஆறு கோடி ரூபாய் பெறுமதியான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் (10) காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இந்த போதைப் பொருள் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த போதைப்பொருளுடன் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

போதைப் பொருளை வைத்திருந்த இளைஞர்கள் இருவரும் கொஸ்கொட பிரதேசத்தை

06

### அதியுயர் பாதுகாப்பு வலயமாக இருந்த பகுதி;

## KKS பகுதியில் காணி விடுவிப்பு; விரைவில் மக்களிடம் கையளிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மாங்கொல்லை வைரவர் ஆலயம் மற்றும் அதனை சூழவுள்ள சில பகுதிகள் 33 வருடங்களின் பின்னர் உரிய மக்களிடம் மீள கையளிக்கப்படவுள்ளது.

கடந்த 33 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயமாக J/ 233 கிராம சேவையாளர் பகுதியில் உள்ள மாங்கொல்லை வைரவர் ஆலயமும் அதனை சூழவுள்ள தனியார் காணிகளில் இருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர்.

அதேவேளை சொந்த நாட்டிலேயே அகதியாக இடம்பெயர்ந்து பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்துவந்த J/ 233 கிராம சேவையாளர் பகுதி மக்களுக்கு மூன்று தசாப்தங்களின் பின்னர் அவர்களது காணிகள் மீள கிடைக்கவுள்ளமை மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 187.20 | 198.68 |
| கனடியன் டொலர் | 210.97 | 223.72 |
| யூரோ | 304.19 | 321.09 |
| ஜப்பான் யென் | 2.0304 | 2.1406 |
| சிங்கப்பூர் டொலர் | 210.03 | 222.35 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 353.88 | 372.53 |
| சுவிஸ் பிராங்க் | 311.71 | 330.77 |
| அமெரிக்க டொலர் | 285.61 | 298.85 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 775.31 | கட்டார் ரியால் | 80.18 |
| குவைத் டினார் | 950.18 | சவூதி ரியால் | 77.93 |
| ஓமான் ரியால் | 759.21 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 79.58 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 29ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்கஃதா பிறை 22

### குறள் தரும் சிந்தனை



ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி

கள்ளருந்தி மயங்கிவிடும் தன் மகனை, அவன் குற்றங்களை மன்னிக்கக் கூடிய தாயே காணச் சகிக்கமாட்டாள் என்கின்றபோது, ஏனைய சான்றோர்கள் அவனை எப்படிச் சகித்துக் கொள்வார்கள்?

# இறக்குமதித் தடை நீக்கத்தினால் மக்களுக்குக் கிடைக்கும் நன்மை

இலங்கை 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் முகம்கொடுத்திருந்த பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்று வந்த நிலையில் தற்போது மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமைப் பதவியை ஏற்றது முதல் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களை விரிவான அடிப்படையில் முன்னெடுக்கலானார். அத்திட்டங்களின் பிரதிபலன்களை குறுகிய காலப்பகுதி முதல் மக்கள் அனுபவிக்க ஆரம்பித்தனர்.

அதன் பயனாக எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் முகம்கொடுத்து வந்த அசௌகரியங்கள் நீங்கியதோடு, இப்பொருட்களுக்கு அவ்வப்போது விலைக்குறைப்பும் செய்யப்படுகின்றன. அத்தோடு பொருளாதார நெருக்கடி தீவிர கட்டத்தை அடைந்திருந்த போது நாட்டில் நிலவிய அசௌகரியங்களும் நெருக்கடிகளும் நீங்கியுள்ளன.

இந்நிலையில் பொருளாதார நெருக்கடி காலத்தில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருந்த கட்டுப்பாடுகளில் தளர்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளிலும் கட்டம் கட்டமாகத் தளர்வுகளை ஏற்படுத்தவும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப 300 இற்கும் அதிகமான பண்டங்கள் மீதான இறக்குமதித் தடை நீக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த சனியன்று (10.06.2023) வெளியிடப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ள நிலையில் வெளிநாட்டு கையிருப்பு ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இந்த நிலையில் ஏற்கனவே இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள பண்டங்கள் மீதான தடையை நீக்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒரு தொகுதி பொருட்களுக்கு இறக்குமதி தடை நீக்கப்பட்டுள்ளது. தற்போது 300 இற்கும் மேற்பட்ட பொருட்களுக்கு இறக்குமதித் தடையை நீக்கி வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டு இருக்கிறது. இத்தடை நீக்கத்தின் கீழ் உணவுப் பொருட்கள், சுகாதார உபகரணங்கள், இலத்திரனியல் பொருட்கள், மின்சாதனப் பொருட்கள் என்பன அடங்கியுள்ளன.

அதாவது மீன் உணவுப்பொருட்கள், இறைச்சியிலான உணவு உற்பத்திகள், யோகட், வெண்ணெய், பால் மற்றும் இனிப்பிலான உணவுப் பொருட்கள் உள்ளடங்கலாகத் தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்படாத உணவுப் பொருட்கள் அல்லது தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட போதிலும் சந்தையில் காணப்படும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் இப்பொருட்களுக்கான இறக்குமதி தடை நீக்கப்பட்டு இருக்கின்றது.

உள்நாட்டு உற்பத்தியாளர்களையும் பாவனையாளர்களையும் பாதிக்காத வகையில் இத்தடை நீக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்நடவடிக்கையை இந்நாட்டு நுகர்வோர் பெரிதும் வரவேற்பர்.

மேலும் இந்த இறக்குமதி தடை நீக்கத்தில் குளியறை உபகரணங்கள், மலசலகூடப் பொருட்கள், கட்டட நிர்மாணிப்புத் துறையுடன் தொடர்புடைய பொருட்கள் மற்றும் மூலப்பொருட்கள், திரவத் தன்மையிலான மூலப்பொருட்கள், மூலத்திரவங்கள், நீர்சூடாக்கி, மைக்ரோன் உள்ளிட்ட மின்சாதானப் பொருட்கள் என்பனவும் அடங்கியுள்ளன.

இப்பொருட்கள் மீதான இறக்குமதி தடை நீக்கப்பட்டிருப்பதன் பயனாக இப்பொருட்களை எவ்வித பற்றாக்குறையும் இன்றி சந்தையில் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு நுகர்வோருக்கு கிடைக்கப் பெறும். அத்தோடு இப்பொருட்களுக்கு ஏற்கனவே விதிக்கப்பட்ட இறக்குமதித் தடையினால் அவற்றின் விலை சந்தையில் பெரிதும் அதிகரித்துக் காணப்படுகின்றது. தற்போதைய இறக்குமதி தடை நீக்கம் இப்பொருட்களுக்கு சந்தையில் விலைகள் குறைவடையவும் வழிவகுக்கும்.

தற்போது இறக்குமதித் தடை நீக்கம் செய்யப்பட்டிருக்கும் பெரும்பாலான பொருட்கள் கடந்த 2020 மார்ச் 10 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 1969ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடுகள்) சட்டத்தின் கீழ் இறக்குமதி தடை விதிக்கப்பட்டன. இந்நாட்டின் அந்நிய செலாவணி ஆடம்பரத் தேவைகளுக்காக வெளியில் செல்வதைத் தவிர்க்கும் வகையில் இத்தடை விதிக்கப்பட்டது.

தற்போது நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு ஸ்திரமடைந்துள்ளதைத் தொடர்ந்து இப்பொருட்களுக்கு இறக்குமதி தடை நீக்கப்பட்டிருக்கிறது. நாட்டினதும் மக்களினது நலன்களை முன்னிலைப்படுத்தி முன்னெடுக்கப்பட்டிருக்கும் இத்தடை நீக்கத்தின் பிரதிபலன்கள் மக்களைச் சென்றடைய வேண்டும். அதனை உறுதிப்படுத்திக் கொள்வதில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் பொருளாதார நெருக்கடிக்கு முன்னரான இயல்பு நிலையை நாட்டில் தோற்றுவிக்கக் கூடியதாக இருக்கும். அதுவே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# இந்தியப் பிரதமருக்கான ஆசனத்தில் தமிழர் ஒருவரை அமரச் செய்வோம்!


## தமிழகத்துக்கு வருகை தந்த அமித்ஷா திடசங்கற்பம்

இந்தியாவின் பிரதமராக ஒரு தமிழரையாவது எதிர்வரும் காலங்களில் கொண்டுவருவதற்கு உறுதி பூணுவோம் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டுக்கு வருகை தந்த அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு பா.ஜ.க தயாராகி வருகிறது. அடுத்த ஆண்டு தான் தேர்தல் நடைபெறவிருக்கிறது. ஆனபோதிலும் அதற்கான பணிகள் இப்போதே தொடங்கிவிட்டன. சென்னைக்கு நேற்றுமுன்தினம் இரவு அமித்ஷா வந்து சேர்ந்தார்.

நேற்று கோவிலம்பாக்கத்தில் தென் சென்னை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட பா.ஜ.க நிர்வாகிகளை அமித்ஷா சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில் "தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் பா.ஜ.க வெற்றிபெற வேண்டும். நாடாளுமன்றத் தேர்தலுக்காக தென்சென்னையில் சாவடி அமைக்கும் பணிகள் 60 சதவீதம் நடந்து முடிந்துவிட்டன. எதிர்வரும் காலத்தில் ஒரு தமிழனையாவது பிரதமராக்க வேண்டும்.

இருமுறை பிரதமர் வேட்பாளரை இழந்ததற்கு தி.மு.கதான் காரணம். எனவே தமிழரை பிரதமராக்க உறுதியெடுப்போம். எதிர்வரும் காலத்தில் பிரதமர் ஆசனத்தில் தமிழர் ஒருவரை அமர வைப்போம். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் 25 தொகுதிகளில் வெற்றி பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது" என்றார்.



## தமிழர் ஒருவர் பிரதமராகும் வாய்ப்பை தமிழகம் இருதடவை இழந்ததற்கு தி.மு.கவே காரணம்!

"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 300 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சி அமையும். தமிழகத்திற்கு பாஜக வெளிச்சம் தரும். தமிழர் பிரதமராகும் வாய்ப்பை தி.மு.க இரு முறை இழந்துவிட்டது" என அமித்ஷா கடுமையாக விமர்சித்தார்.

தமிழர் பிரதமராகும் வாய்ப்பை தி.மு.க இரு முறை இழந்துவிட்டதாக அமித்ஷா சொல்லும் நிலையில் அந்த இருவர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. பிரதமர் பதவிக்கான வாய்ப்பில் காமராஜர், மூப்பனார் ஆகியோரின் பெயர்கள் இருந்தன. இதில் காமராஜர் காங்கிரஸ் கட்சியில் செல்வாக்கு மிக்க தலைவராக இருந்தார். அப்போது அவர் பிரதமராகும் வாய்ப்பு வந்தது. ஆனால் அவர் அதை வேண்டாம் என சொல்லிவிட்டு இந்திரா காந்தியை பிரதமராக்குமாறு கூறிவிட்டார். அதனால் தான் காமராஜரை 'கிங் மேக்கர்' என அழைத்தனர்.

அது போல் 1990 களில் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து வந்த மூப்பனார் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைத் தொடங்கினார். அப்போது தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி மகத்தான வெற்றியைப் பெற்றது. லோக்சபா தேர்தல்களிலும் கூட்டணி கட்சிகள் கை ஓங்கிய காலம். அப்போது தி.மு.க ஆதரித்தால் மூப்பனார் பிரதமராவார் எனப் பேசப்பட்டது. ஆனால் அந்த வாய்ப்புக்கு அவருக்கு ஏனோ கிடைக்காமல் போய்விட்டது. எனவே இவர்கள் இருவரை வைத்துதான் அமித்ஷா பேசியிருக்கக் கூடும் என அரசியல் பார்வையாளர்கள் தெரிவித்தார்கள்.

# ஒரே பிரசவத்தில் அதிக குழந்தைகளைப் பிரசவிக்கும் தாய்மாருக்கு தியாகி அறக்கொடை நிதியம் நிதியுதவி

## இனமத பேதமின்றி சிங்கள, தமிழ், முஸ்லிம் குடும்பங்களுக்கு ஒரு இலட்ச ரூபா வழங்கும் 'சமூக ஜோதி' வாமதேவன் தியாகேந்திரனுக்கு குவியும் பாராட்டுகள்

ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகளைப் பிரசவித்துள்ள (மூன்று ஆண்கள், ஒரு பெண்) குருநாகல் மாவட்டத்தின் தோராய, அட்டமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய துஷாணி லசங்கார என்ற இளம்தாய்க்கு இன்றைய பெருளாதார நெருக்கடிமிக்க சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு குழந்தைகளுக்கான பராமரிப்பு நிதியுதவி தியாகி அறக்கொடை நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மை இனப் பெண் ஒருவருக்கு தமிழ் இனத்தைச் சேர்ந்த சமூக நல ஆர்வலரால் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

இப்பெண் நான்கு குழந்தைகளை கடந்த மாதம் பேராதனை போதனா வைத்தியசாலையில் பிரசவித்துள்ளார். இப்பெண்ணின் குடும்பத்தின் நிலைமை குறித்து ஸ்ரீ லங்கா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம்.பாரிஸ் தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவரும் சமூகச்செயற்பாட்டாளருமான 'சமூக ஜோதி' வாமதேவன் தியாகேந்திரன் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார்.

ஊடகவியலாளர் பாரிஸ் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க முதற்கட்டமாக ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி இக்குழந்தைகளின் பராமரிப்புக்காக வழங்கப்பட்டுள்ளது. தியாகி அறக்கொடை நிதியத்தின் இணைப்பாளரும் ஸ்ரீ லங்கா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம். பாரிஸ் மூலம் இந்நிதியானது குறித்த தம்பதியினரின் இல்லத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.



அங்கு கருத்துத் தெரிவித்த ஊடகவியலாளர் எம்.ரீ.எம்.பாரிஸ்'இன, மத வேறுபாடுகளைக் கடந்து நாமனைவரும் மனிதர்கள் என்ற அடிப்படையில் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட தேவையுடைய மக்கள் தன்னிடம் கேட்காமலேயே அவர்களின் இல்லம் தேடிச்சென்று உதவும் தாராள உள்ளம் கொண்டவராக தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் திகழ்கின்றார். அவர் இனஐக்கியத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு" எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, நான்கு குழந்தைகளைப் பிரசவித்துள்ள துஷாணி லசங்கார என்ற தாய் கருத்துத் தெரிவிக்கும் போது, 'இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் ஐயா எனது குழந்தைகளின் பராமரிப்புக்காக உதவ முன்வந்தமை எனக்கு பெருமகிழ்ச்சியளிக்கிறது.



இந்த நாட்டில் மனிதாபிமானமிக்க இலங்கையர்கள் வாழ்கிறார்கள் என்பதற்கு இது நல்லதொரு முன்னுதாரணமாகும். இச்சந்தர்ப்பத்தில் எனக்கு உதவிய அந்த நல்லுள்ளதிற்கும் இவ்வுதவியை எனது காலடிக்கு கொண்டு சேர்த்த ஊடகவியலாளர் எம்.ரீ.எம்.பாரிஸ் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

இது இவ்வாறிருக்க, இதேபோன்று ஏற்கனவே நான்கு குழந்தைகளைப் பிரசவித்துள்ள புத்தளத்தைச் சேர்ந்த முஸ்லிம் தாய் ஒருவருக்கும் மற்றும் மூன்று குழந்தைகளைப் பிரசவித்துள்ளதுள்ள ஹற்றன் மஸ்கெலியா புரன்வீன் ராணி தோட்டதைச் சேர்ந்த தமிழ்த்தாய்க்கும் குழந்தை பராமரிப்பு உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான மனிதாபிமான வேலைத் திட்டங்களைத் தொடர்ந்தும் தியாகி அறக்கொடை நிதியம் வழங்குவதற்கு தயாராக விருப்பதாக அதன் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.அவரது உதவிகளுக்காக பாராட்டுகள் குவிந்து வருகின்றன.





# சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கைக்கான உடனடி ஆதரவை வழங்கிய நாடு இந்தியா!

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் 2.9 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்க தயாராகவுள்ளது. இந்த உதவிக்கு ஆதரவளிக்கும் நடவடிக்கைகளை இந்தியா ஏற்கனவே வழங்கியிருந்தது. அமெரிக்கா போன்ற பல நாடுகளும் இலங்கைக்கு ஆதரவளித்திருந்தன. இக்கடன் திட்டத்துக்கு ஆதரவு வழங்க சீனா முன்வந்துள்ள போதிலும், சீனாவின் ஆதரவு போதுமானதாக இல்லை என்றே பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி பெறுவதாயின் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். அதாவது சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கையை பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனை பெற்றுக்கொள்வதற்கான அனைத்துவித உதவிகளையும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் வழங்கியுள்ளன. சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கும் நம்பகரமான உத்தரவாதத்தை இந்தியா ஏற்கனவே வழங்கியுள்ளது. எனினும், சீனா இதுவரை வழங்கிய உத்தரவாதம் போதுமானதாக இல்லை எனவும், சீனாவிடமிருந்து நம்பகமான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் எனவும் சர்வதேச பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கையை வென்றெடுக்கும் வகையிலான முழுமையான உத்தரவாதத்தை சீனா வழங்க வேண்டியது அவசியம். ஏனெனில் இலங்கைக்கு கடந்த காலத்தில் கடன் வழங்கிய நாடுகளில் முக்கியமான நாடு சீனா ஆகும். அதனையடுத்து இந்தியாவையும் குறிப்பிட முடியும்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்கு கடன் வழங்கப்பட வேண்டுமாயின், கடன் வழங்கிய நாடுகளின் இணக்கம் அவசியமாகும். கடன் மறுசீரமைப்பிற்காக இந்த இரு நாடுகளின் இணக்கத்தை பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் கடந்த காலங்களில் பாரிய முயற்சிகளை முன்னெடுத்திருந்தது.




இதன் பிரதிபலனாக கடன் மறுசீரமைப்பிற்கு இந்தியா தாமதமின்றி இணக்கம் தெரிவித்திருந்தது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கான இணக்க சான்றிதழை சர்வதேச நாணய நிதியத்திடம் இந்தியா கையளித்திருந்தது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான சான்றிதழை, இந்தியா சர்வதேச நாணய நிதியத்திற்குக் காலதாமதமின்றி அனுப்பியுள்ளதாகவும், கடன் வழங்கிய ஏனைய நாடுகளும் அவ்வாறே செய்வார்கள் என எதிர்பார்ப்பதாகவும் இந்திய தரப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## கடன் மறுசீரமைப்புக்கு சீனாவிடமிருந்து ஆதரவு உத்தரவாதம் கிடைப்பதில் தாமதம்!

இந்தியாவின் இணக்கப்பாடு கிடைக்கப் பெற்றதை அடுத்து சில காலத்துக்குப் பின்னர் சீனாவும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பிற்கு இணக்கம் தெரிவித்திருந்தது. எனினும், சீனாவினால் வழங்கப்பட்ட இந்த இணக்கமானது, சர்வதேச நாணய நிதியத்திற்கு போதுமானது அல்லவென அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் கடன் வழங்கும் கொள்கையைப் பொறுத்தவரையில், கடன் மறுசீரமைப்பு என்ற திட்டம் அந்நாட்டிடம் கிடையாது. சீனா எந்தவொரு நாட்டிற்கும் அவ்வாறு செய்தது கிடையாது.

சீனாவின் கடன் திட்டமானது, நீண்டகால இலக்குகளைக் கொண்ட கடனாக இருக்குமே தவிர, கடன் மறுசீரமைப்புக்கு அந்நாடு செல்லப் போவதில்லை.

இலங்கை சர்வதேசத்திடமிருந்து வாங்கிய கடனில் 55 வீதம் சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் ஆகும். சீனா, இலங்கை உட்பட பல தீவு நாடுகளுக்கு கடனுதவிகளை வழங்கியுள்ளது. துறைமுகங்கள், விமான நிலையங்கள், வர்த்தக மையங்கள் போன்ற திட்டங்களை மையமாகக் கொண்ட திட்டங்களுக்கே சீனா கடன் கொடுத்து வருகின்றது.

இலங்கைக்கு கடன் மறுசீரமைப்புக்குக்கு உடன்படும் போது, இதனை உதாரணமாக வைத்துக்கொண்டு, ஏனைய நெருக்கடியிலுள்ள நாடுகளும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கோரிக்கை விடுப்பதற்கு இடமுண்டு. அதனை சீனா விரும்பப் போவதில்லை.

ஆனாலும் சீனா கடன் மறுசீமைப்புக்கு ஆரம்பத்தில் ஆதரவு தெரிவிக்காதிருந்த நிலையில், பின்னர் இலங்கைக்கு ஆதரவு வழங்கியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனை பெற்றுக்கொள்வதற்கு இந்தியாவின் ஆதரவு முதலில் கிடைத்த பின்னரே, சீனா தனது அறிவிப்பை வெளியிட்டது. கடன் மறுசீரமைப்பில் கூட சுயநலன் தான் இருக்கின்றது.

இலங்கைக்கு கூடுதலாக உதவிகளை செய்வது போன்று, அதிகளவிலான கடனை சீனா கடந்த காலத்தில் வழங்கியுள்ளது.இலங்கைக்கு பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு இதுவும் முக்கிய காரணம் ஆகும்.

# ஆனி உத்திரம்



ஆனி மாதம் ஓர் அபூர்வமான மாதமாகும். சூரியன் மிதுனத்தில் சஞ்சரிக்கும் மாதம் இது. இம்மாதத்தில் பிறந்தவர்கள், பிறர் ஆச்சரியப்படும் அளவுக்கு புகழ் பெற்றவர்களாக விளங்குவர். காரணம் அந்த மாதத்தில் தான் தெய்வ தரிசனம் நமக்கு கிடைக்கிறது. சிவபெருமானுக்குரிய இரண்டு தரிசனங்களில் முதல் தரிசனம் ஆனி மாதத்திலும், இரண்டாவது தரிசனம் மார்கழி மாதத்திலும் நடைபெறும். ஆனி மாதத்தில் உத்திர நட்சத்திர மன்று நடைபெறும் நடராஜர் அபிஷேகம் சிறப்பு வாய்ந்ததாகும். அன்றைய தினம் ஆடல் அரசனைப் பாடிப்பணிந்து வழிபட்டால், கோடி கோடியாய் நன்மை கிடைக்கும். குடும்ப முன்னேற்றமும் அதிகரிக்கும். பொதுவாக நடனம் மற்றும் கலைத் துறையில் சிறந்து விளங்க நடராஜப் பெருமானை தரிசனம் செய்ய வேண்டும்.

ஆனிக்கு அடுத்து வரக்கூடிய மாதம் ஆடி. அந்த மாதத்தில் நாம் ஓடி ஆடி சம்பாதித்து வாழ்க்கையில் சிறக்க, ஆனி மாத நடராஜர் தரிசனம் வழிகாட்டுகிறது. மிதுன ராசி, நவக்கிரகங்களில் புதனுக்குரிய வீடாகும். புதன் கல்விக்குரிய கிரகமாகக் கருதப்படுகிறது. எனவே இம்மாதத்தில் நடைபெறும் நடராஜர் தரிசனம் போன்ற விழாக்களில் கலந்து கொண்டால் படிப்பில் முதன்மை பெற வழிவகுக்கும். மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.

அந்த நம்பிக்கையை முழுமையாக நடராஜர் மீது வைக்க வேண்டிய மாதம், இந்த ஆனி மாதம் ஆகும். நடராஜரை ‘தில்லைக் கூத்தன்’ என்றும், ‘ஆடலரசன்’ என்றும், ‘கூத்தபிரான்’ என்றும் அழைப்பது வழக்கம். கலைகளைக் கற்று காசினியெங்கும் புகழ்பெற வேண்டுமென்று விரும்பும் மாந்தர்கள், நடராஜப் பெருமானை முழுமையாக வழிபட வேண்டும். அதற்கு உகந்த நாளாக ஆனி உத்திரத்தன்று ஆனி உத்திர தரிசனமும், நடராஜர் அபிஷேகமும் நடைபெறுகின்ற நாளாகும். அன்றைய தினம் விரதம் இருந்து இல்லத்து பூஜையறையில் நடராஜர் படம் வைத்து பஞ்சமுக விளக்கேற்றி சிவபுராணம் பாடி சிந்தை மகிழ வழிபட்டால் நலம் யாவும் தருவார் நடராஜப் பெருமான்.




## மானுடவியல்

## சாக்கிய நாயனார்



119

இங்ஙனம் சிவத்துக்குத் திருமேனி மூன்றுளதாதல், "அருவும் உருவும் அறிஞர்க்கறிவாம் உருவும் உடையானுளன்" எனும் திருவருட்பயன் கொண்டும் "உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவிறந்த அருமேனியதுவுங் கண்டோம் அருவுருவான போது திருமேனி உபயம் பெற்றோம் செப்பிய மூன்றும் நந்தங் கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவுகாணே" எனும் சிவஞான சித்தியார் கொண்டும் அறியப்படும். இம்மூன்றனுள் நடுநிலையதாகிய சிவலிங்கத் திருமேனியைப் பூசித்தல் மூலம் அதுவே யிடமாகச் சிவபரம் பொருள் தனது உருவத் திருமேனி காட்டி அன்பர்களை ஆட்கொண்டருளிய வரலாறுகள், மார்க்கண்டேயர் வரலாறு போல்வன வாகப் பலவுண்மையானும் ஞான விளக்கங் கைவந்து அந்தரங்கத்தில் அருவத்திருமேனி தரிசனம் பெறுதற்கும் அருவுருவாகிய இச்சிவலிங்கத் திருமேனி வழிபாடே சாதனமாதலாலும் மூவகைத் திருமேனிகளுள்ளும் இத்திருமேனியே வழிபாட்டுக்கும் உபாசனைக்குஞ் சிறந்ததாயிற்றென்பர். ஆதியிற் சிதம்பரத்தில் வியாக்கிரபாதரும் பதஞ்சலி முனிவரும் நடராஜத் திருமேனி தரிசிக்கப்பெற்றது அங்குள்ள மூலட்டானேஸ்வரரான சிவலிங்கத் திருமேனியைப் பூசித்ததன் பெறுபேறாதல் அறியப்படும். இந்தச் சாக்கியநாயனார்க்கும் சிவன் உருவத் திருமேனி காட்டி யாட்கொண்டது அவர் கல்லிட்டுப் பூசித்த சிவலிங்கத்தி னிடமாகவேயாம். அது அவர் புராணத்தில், கொண்டதொரு கல்லெடுத்துக் குறிகூடும் வகைஎறிய உண்டிவினை ஒழித்தஞ்சி ஓடிவரும் வேட்கையொடும் கண்டருளுங் கண்ணுதலார் கருணைபொழி திருநோக்கால் தொண்டரெதிர் நெடுவிசும்பில் துணைவியொடும் தோன்றினார்" என வரும். அன்றியும், பிரமவிஷ்ணுக்கள் சிவனது அடியும் முடியுந் தேடியலுத்த நிலையில் சிவன் அவர்களுக்கு உண்மையுணர்த்துமாறு இலிங்கத் திருமேனியை முதலில் தோற்றி அவர்கள் அதைப்பூசிக்கவைத்துப் பின் அஃதிடமாகத் தமது உருவத்திருமேனியைத் (தொடரும்)



கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.





சிலாபம் திமிலை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் பொங்கல், மஞ்சள் நீராடல் , கரகம் நிகழ்வு (8) இடம்பெற்ற போது பக்தர்கள் பலர் கலந்துகொண்டனர். உடப்பு குறூப் நிருபர்

## "யுகரிஷியின் ஆன்மீக சிந்தனைகள் - 41



சமுதாயத்திற்கு நாம் புறம்பாக நடந்து கொள்ளக் கூடாது. அது நன்றி கெட்டத்தனமாகி விடும். இப்பூவுலக மற்றும் பரலோக வாழ்வு. உடல் மற்றும் ஆத்மா சம்பந்தப்பட்ட வாழ்வு ஆகியவைகளின் மங்கலமயம் உண்டாக நாம் பிறர் நலம் பேணுதல் வேண்டும். பிறருக்காக வாழ வேண்டும்.இவைகளை புறக்கணிப்பது என்பது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் சீரழித்துவிடும். இந்த தத்துவத்தை அனுபவப் பூர்வமாக உணர்ந்து கொண்ட வியாச முனிவர் பின் வருமாறு கூறுகிறார்.

எவன் ஒருவன், எப்போதும் பிறருக்காக வாழ்கிறானோ. பிறருடைய நலத்தையே விரும்புகிறானோ, அவன் பிறப்பின் பயனை எய்துவான். பரோபகாரம் பிறருக்கு உபகாரம் செய்பவனுக்கு பயம் இருக்காது. அவன் இம்மையிலும் மறுமையிலும் சிறப்பாக போற்றப்படுவான்.

மனவலிமை மிகும் போது தான் ஒருவன் தன் துணிவை, தன் உணர்வாற்றலை, திறமையை, கலை நுணுக்கத்தை காட்டிட முடியும். வெறும் புத்தி பலத்தால் மட்டும் இது சாத்தியமாகாது. இதயம் மற்றும் இதயத்தின் உணர்ச்சி வெளிபாடு மனிதனுக்கு மட்டுமல்லாமல் மற்ற ஜீவராசிகளுக்கும் உண்டு. மனவலிமையை போல். வாழ்வில் வெற்றிக் கொள்ள சில நற்பண்புகள் உள்ளன.

அவையாவன அன்பு. நன்னடத்தை, நற்குணம், சிரத்தை, பக்தி, ஈடுபாடு, உண்மை முதலியன. படித்தவன் நற்பண்புகள் கொண்ட இதயமில்லாதவனாக இருந்தால் அவனுக்கு செல்வம், வெற்றி. புகழ் என பல இருந்தாலும் வாழ்வில் அவன் துன்பப்பட்டுக் கொண்டு தானிருப்பான். அதே வேளையில் பிறரிடம் அன்பு பாராட்டுபவன். சகோதர பாசம், தாய்பாசம், புத்திர பாசம் நம்பிக்கை, உண்மை நட்பு ஆகிய நற்பண்புகளுடன் விளங்குவான்.

ஒருவன் படிக்காதவனாக இருந்த போதும், அவன் ஏழையாக இருந்தாலும், அவனது வாழ்வில் சுகம் நிறைந்து காணப்படும். படிக்காத பலருடைய வாழ்க்கை, குடும்ப ரீதியாகவும், தாம்பத்ய ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும் இன் சுவை நிறைந்து காணப்படுகிறது. அறிவு. புத்தி பலம் என்றால் அன்பு, கருணை. நற்பண்பு, பக்தி, ஈடுபாடு நட்பு, நம்பிக்கை, உண்மை இவை யாவும் மனோபலமாகும்.

புத்தி பலத்தை விட மனோபலம் சிறந்தது. இவையெல்லாவற்றையும் ஒன்று படுத்தி அதற்கு வித்யா என சான்றோர்கள் பெயரிட்டுள்ளனர்.

தற்காலத்து கல்விமுறை இந்த 'வித்யாவில் அடங்காது. வாழ்வில் முன்னேற வித்யா அவசியம். நாம் அடைந்த ஞானம். புத்தி மற்றும் ஆத்மார்த்த வழியில் அமைந்திட வேண்டும். அறிவும், செயலும் ஒன்றிணைந்தால் வெற்றி நமதே.

## வியாழக்கிழமை வரும் தேய்பிறை அஷ்டமியும் விரத பலன்களும்

ஆடி தேய்பிறை அஷ்டமி தினத்தில் விரதம் இருந்து நாம் மேற்கொள்ள வேண்டிய பைரவர் வழிபாடு முறையையும், அதனால் நமக்கு ஏற்படும் நன்மைகள் என்ன என்பதையும் அறிந்து கொள்ளலாம்.ஒவ்வொரு மாதமும் வளர்பிறை மற்றும் தேய்பிறை காலங்களில் அஷ்டமி தினங்கள் வருகின்றன.இதில் தேய்பிறை அஷ்டமி தினம் சிவபெருமானின் ஒரு வடிவமாக தோன்றியவர் ஆன ஸ்ரீ பைரவரின் வழிபாட்டுக்குரிய ஒரு சிறந்த தினமாக இருக்கிறது.

அதிலும் ஒவ்வொரு தினமும் இறைவழிபாட்டிற்குரிய தினமாக இருக்கும் ஆடி மாதத்தில் வியாழக்கிழமையில் தேய்பிறை அஷ்டமி வருவது மிகவும் விஷேச பலன்களை பக்தர்களுக்கு தரவல்ல ஒரு அற்புத தினமாக இருக்கிறது. வியாழக்கிழமை தேய்பிறை அஷ்டமி அன்று ராகு கால நேரமான 1.30 மணியிலிருந்து 3.00 மணிக்குள்ளாக பைரவர் கோயில் அல்லது சிவன் கோயிலில் இருக்கின்ற சந்நிதிக்கு சென்று பைரவருக்கு சிவப்பு நிற மலர்களை சமர்ப்பித்து, செவ்வாழை நைவேத்தியம் செய்து, தேங்காயை இரண்டாக உடைத்து அதில் நெய் அல்லது விளக்கெண்ணெய் ஊற்றி, திரி போட்டு தீபம் ஏற்றி பைரவருக்குரிய மந்திரங்கள் துதித்து பைரவரை வணங்க வேண்டும்.

மேலும் இச்சமயத்தில் பைரவர் காயத்ரி மந்திரத்தை 108 அல்லது 1008 எண்ணிக்கையில் துதிப்பது நல்லது.

மேற்கண்ட முறையில் ஆடி மாத தேய்பிறை அஷ்டமியன்று விரதம் இருந்து பைரவரை வழிபடுபவர்களுக்கு சிறிது காலத்திலேயே எப்படிப்பட்ட பணக்கஷ்டங்களும் நீங்கும். தொழில், வியாபாரங்களில் நேரடி மற்றும் மறைமுக எதிரிகளால் தொல்லைகள் ஏற்படாமல் காக்கும்.

பொருட்கள் களவு போகாமல் பாதுகாக்கும். வருமானம் பெருகும். பெண்களுக்கு ஏற்படும் உடல் மற்றும் மன ரீதியான பிரச்சனைகள் அனைத்தும் தீரும். துஷ்ட சக்திகளினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து விடுபடுவார்கள்.

## கதிர்காமத்திற்கான காட்டுப்பாதை இன்று திறக்கப்படும்!



வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காம ஆடிவேல் விழாவிற்குச் செல்லும் பாத யாத்திரிகர்களுக்கான காட்டுப் பாதை இன்று (12) திங்கட்கிழமை காலை சம்பிரதாய பூர்வமாக திறக்கப்படும். மீண்டும் அது ஜுன் 25 ஆம் திகதி மூடப்படும். கதிர்காமம் முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜுன் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜுலை மாதம் 4 திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே.கடந்த வருடம் 28820 பேர் காட்டுப் பாதையில் பயணித்திருந்தனர். இம்முறை 45 ஆயிரம் பேர் அளவில் பயணிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, உகந்தை மலை முருகனாலயத்தின் வருடாந்த ஆடிவேல் விழா உற்சவம் ஜுலை 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவிருப்பது தெரிந்ததே. ( காரைதீவு குறூப் நிருபர் சகா)

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19668) ஒற்றைத் துணி அணிந்து சாப்பிடலாமா?**
*சாப்பிடக்கூடாது.*

**19669) ஆண்கள் பல நேரங்களில் வீட்டில் இருக்கும்போது மேலாடை அணிவதில்லை. அப்படியென்றால் என்ன செய்யலாம்?**
*சாப்பிடும் நேரங்களில் ஒரு துண்டால் உடலை மறைத்துக் கொண்டாவது உணவருந்த வேண்டும்.*

**19670) சாப்பிடும் முன்பாக கை கழுவினால் மட்டும்போதுமா?** *போதாது.*

**19671) சாப்பிடும் முன்பாக வேறு என்ன செய்ய வேண்டும்?**
*கால்களையும் கழுவ வேண்டும்.*

**19672) இவ்வாறு செய்வது ஏன்?**
*இதனால் சாப்பிடும் நேரத்தில் சாப்பாட்டில் ஏதும் குறை என்றாலும் கூட, ‘சுர்’ரென கோபம் ஏறாது.*

**19673) மேலும் கால் கழுவி விட்டுச் சாப்பிடுவதால் என்ன நன்மை?** *சாப்பிடுபவர் தீர்க்காயுளுடன் இருப்பார்.*

**19674) கையைத் தரையில் ஊன்றியபடி சாப்பிடலாமா?**
*கூடாது. இதனை தவிர்க்க வேண்டும்.*

**19675) இவ்வாறு செய்வது ஏன்?** *இதனால் சாப்பிடும் பொருளில் உள்ள சத்து வீணாகாமல் உடலில் சேரும்.*

**19676) சாப்பிடும் போது வயிறு முட்ட சாப்பிடலாமா?** *கூடாது பாதி சாப்பாடு, கால் பங்கு தண்ணீர் என்பதே சரியான உணவு விகிதம். மீதியைக் காற்றுக்காக விட வேண்டும்.*

**19677) வயிறு புடைக்க சாப்பிட்டால் என்ன நடக்கும்?**
*நெஞ்சுவலி ஏற்படக்கூடும்.*

**19678) சாப்பிட்டபின் குளிக்கலாமா?** *கூடாது.*

**19679) கிழக்கு நோக்கி அமா்ந்து சாப்பிட்டால் என்ன நன்மை?** *ஆயுள் விருத்தியாகும்,*

**19680) மேற்கு நோக்கி அமர்ந்து சாப்பிட்டால் என்ன நன்மை?**
*செல்வம் அபிவிருத்தியாகும்,*

**19681) தெற்கு நோக்கி அமர்ந்து சாப்பிட்டால் என்ன நன்மை?** *புகழும் கிடைக்கும்.*

**19682) பொதுவாக வடக்கு நோக்கி அமர்ந்து சாப்பிடலாமா?**
*சாப்பிடக்கூடாது என்பார்கள்.*

**19683) ஆனால் வடக்கு நோக்கி அமா்ந்து சாப்பிடுபவர் எப்படிப்பட்டவர்?** *நியாயத்துக்காக போராடுபவராம்.*








கொழும்பு 13, ஸ்ரீ கதிரேசன் வீதி, ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் பூஜைகள் சிவஸ்ரீ சர்வேஸ்வர ஸ்ரீ காந்தன் குருக்கள், சிவஸ்ரீ வெ.ஜெபந்தன், சிவஸ்ரீ சிநேசன் குருக்கள் தலைமையில் நடைபெற்று ரதம் வீதி உலா வந்தது.
படப்பிடிப்பு .மொஹமாட் நசார், கொழும்பு வடக்கு நிருபர்

# டி.எம். சௌந்தராஜனின் 101வது பிறந்த நாள் விழா

## மணிக்குருக்கள் – கலா தம்பதிகளின் 40வது ஆண்டு திருமண நாள் விழா

திரைப்பட பாடகர் இசைமேதை இசை சக்கரவர்த்தி கலைமாமணி டாக்டர் டி.எம். சௌந்தராஜனின் 101 நூற்றி ஓராவது (101) பிறந்த நாள் விழாவில் டாக்டர் சாம்பசிவ மணிக்குருக்கள் கலா தம்பதிகளின் 40வது ஆண்டு திருமண நாள் விழா எதிர்வரும் 25ஆம் திகதி மாலை 6 மணி முதல் இரவு 9.30 மணிவரை சென்னை 80 அடி ரோடு, சாலிக்கிராமம், விருகம்பாக்கம், கோல்டன் பாரடைஸ் மண்டபத்தில் நடைபெறும்.







கலியுகக் கர்ணன் கொடை வள்ளல் சிவாஜி ரவி முன்னிலையில் நடைபெறும் இவ்விழாவில் நடிகர்கள் பலரும் பாடகர்கள் பலரும் பாராட்டப்படவுள்ளார்கள். இந்நிகழ்வில், சர்வதேச இந்து மத குருபீடாதிபதி கலாநிதி சிவஶ்ரீ ஐயப்பதாஸ சாம்சிவ சிவாச்சார்யார் ஆசியுரை வழங்க இசையரசி எல். ஆர். ஈஸ்வரி தலைமை தாங்குவார். திரைப்பட பாடகர் கலைமாமணி டீ.எல். மஹராஜனும் நடிகரும் தயாரிப்பாளருமான சத்ய நாராயணன் இதில் பிரதம விருந்தினராக கலந்கு கொள்வார்கள்.

# அமெரிக்காவுக்கான சீன ஏற்றுமதியில் பின்னடைவு

கடந்த பத்து ஆண்டுகளில் முதல் தடவையாக சீனாவிடமிருந்து அமெரிக்கா இறக்குமதி செய்யும் விலை குறைந்த பொருட்களின் தொகை ஐம்பது சதவீதத்துக்கும் மேலாகக் குறைவடைந்துள்ளது.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு மோசமடைந்து வருவதால் பல சீனாவில் இயங்கும் உற்பத்தி நிறுவனங்கள் சீனாவை விட்டு வெளியேறி வேறு நாடுகளில் இயங்கத் தொடங்கியிருப்பது இதற்கான காரணமாக இருக்கலாம் எனக் கருதும் அமெரிக்க பொருளியல் ஆய்வாளர்கள், கடந்த பத்தாண்டுகளில் வியட்நாமின் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி மும்மடங்காக அதிகரித்திருப்பதை சுட்டிக்காட்டுகின்றனர். அமெரிக்காவுக்கான 'வெக்கும் கிளினர்' ஏற்றுமதியில் சீனாவை பின்தள்ளி தற்போது வியட்நாம் முன்னிலை வகிக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வருடமொன்றுக்கு ஆசிய நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் உற்பத்திப் பொருட்களில் சீன ஏற்றுமதி, 2013 இல் எழுபது சதவீதமாக இருந்தது. பத்தாண்டுகளில் இது தற்போது 50.7 சதவீதமாக குறைந்துள்ளது.

### தெஹிவளையில் ஒருவர்...

(03ஆம் பக்கத் தொடர்)

உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். தெஹிவளை, அவுபர்ன் சைட் பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

### வெளிநாட்டிலிருந்து வந்த... (03ஆம் பக்கத் தொடர்)

அடையாளம் காணப்பட்டிருந்தனர். அவர்களில் தீவிர தொற்றுடன் சிகிச்சைக்கு வந்தவர்கள் மற்றும் சீராக சிகிச்சை பெறாதவர்கள் என்ற அடிப்படையில் 7 ஆண்களும் 5 பெண்களுமாக மொத்தம் 12 பேர் உயிரிழந்துள்ளனர். ஏனையவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### ஐ.தே.க யாப்பில் திருத்தம்... (03ஆம் பக்கத் தொடர்)

யாப்பிற்கு முரணானதாக நாட்டின் அரசியல் அமைப்பு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், அதன் பிரதிபலனாக ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரம் இல்லாமற் போனதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### மாணிக்கக்கல்... (03ஆம் பக்கத் தொடர்)

கவலைக்கிடமாக இல்லை எனவும், துப்பாக்கியால் தாக்கப்பட்டதன் காரணமாக அவர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

### 3 சிறுமிகள் தப்பியோட்டம்... (03ஆம் பக்கத் தொடர்)

அந்த மூன்று சிறுமிகளும் நொச்சியாகம, தலாவ மற்றும் கலன்பிந்துனுவெவ பிரதேசங்களை வதிவிடமாகக் கொண்டவர்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

### எல்லை நிர்ணய குழுவின்... (03ஆம் பக்கத் தொடர்)

புதிய எல்லை நிர்ணயத்துக்கமைய அரசாங்கம் தேர்தலை நடத்த முயற்சிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் வினவியபோது ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### கொஸ்கொடவில் சிக்கிய... (03ஆம் பக்கத் தொடர்)

சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கொஸ்கொட பகுதியில் இருந்து இதுவரை கைப்பற்றப்பட்ட போதை பொருட்களில் அதிக பெறுமதியான போதைப்பொருள் இதுவாகும் எனவும் கொஸ்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### நாட்டில் டெங்கு....

மாதம் 9ஆம் திகதி வரை நாட்டில் 2 ஆயிரத்து 52 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்தனர். எனினும், இந்த வருடத்தின் நேற்று வரையான காலப்பகுதியில் பதிவாகிய டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 42 ஆயிரத்து 184 ஆகும். இதேவேளை, கடந்த 10 வருட காலப்பகுதியில், பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். நாட்டில், தற்போது வரையில் அதிக அவதானம் மிக்க 61 சுகாதார பரிசோதகர்கள் பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### அதிபர்கள் எதிர்நோக்கும்....

பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் கல்வியமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிபுணர்கள் குழுவுடனான பேச்சுவார்த்தையொன்று கல்விய மைச்சில் இடம் பெற்றுள்ளது.

அதன் போது அதிபர்கள் சேவையில் நீண்ட காலமாக நிலவும் முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. அந்த வகையில் சம்பள முரண்பாடு, ஆட்சேர்ப்பு முறைகளில் காணப்படும் குறைபாடுகள், பதவியுயர்வு மற்றும் இடமாற்றங்கள் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

### அடையாளம்...

நாட்களாக பல்வேறு விழிப்புணர்வு மற்றும் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டாலும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறன்ற நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில் இதுவரை 43 ஆயிரத்திற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் கடந்த ஐந்து மாதங்களில் 26 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

### வடக்கு, கிழக்கு...

பணிகளை துரிதமாக முன்னெடுக்குமாறு பாதுபாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரத்நாயக்கவின் ஆலோசனைக்கமைய இந்த அலுவலகம் ஸ்தாபிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தில் பிரிகேடியர் நிலை அதிகாரி தலைமையில் ஸ்தாபிக்கப் படவுள்ள இந்த காணி விடுவிப்பு அலுவலகமானது 6 மாதங்களுக்குள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மக்கள் காணி பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். மேலும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையிலும், பாரம்பரியமான நில உரிமையை கொண்டுள்ள மக்களுக்கு அநீதிகள் ஏற்படாத வகையிலும் காணிப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்குடன் குறித்த அலுவலகத்தை ஸ்தாபிக்குமாறு பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2009ஆம் ஆண்டில் 23,850.72 ஏக்கர் மக்களின் காணிகள் பாதுகாப்புப் படைகள் வசம் காணப்பட்டது. ஆனால், நடப்பு ஆண்டு ஆகுகையில் இந்த எண்ணிக்கையில் 20,755.52 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், 106 ஏக்கர் மக்கள் காணி கடந்த ஜனவரி மாதம் விடுவிக்கப்பட்டது. அத்துடன், 2989.80 ஏக்கர் மக்கள் காணி விடுவிப்பதற்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்து அவதானத்துக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அந்த காணிகள் விடுவிக்கப்படவுள்ளது.

### கட்டுநாயக்க விமான....

கட்டுப்பாட்டு கட்டமைப்பை அமைப்பதற்காக சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. அதன்படி, முதற்கட்டமாக பயணிகள் வெளியேறும் முனையத்தில், இரண்டு தானியங்கி குடிவரவு, குடியகல்வு முகாமை கட்டுப்பாட்டு கருமபீடங்கள் அமைக்கப்படவுள்ளன. எட்டு மாதங்களின் பின்னர், பயணிகள் வருகை முனையத்தில் இரண்டு கருமப்பீடங்கள் நிறுவப்படவுள்ளன.

இதற்கு தேவையான அடிப்படை வசதிகளை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் வழங்கவுள்ளதுடன், இதற்கான நிதியை வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனம் வழங்கவுள்ளது.

### எரிபொருள் விநியோகத்தில்....

எவ்வாறு விநியோகிக்கப்பட்டன என்பது தொடர்பிலும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், தற்போது நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் போதுமான எரிபொருள் இருப்புக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அத்துடன், நாளாந்த எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெற்று வருகின்றது. நாடளாவிய ரீதியில் உள்ள ஒவ்வொரு நிரப்பு நிலையங்களிலும் தட்டுப்பாடு இன்றி எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

### மத்திய அரசு பறித்த....

பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனுக்கும் இடையிலான சந்திப்பு பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பு தொடர்பில் விக்னேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதியுடன் தமிழ் கட்சிகள் சந்தித்து பேசிய நிலையில் நானும் குறித்த சந்திப்பில் கலந்து கொண்டேன்.

குறித்த சந்திப்பில் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் மத்திய அரசினால் பறிக்கப்பட்ட மாகாண அதிகாரங்களை மீள வழங்க வேண்டும் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தேன்.

குறித்த சந்திப்பில் தமிழ் கட்சிகளை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட நிலையில் தமிழரசு கட்சியினுடைய பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதிலும் பார்க்க ஏற்கனவே ஜனாதிபதி புதிய அரசியல் அமைப்பு தருவதாகவும் அதனை நடைமுறைப்படுத்துமாறும் கூறினார்.

ஆனால் ஜனாதிபதி, தமிழ் கட்சிகள் புதிய அரசியலமைப்பை தற்போது நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தவில்லை. 13ஐ நடைமுறைப்படுத்துமாறு கூறுகிறார்கள். 13ஐ நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆலோசனை வழங்க எங்கள் சார்பில் பிரதிநிதி ஒருவரை தாருங்கள் என்றார். தமிழரசு கட்சி சார்பில் எவரது பெயரும் வழங்கப்படவில்லை.

குறித்த சந்திப்பில் ஜனாதிபதி 13 ஆவது திருத்தம் தொடர்பில் துறை சார்ந்த அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுடன் பேசுமாறு வேண்டியதன் விளைவாக குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

### எமது பல்கலைக்கழகங்களின்....

அதன் ஊடாக வெளிநாட்டு மாணவர்களையும் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு ஈர்க்க முடியும் எனவும் அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் எனவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த (09) பிற்பகல் இடம்பெற்ற "CVCD Excellence Awards" நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

இந்த நாட்டில் கல்வி முறையில் உள்ள பிரச்சினைகளை விரைவில் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை விளக்கிய ஜனாதிபதி, அனைவரும் சரியான வயதில் கல்வியை நிறைவு செய்து முன்னேறிச் செல்லக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பல்கலைக்கழகக் கட்டமைப்பினுள் நவீன ஆராய்ச்சி கலாசாரத்தை நிறுவுவதற்கு வழங்கும் சிறப்பான தலைமைத்துவம் மற்றும் அர்ப்பணிப்புக்காக இலங்கையின் உபவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள் குழுவினால் பாராட்டப்பட்டார். இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

நான் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய காலம் இப்போது நினைவுக்கு வருகின்றது. அப்போது, சென்னையில் நடந்த லண்டன் உயர்தரப் பரீட்சையிலும் நான் சித்தி பெற வேண்டும் என்று என் தந்தை வலியுறுத்தினார். அதனால் நான் சென்னைக்குச் சென்று லண்டன் உயர்தரப் பரீட்சையையும் எழுதினேன்.

ஆனால், அதற்குள் நான் இலங்கையில் தோற்றிய உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளும் வெளியாகி பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றிருந்தேன். எனவே அந்த நாட்களில் இது ஒரு எளிய செயல்முறையாக இருந்தது. இப்போது போல் புள்ளிவழங்கும் முறை இருக்கவில்லை. நான்கு பாடங்களில் சித்தி பெற்ற அனைவரும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். பின்னர் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களும் அனுமதிக்கப்பட்டனர்.

அதேநேரம், நான் லண்டன் உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளையும் பெற்றிருந்தேன். அதனால் இலங்கையில் தங்குவதா அல்லது ஐக்கிய இராச்சியம் செல்வதா என்பதை நான் தீர்மானிக்க வேண்டியிருந்தது. ஆனால் நான் இலங்கையில் இருக்க முடிவு செய்தேன். எனது தாத்தாவுக்கு இருந்த தொடர்புகளின் அடிப்படையில், நான் பேராதனை பல்கலைக்கழகத்திற்குச் செல்ல வேண்டும் என்று எனது அம்மா வற்புறுத்தினார், ஆனால் சட்டக் கல்வியைத் தொடர கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு செல்ல வேண்டும் என்பதே எனது விருப்பமாக இருந்தது.

பேராசிரியர் லீயின் மரணத்திற்குப் பிறகு, அப்போதைய பீடாதிபதி மற்றும் சட்டத்துறைப் பேராசிரியராக இருந்த நடராஜா, ரோமன் டச்சு சட்டத்தில் அதிக நிபுணத்துவம் பெற்றிருந்தார். மேலும் எங்களுக்கு பல விரிவுரையாளர்கள் இருந்தனர். இளம் உதவி விரிவுரையாளராக ஜி.எல். பீரிஸ் அவர்களும் பணியாற்றினார். இலங்கையில் எனது பல்கலைக்கழகக் கல்வியை வெற்றிகரமாக நிறைவு செய்தேன். இலங்கையில் எனது கல்வி குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் என்றார்.

### பகிடிவதை...

புரண்டமையினால் முதலாம் ஆண்டில் கல்விகற்ற மாணவரான பசிந்து ஹர்சன சில்வா பாரிய பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளமை தொடர்பில் தாக்கல்செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மனு மீதான விசாரணையின் போதே உச்ச நீதிமன்றத்தினால் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகளான புவனேக அலுவிஹாரே, சிரான் குணவரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் மேற்படி மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்போது பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதை சம்பவங்கள் காரணமாக ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் நீதிமன்றம் அதன் கவனத்தை செலுத்தியுள்ளது.

அதற்கிணங்க பகிடிவதையானது பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாரிய அழுத்தங்களை பிரயோகித்துள்ளதாகவும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. அத்துடன் கடந்தகாலங்களில் இடம்பெற்றுள்ள பகிடிவதை சம்பவங்கள் மற்றும் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக விடயங்களை தேடுவது தொடர்பில் நீதிபதிகள் குழாமின் கவனம் செலுத்தப்பட்டது. அதேபோன்று, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் செயற்படும் 16 பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள் மற்றும் பொலிஸ் மா அதிபரும் இந்த அடிப்படை உரிமை மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடுமாறு நீதிபதிகள் குழாம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதேபோன்று பகிடிவதை சம்பவங்களை இல்லாதொழிப்பதற்கு தேவையான கட்டளைகளை வெளியிடுவதற்கு தேவையேற்படின் அது தொடர்பில் உயர்கல்வி அமைச்சர் அத்தியாவசியமான தரப்பாக உள்ள நிலையில் அந்த அமைச்சரும் இந்த மனுவில் பிரதிவாதியாக பெயரிடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலதிக விசாரணையை முன்னெடுப்பதற்காக மேற்படி வழக்கு விசாரணை எதிர்வரும் ஆகஸ்ட் 29 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

### புகையிரத சேவையை...

இவ்வாறு தெரிவித்துள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், போக்குவரத்துத் துறை தொடர்பில் கடந்த வருடங்களில நான் பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன். மாற்றங்கள் சிலவற்றை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அதற்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் ரயில்வே திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானத்தைவிட செலவு அதிகமாகும். அரசியல் கோட்பாடுகளின் படி நிறுவனங்களை முன்னெடுத்துச் செல்வது முடியாததாகும். தீர்க்கப்படவேண்டிய எந்தவொரு பிரச்சினையையும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையில் பேச்சுவர்த்தை நடத்தி தீர்வுபெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு நாம் தயாராகவுள்ளோம். அரசியல் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படும் வேலைநிறுத்தப் போராட்டங்களில் இணைந்துகொள்ள வேண்டாமென்பதே நான் ரயில்வே திணைக்களத்தின் அனைத்து தொழிற் சங்கத்தினரிடமும் விடுக்கும் வேண்டுகோளாகும்.

தொடர்ந்தும் திணைக்களமாக முன்னெடுத்துச் செல்வதன் மூலம் ரயில்வேதுறையை முன்னேற்ற முடியாது. திணைக்களமொன்றுக்கு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய நிலை இல்லை. துறைமுக அதிகார சபை, ரெலிக்கொம் நிறுவனம் ஆகியவை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள முறைமையின்படி நிறுவனத்தின் எந்தவொரு சிறு ஊழியருக்கும் பாதிப்பு ஏற்படாதவகையில் ஓய்வூதியம் தொழில் பாதுகாப்பு ஆகியவற்றை பாதுகாக்கும் வகையில் அதிகாரவாதத்திற்கு அடிபணியாது பணிப்பாளர் சபையின் கீழ் செயற்படக்கூடிய முறைமையொன்றுக்கு நாம் செல்லவேண்டியது அவசியமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### மூன்றாம் தரப்பு...

போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்துள்ளார். எட்டரை இலட்சம் ஓட்டுநர் உரிமங்கள் மூன்றாம் தரப்பினரால் அச்சிடப்பட்டு உரிமதாரர்களுக்கு வழங்கப்படும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது. வழங்க முடியாத சாரதி அனுமதி அட்டைகளை மட்டும் 6 அல்லது 7 மாதங்களுக்குள் மூன்றாம் தரப்பினர் மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

### 120 நாட்களில்...

கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் எண்ணாயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. சிறுவர்களின் செயற்பாடுகள், கல்வி மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில், முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

### நவீன் திசாநாயக்கவுக்கு....

பெரும்பாலும் அவருக்கான ஆளுனர் பதவி நாளை செவ்வாய்க்கிழமை வழங்கப்படலாம் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### 05 வயது சிறுவன்...

முன்னிலையில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னதாக இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட புல் வெட்டும் பணியாளர், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

51 வயதான குறித்த சந்தேகநபர் புதுக்கடை நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

முன்னதாக குறித்த சிறுவன் உயிரிழந்தமை தொடர்பான முக்கிய விடயங்களை சந்தேகநபர் தமது வாக்குமூலத்தின்போது வெளிப்படுத்தியிருந்தார். இதன்படி, சிறுவன் உண்மையில் கண்ணாடி போத்தல் துண்டுகளால் ஏற்பட்ட வெட்டுக் காயங்களால் இறக்கவில்லை என்றும் புல் வெட்டும் இயந்திரத்தின் கத்திகள் தவறுதலாக சிறுவனைத் தாக்கியதால் சிறுவன் இறந்துவிட்டதையும் அவர் ஒப்புக் கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சிறுவன் இறந்தமை காரணமாக, பீதியடைந்த நிலையில் தாம், உடைந்த கண்ணாடி போத்தல்களின் துண்டுகளை சிறுவனின் உடலின் அருகில் வைத்ததாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமையன்று முல்லேரியா ஹல்பராவ பிரதேசத்தில் உள்ள கட்டுமான தளத்தில் இருந்து ஐந்து வயதுடைய ஜொனாதன் மார்க் பொன்சேகா என்ற சிறுவனின் சடலம் மீட்கப்பட்டது. இதனையடுத்தே சந்தேகத்தில் புல்வெட்டும் பணியாளர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

### விலைகளை உடனடியாக...

நேற்று முதல் கையடக்கத் தொலைபேசிகளின் விலைகள் குறைவடையும் என சில சங்கங்கள் குறிப்பிட்டாலும் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளே தற்போது விற்பனையில் உள்ளதால் அவ்வாறு உடனடியாக விலைக் குறைப்பை மேற்கொள்ள முடியாது என்றும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் அந்த சங்கத்தின் தலைவர் இந்திரஜித் பெரேரா தெரிவிக்கையில், தற்போது சந்தையில் உள்ள கையடக்க தொலைபேசிகள் மற்றும் அதற்கான உதிரிப்பாகங்களின் விலைகளை சுமார் 20 வீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக இலங்கை கையடக்க தொலைபேசி இறக்குமதியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. ரூபாவின் பெறுமதி அதிகரித்து வருவதால் அதன் பயனை மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே அவ்வாறான தீர்மானம் எடுக்கப்படுவதாக அந்த சங்கத்தின் தலைவர் சமித் செனரத் தெரிவித்துள்ளார் என்பதை சுட்டிக் காட்டியுள்ளார்.

### ஆளுநர் செந்திலுக்கு...

தெரிவித்துள்ளார். இந்நிலையில், வாழ்த்து தெரிவித்தமைக்காக முதலமைச்சருக்கு செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்ததுடன், கலைஞர் மு. கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு பல உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன. அவற்றை நினைவூட்டும் வகையில், கலைஞரின் நூற்றாண்டு விழாவை இலங்கையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் தமிழக முதலமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதி 17 இல்...

நாடுகளுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி இந்த வெளிநாட்டு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஜனாதிபதியின் பிரான்ஸ் விஜயத்தின் போது அங்கு 'பெரிஸ் கிளப்' உறுப்பினர்களுடன் விசேட சந்திப் பொன்றை மேற்கொள்ளவும் ஏற்பாடாகியுள்ளது.

இலங்கையின் கடன் நெருக்கடியை நிவர்த்தி செய்தல் மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஒத்துழைப்பு வழங்குவதாக 'பெரிஸ் கிளப்' ஏற்கனவே அறிவித்திருந்தது.

அதிவேளை இலங்கையின் கடன் மறு சீரமைப்பு தொடர்பிலான எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த விஜயத்தின் போது பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### நாட்டில் கடும்..

சீரற்ற காலநிலை மேலும் சில தினங்களுக்கு தொடருமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 100 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியை எதிர்பார்க்கமுடியுமென்று தெரிவித்துள்ள அந்த திணைக்களம், இடியுடன் கூடிய மழையும் காற்றும் இடம்பெறும் என்றும் மழை, வெள்ளம், மின்னல் தாக்கத்தினால் ஏற்படும் அனர்த்தங்களிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்வதில் மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டுமென்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

# இலங்கையின் அபிவிருத்திக்கு இளம் தலைமுறையினரின் பங்களிப்பு அவசியம்

## பலஸ்தீன உயர்ஸ்தானிகர்





**(மாவத்தகம தினகரன் நிருபர்)**

இலங்கையின் அபிவிருத்திக்கு இளைஞர், யுவதிகளின் பங்களிப்பு அவசியமாகும் என இலங்கைக்கான பலஸ்தீன உயர்ஸ்தானிகர் கலாநிதி சுஹைர் ஹம்துல்லாஹ் தார் செய்த் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் கண்டி மாவட்டத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சியும் தொழில் முயற்சியாண்மை தொடர்பிலான வழிகாட்டல் செயலமர்வு அக்குறணை மீஸானிய்யா கல்வி நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் தலைவர் லக்மான் சஹாப்தீன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைக்கான பலஸ்தீன உயர்ஸ்தானிகர் கலாநிதி சுஹைர் ஹம்துல்லாஹ் தார் செய்த், சவூதி அரேபியா உயர்ஸ்தானிகர் அப்துல்லாஹ் அப்துல் அஸீஸ் ஒக்குபி மற்றும் பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் இம்த்தியாஸ் பாக்கீர் மார்க்கார் உள்ளிட்டவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் உப தலைவர்களான சாம் நவாஸ், பௌஸர் பாரூக், முன்னாள் செயலாளர் வைஸ் மற்றும் கண்டிக் கிளையின் தலைவர் மேஜர் அப்துர் ரஹ்மான், ரம்ஸி ராசிக் ஆகியோகரும் கலந்து கொண்டனர்

இதன் வளவாளர்களாக கொழும்பு பல்கலைக்கழக சமூகவியல் துறைப் பேராசிரியர் எம். டி. எம் மஹீஸ், பாராளுமன்ற சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகஸ்தர் முஹமட் அஜ்வர்தீன், வளவாளர் சம்ரீன் சரூக் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

# தேக்குமர பலகைகளை கொண்டு சென்ற நால்வர் கைது

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

அனுமதிபத்திரமின்றி சட்டவிரோதமாக தேக்கு பலகைகளை கொண்டு சென்ற நால்வரை கந்தகெடிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கந்தகெடிய பாலாகொல்ல பகுதியில் இருந்து பதுளை நோக்கி 401 தேக்கு பலகைகள் கொண்டு செல்லப்படுவதாக கந்தகெடிய பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய கந்தகெடிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் ஏக்கநாயகவின் ஆலோசனைக்கு அமைய உடன் வீதித்தடையை அமைத்து வாகனங்களை சோதனைக்கு உட்படுத்திய போது லொறி ஒன்றில் தேக்கு பலகைகள் கொண்டு செல்வது கண்டுபிடிக்க பட்டுள்ளது.

இதன்போது 52,39,32,31 வயதுகளை உடைய பதுளபிட்டி பகுதியை சேர்ந்த இருவரும் பாலாகொல்ல பகுதியை சேர்ந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக கந்தகெடிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

குறித்த தேக்கு பலகைகள் ஆறு லட்சம் ரூபாய்க்கும் அதிகமாக பெறுமதியுடையதாக இருக்கலாம் எனவும் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் சுந்தகெடிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# யானை தாக்கி தந்தை, மகன் பலி

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

காட்டில் விறகு வெட்டிக் கொண்டிருந்த தந்தையும், மகனும் யானை தாக்கிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் மொனராகலை மாவட்டம், பிபிலை பிரதேசத்தில் நேற்று முன்தினம் (10) இடம்பெற்றுள்ளது.

இருவரினதும் சடலங்கள் நேற்று (11) காலை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 49 வயதுடைய தந்தையும், 20 வயதுடைய மகனும் யானையின் தாக்குதலுக்கு இலக்காகிப் பலியாகியுள்ளனர்.

சடலங்களை வைத்திய சாலையில் ஒப்படைத்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 'பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம்'

## மலையக ஊடகவியலாளர் சந்திப்பு

**கினிகத்தேனை தினகரன் நிருபர்**



'பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம்' என்ற தொனிப் பொருளில் செட்டிக் கரிட்டாஷ் நிறுவனத்தினூடாக மலையக மக்களின் 200 வருட வாழ்வை நினைவு கூரும் வகையில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று ஹற்றன் கரிட்டாஸ் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இவ் ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட ஹற்றன் திருச்சிலுவை ஆலயத்தின் பங்கு தந்தை நியுமன்பீரிஸ் கருத்து தெரிவிக்கும் போது,

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்களை பூர்த்தி செய்து கொண்டாட்டங்களை பல விதங்களில் முன்னெடுக்கும் இச் சூழலில் பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வருமானத்தை ஈட்டுகின்ற ஒரு இனமாக வாழ்ந்துக் கொண்டிருக்கின்றார்கள் ஆனால் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற சுதந்திரம் வாழ்க்கை பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதா என்ற ஒரு கேள்வியாக இருக்கின்றது. எனவே எதிர்காலத்தில் இலங்கையில் வாழ்கின்ற ஏனைய மக்களை போன்று பெருந்தோட்ட மக்கள் தலைநிமிர்ந்து சுதந்திரமாக வாழவேண்டுமென்றால் அவர்களுக்குரிய அடிப்படை தேவைகளை, வசதிகளை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்..

இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்தப்படாவிட்டால் 200 வருடங்கள் அல்ல எத்தனை வருடங்கள் சென்றாலும் பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் எவ்வித மாற்றமும் ஏற்பட போவதில்லை என அவர் தெரிவித்தார்.

கதிர்காமம் ஆலயத்துக்கான

# மஸ்கெலியா குழுவின் பாதயாத்திரை ஆரம்பம்



**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலியா ஸ்ரீ சண்முக நாதர் ஆலயத்தில் இருந்து சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட பக்தர்கள் நடை பயணமாக கதிர்காமம் நோக்கிய பாதயாத்திரையை நேற்று முன்தினம் ஆரம்பித்தனர்.

மங்கள வாத்தியம் முழங்க மஸ்கெலியா ஸ்ரீ சண்முக நாதர் ஆலயத்தில் இருந்து நகர் வழியாக சென்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் முதல் நாள் நோர்வூட், டிக்கோயா, ஹற்றன் வரை சென்று ஹற்றன் நகரில் உள்ள மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் தங்கி இருந்து அடுத்த நாள் காலையில் நடை பயணத்தை தொடர்ந்து எதிர் வரும் 19 ம் திகதி கதிர்காம கொடி ஏற்றத்தன்று கதிர்காமம் முருகன் ஆலயத்தை சென்றடைவர்.

இந்த குழுவில் செல்வோர் கதிர்காமம் திருவிழா ஆரம்பம் முதல் முடிவு வரை அங்கு தங்கி இருந்து அன்றாட சிரமதான பணியில் ஈடுபட்டு கதிர்காமம் திருவிழா நிறைவு தினமன்று மீண்டும் திரும்புவர்.


**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்**

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| CRWB வீதியில் 402/1 ஆம் இலக்க மதகு தொடக்கம் 402/2 ஆம் இலக்க மதகு வரை கொங்கிறீட் வடிகாலின் நிர்மாணம் |

தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறையின் கீழ் மேலுள்ள பணிகளுக்கான விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன. ஆர்வம் கொண்ட விலைமனுதாரர்கள் 2023.06.13 ஆம் திகதி தொடக்கம் 2023.06.20 ஆம் திகதி வரை www.rda.gov.lk என்ற RDA மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதள பக்கத்தை பார்ப்பதற்கு கோரப்படுகின்றனர்.



**சிறைச்சாலைகள் திணைக்களம்**

**தேசிய தொழில்படைக்கு திருப்பமான ஒரு மாற்றம்**

சிறை சென்றுள்ளவர்களின் சிறைப்படாத உழைப்பு நாட்டில் உற்பத்தி மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டுக்கு பயன்படுத்துவதற்கு அரசு, அரச சார்பு மற்றும் தனியார் துறைகளுக்கு இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் அழைப்பு விடுக்கப்படுகிறது.

இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறை இருக்கும் கைதிகளை தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களாக பயிற்சி அளித்து பணியில் ஈடுபடுத்துவதற்கும், சிறைச்சாலை நிறுவன வளவுக்குள் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கும் கைதிகளின் புனர்வாழ்வு செயற்பாடு தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற தனியார், அரச சார்பு மற்றும் அரச துறைகளின் நிறுவனங்களுக்கு வாய்ப்பு ஒன்றை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கைதிகள் நலன்புரிக்கான இந்தத் திட்டத்திற்கு நேரடி பங்களிப்பை வழங்கி உன்னதமான சமூகப் பங்களிப்பு ஒன்றை செய்வதற்கு ஆர்வம் காட்டுகின்ற அரச, அரச சார்பு மற்றும் தனியார் நிறுவனங்களிடம் இருந்து திட்ட முன்மொழிவுகளை முன்வைப்பதற்காக அழைப்பு விடுக்கப்படுகிறது.

இந்தத் திட்டம் தொடர்பில் மேலதிக விபரங்களுக்கு http://prisons.gov.lk/web/ என்ற இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

திட்ட அறிக்கையை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 2023.07.25

**எச்.எம்.டீ.என். உபுல்தெனிய**
**சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம்**
**சிறைச்சாலைகள் திணைக்களம்**


# நாடு 'டிஜிடெல்' பொருளாதாரத்தை நோக்கி நகர்கிறது

## இராஜாங்க அமைச்சர் ரோகன திசாநாயக்கா

**அக்குறணை குறூப் நிருபர்**

நாடு 'டிஜிடெல்' பொருளாதாரத்தை நோக்கி நகரும் இவ்வேளையில் அனைவரும் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோகன திசாநாயக்கா தெரிவித்தார்.

மாத்தளை எம்.சி.வீதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் நாடு பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்ட போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அச்சவால்களை எதிர் கொண்டு பொறுப்புக்களை கையேற்றார். அவை படிப்படியாக குறைக்கப்பட்டு தற்போது நாடு வழமையான நிலைக்கு திரும்பிக் கொண்டுள்ளது. திட்டங்கள் படிப்படியாக வெற்றியடைந்து வருவதைக் காண முடிகிறது. நல்லதை நல்லது என்று கூற தயங்கக் கூடாது. இன்று டொலர் பிரச்சினை, எரிபொருள் பிரச்சினை, எரிவாயு பிரச்சினை போன்றவற்றிற்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது. பொருட்களின் விலைகள் படிப்படியாகக் குறைய ஆரம்பித்துள்ளது என்றார்.

**தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk**

**வெள்ளிக்கிழமை 2023.06.09**

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | முடிவுகள் |
|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5140 | ரூ. 11,591,354.00 | ஆங்கில எழுத்து T; வெற்றி இலக்கங்கள் 7 7 1 2 7 1 |
| ஜாதிக சம்பத | 1595 | ரூ. 12,255,983.12 | வெற்றி இலக்கினம் துலாம்; வெற்றி இலக்கங்கள் 8 2 2 1 1 9; லக் ஷபதி அதிர்ஷ்ட இலக்கம் 5 0 4 4 3; தேலத் ஷபதி அதிர்ஷ்ட இலக்கங்கள் 0729319, 1096700, 1104195, 1104874, 0508403 |
| Mega Power | 1488 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 328,326,394.00; அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 | ஆங்கில எழுத்து V; சுப்பர் இலக்கம் 04; வெற்றி இலக்கங்கள் 27 39 44 65 |
| ராசி சுப பலன் (Handahana) | 449 | ரூ. 3,287,935.60 | வெற்றி இலக்கினம் மகரம்; வெற்றி இலக்கங்கள் 06 14 16 38; விசேட இலக்கினம் மகரம் |
| தன நிதானய | 1170 | ரூ. 94,130,403.60 | ஆங்கில எழுத்து G; வெற்றி இலக்கங்கள் 21 45 65 66 |
| கொவிசெத (Govisetha) | 3382 | ரூ. 61,497,383.20 | ஆங்கில எழுத்து F; வெற்றி இலக்கங்கள் 01 06 40 73 |

**சனிக்கிழமை 2023.06.10**

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | முடிவுகள் |
|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5141 | ரூ. 11,625,376.00 | ஆங்கில எழுத்து S; வெற்றி இலக்கங்கள் 9 7 2 6 5 9 |
| ஜாதிக சம்பத | 1596 | ரூ. 12,255,983.12 | வெற்றி இலக்கினம் ரிஷபம்; வெற்றி இலக்கங்கள் 4 7 6 0 5 3 |
| Mega Power | 1489 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 328,663,754.00; அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 | ஆங்கில எழுத்து G; சுப்பர் இலக்கம் 15; வெற்றி இலக்கங்கள் 18 44 55 58 |
| ராசி சுப பலன் (Handahana) | 450 | ரூ. 3,308,897.00 | வெற்றி இலக்கினம் மிதுனம்; வெற்றி இலக்கங்கள் 01 18 45 58; விசேட இலக்கினம் மிதுனம் |
| தன நிதானய | 1171 | ரூ. 94,340,246.00 | ஆங்கில எழுத்து A; வெற்றி இலக்கங்கள் 23 34 37 53 |
| கொவிசெத (Govisetha) | 3383 | ரூ. 61,671,762.00 | ஆங்கில எழுத்து C; வெற்றி இலக்கங்கள் 05 38 63 72 |

## மாந்தை வேட்டையாமுறிப்பு கிராமத்தில் அமைந்துள்ள

# 'கள்' விற்பனை நிலையத்தை இடமாற்ற கோரி மக்கள் போராட்டம்





**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேட்டையாமுறிப்பு கிராமத்தில் அமைந்துள்ள 'கள்' விற்பனை நிலையத்தை இடமாற்ற கோரி மக்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை (11) காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்த பகுதியில் உள்ள கள் விற்பனை நிலையத்தை அகற்றி வேறு ஒரு இடத்தில் அமைக்குமாறும் இதனால் பாரிய பிரச்சினை ஏற்படுவதாகவும், குடும்பங்களுக்குள் பிரச்சினைகள், சமூக சீர்கேடு, சிறுவர்கள் மது போதைக்கு அடிமையாகுவதாகவும் இதை கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் விற்பனை நிலையத்தை இப்பிரதேசத்தில் இருந்து வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யக் கோரி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதேவேளை கள் விற்பனை நிலையத்தை மையமாக வைத்து குறித்த பகுதியில் வேறு போதைப் பொருள் வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் கள்ளச் சாராயம் விற்பனை அதிகரித்து காணப்படுவதாகவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த அடம்பன் பொலிஸார் உடனடியாக அடம்பன் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்க முகாமையாளரை தொடர்பு கொண்டு சம்பவ இடத்திற்கு வருகை தருமாறு கூறியதை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த முகாமையாளர் மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்ததோடு, மக்களின் எதிர்ப்பை தொடர்ந்து, நேற்று ஞாயிற்றுக்கிழமை (11) முதல் கள் விற்பனை நிலையம் மூடுவதாகவும் தெரிவித்தார்.

கள் விற்பனை நிலையம் மூடப்படுவதனால் இத்தொழிலை நம்பி வாழ்வாதாரமாகக் கொண்டு இயங்கும் சுமார் 10 இற்கும் மேற்பட்ட கள்ளு சீவும் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் முற்று முழுதாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

## வடக்கின் உதயம்

# ஊசி மூலம் ஹெரோயின்; யாழ். இளைஞன் மரணம்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் ஹெரோயினை ஊசி மூலம் நுகர்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்.நகரை அண்டிய பகுதியை சேர்ந்த இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வீட்டுக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இளைஞன் வீட்டுக்கு அருகில் உள்ள இடத்தில் ஹெரோயின் போதை பொருளை ஊசி மூலம் தனது உடலில் செலுத்திய வேளை மரணம் சம்பவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த இளைஞன் போதைக்கு அடிமையானவர் எனவும், ஏற்கனவே போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டுகளில் கைதாகி சிறை தண்டனை அனுபவித்தவர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# புலுமச்சிநாதகுளத்தில் உயிரிழந்த யானையின் சடலம் மீட்பு

**மாங்குளம் குரூப் நிருபர்**



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலிமச்சிநாதகுளம் பகுதியில் வயல் வெளியில் உயிரிழந்த நிலையில் யானை ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

வயலை பார்வையிட சென்றவர்களால் உயிரிழந்த நிலையில் யானை அடையாளம் காணப்பட்டு, கிராம சேவகர் ஊடாக ஒட்டுசுட்டான் வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு பிரதேச வாசிகள் தகவல் வாங்கியுள்ளனர்.

இதேவேளை உயிரிழந்த யானை பெண் யானை எனவும், அது 30 – 35 வயதினை கொண்டதெனவும், துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி குறித்த யானை உயிரிழந்துள்ளது எனவும் ஒட்டுசுட்டான் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் உறுதிப்படுத்தினர்.

# யாழில் சுகாதாரத்தை பேணாத உணவகத்துக்கு ரூ.40 ஆயிரம் அபராதம்

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்ப்பாணம் கன்னாதிட்டி சந்திக்கு அருகில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய, உணவகத்திற்கு 40 ஆயிரம் ரூபாய் அபராதம் அறவிடப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 10ம் திகதி யாழ். மாநகர பொது சுகாதார பரிசோதகர் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர்களின் வழமையான குழு பரிசோதனையில் கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள ஓர் உணவகம் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து மே மாதம் 12ம் திகதி உணவக உரிமையாளரிற்கு எதிராக யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கை விசாரித்த நீதவான் கடையினை சீல் வைத்து மூடுமாறு பொது சுகாதார பரிசோதகரிற்கு உத்தரவிட்டார். தொடர்ந்து பொது சகாதார பரிசோதகரால் கடை சீல் வைத்து மூடப்பட்டது.

அந்நிலையில் வியாழக்கிழமை குறித்த வழக்கு நீதிமன்றில் மீள விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது உணவக உரிமையாளரிற்கு 40 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது.

# கின்னஸ் சாதனையை நிகழ்த்த நிதியில்லை

## தாடி முடியில் 2000 கிலோ வாகனத்தை இழுத்த சாதனையாளர்

**சாவகச்சேரி விசேட நிருபர்**





திறமை இருந்தும் உலக சாதனையை நிகழ்த்த நிதி நிலைமை தடையாக இருப்பதாக தென்மராட்சி மட்டுவிலைச் சேர்ந்த 60 வயதான சாதனையாளர் செ.திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

தாடியின் உதவியுடன் இரண்டாயிரம் கிலோவிற்கும் அதிக எடை கொண்ட வாகனத்தை இழுத்து சாதனையை நிகழ்த்தவிருந்த நிலையில் மேற்படி சாதனை நிகழ்த்தும் நிகழ்வு நிதி நிலைமை காரணமாக தடைப்பட்ட நிலையில் ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

கடந்த சில வருடங்களாக தாடி மற்றும் தலைமுடியின் உதவியுடன் வாகனங்களை இழுத்து சாதனைகளை நிகழ்த்தி வந்தேன். ஊடகங்கள் வாயிலாக எனது திறமையை பார்த்த உலக சாதனையை பதிவு செய்யும் அமைப்பு ஒன்று எனது பெயரையும் சாதனைப் புத்தகத்தில் இணைக்க விரும்பி தாமாக தொடர்பு கொண்டனர்.

அந்த வகையில் இரண்டாயிரம் கிலோவிற்கும் அதிக எடை கொண்ட வாகனத்தை தாடி மூலம் 500மீற்றர் தூரம் இழுத்தால் உலக சாதனையாக அதனை பதிவு செய்ய முடியும் என்றனர். அதற்கான பயிற்சிகளையும் நான் நிறைவு செய்தேன். ஆனால் திடீரென நிகழ்விற்கான செலவுகள் சிலவற்றை பொறுப்பேற்குமாறு தெரிவித்தனர். எனது பொருளாதார நிலைமை அதற்கு இடமளிக்காததால் உலக சாதனை நிகழ்வு தடைப்பட்டுள்ளது.

திறமை இருந்தும் பொருளாதார நிலைமை காரணமாக என்னைப் போன்ற பலர் திறமைகளை வெளிக்காட்ட முடியாமல் உள்ளனர்.

60 வயதான நான் உலக சாதனையை நிகழ்த்த தயாராக இருக்கிறேன்.

ஆனால் பிரதேச செயலகமோ மற்றும் பொது அமைப்புக்களோ இதனை முன்னின்று செயற்படுத்த தயார் நிலையில் இல்லை.

நான் கடந்த காலங்களில் தலைமுடி மற்றும் தாடி ஆகியவற்றின் உதவியுடன் இரண்டு கிலோமீற்றருக்கும் அதிக தூரம் வாகனத்தை இழுத்து சில சாதனைகளை நிகழ்த்தியுள்ளேன். எனது சாதனைகளை உலகறியச் செய்ய ஊடகங்கள் மாத்திரமே எனக்கு துணை நிற்கின்றன.

# வெங்காயம் நடுகை செய்யும் இயந்திரம்





**யாழ்.விசேட நிருபர்**

வெங்காய செய்கையினை இலகுவாக்கும் வகையில் வெங்காயம் நடுகை செய்யும் இயந்திரம் ஒன்றினை அச்சுவேலியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் உருவாக்கியுள்ளார். அச்சுவேலி பகுதிகளை சேர்ந்த விவசாயி ஒருவர் இரண்டு வருடங்களுக்கு மேலாக லாண்ட் மாஸ்டர் இயந்திரத்தை பயன்படுத்தி வெங்காயத்தை நடுகை செய்யும் இயந்திரம் ஒன்றினை உருவாக்கி அதன் மூலம் செலவினங்களை குறைத்து வெங்காயத்தினை நடுகை செய்யும் முறையினை கண்டுபிடித்துள்ளார். இதனூடாக வெங்காயத்தினை நடுகை செய்வதற்கு ஏற்படும் செலவீனத்தை பல மடங்கு குறைத்து அதன் ஊடாக பல ஏக்கர் நிலங்களில் வெங்காயத்தினை நாட்டி வெற்றி கண்டுள்ளார்.

இதனை அனைவருக்கும் அறிமுகப்படுத்தும் வகையில் முதற்கட்டமாக வடமாகாண விவசாய பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் வெள்ளிக்கிழமை நடுகை செய்யும் முறை காண்பிக்கப்பட்டது.

# பெரிய கரிசல் கப்பலேந்தி மாதா ஆலயத்தில் திருட்டு

**தலைமன்னார் விசேட நிருபர்**



மன்னார் மறைமாவட்டத்தில் கத்தோலிக்க ஆலயம் ஒன்றின் கதவை உடைத்து உட்புகுந்த திருடர் அங்கிருந்து திருப்பலி திருப்பண்டத்தை களவாடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் மன்னார் பெரிய கரிசல் பகுதியில் (08) இரவு கத்தோலிக்க தேவாலயமான புனித கப்பலேந்தி மாதா ஆலயத்திலேயே இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸில் முறையீடு செய்யப்பட்டிருப்பதாவது,

மன்னார் பெரிய கரிசல் பகுதியில் அமைந்துள்ள புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தில் வியாழக்கிழமை (08)இரவு ஆலயத்தின் பக்கத்து கதவை உடைத்து இனம் தெரியாத திருடர் உட்புகுந்து அங்கிருந்த திருப்பலியின்போது பாவிக்கப்படும் திவ்விய நற்கருணை வைக்கும் பாத்திரமான திருப்பண்டம் களவாடிச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸில் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

# வவுனியாவில் 7 பெண்களுக்கு பாலியல் தொற்று நோய் கண்டுபிடிப்பு

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் பாலியல் தொழிலில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டவர்களுக்கு மேற்கொண்ட மருத்துவ பரிசோதனையில் 7 பேருக்கு கொனோறியா மற்றும் ஷர்ப்பீஸ் நோய் தொற்றுக்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் (09)தெரிவித்துள்ளனர்.

இந் நோயானது பாலியல் உறவின் மூலம் தொற்றாளரிடம் இருந்து பிறருக்கு பரவக் கூடியது ஆகும். குறித்த 7 பாலியல் தொழிலாளர்களும் வவுனியா நகரம் மற்றும் தேக்கவத்தை ஆகிய பகுதியில் பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

எனவே, அவர்களுடன் தொடர்புகளைப் பேணியோர் உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் எச்.ஐ.வி தடுப்பு பிரிவுக்கு சென்று தம்மை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளுமாறும் சுகாதாரப் பிரிவினரால் கோரப்பட்டுள்ளது.





சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பூங்காவன உற்சவ நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் சிறி சற்குணராசா உரையாற்றுவதையும் உற்சவத்தில் கலந்து கொண்ட ஆலய பிரதம குரு பாலகைலாஷநாத சர்மா, மகோற்சவ குரு சபா குருக்கள் ஆலய நிர்வாக உபதலைவர் பேரம்பலவாதவூரர் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் இந்துமத விவகார இணைப்பாளர் கலாநிதி இராமசந்திர குருக்கள் பாபுசர்மா ஆகியோரை காணலாம்.

# கிழக்கின் குரல்



# கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் விவசாயிகளுக்கு நீர்ப்பம்பிகள் வழுங்கல்

**இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்பு**



**(கல்லடி குறூப் ,பெரியபோரதீவு தினகரன் நிருபர்கள்)**

விவசாயத் திணைக்களமும், விவசாய நவீன மயமாக்கல் திட்டமும் இணைந்து நடத்திய விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ், மாதுளை மற்றும் வாழை பயிரிடும் பயனாளிகளுக்கான நீர்ப்பம்பி வழங்கும் நிகழ்வு, சனிக்கிழமை (10) கல்லடி சண்சைன் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வர்த்தக, வாணிப இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன், விவசாய விரிவாக்கல் திட்டத்தின் பணிப்பாளர் கணபதிப்பிள்ளை கருணாகரன், கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் கலீல், மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் வி.பேரின்பராசா, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா, மாவட்ட செயலக உயரதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 350 பயனாளிகளுக்கு நீர்ப்பம்பி வழங்கி வைக்கப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர், எதிர்காலத்தில் 3000 பேருக்கு நீர்ப்பம்பிகள் வழங்கப்படும் என்றார்.

## யானை தாக்கி குடும்பஸ்தர் படுகாயம்

**(கிண்ணியா மத்திய நிருபர்)**

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, கண்டல்காடு கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை (11) காலை காட்டு யானை தாக்கியதில், குடும்பஸ்தர் ஒருவர், பலத்த காயங்களுக்கு உள்ளாகி, கிண்ணியா தள வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கிண்ணியா மகாமாறு பகுதியைச் சேர்ந்த ஆசுதீன் அன்சார் என்ற இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளானவராவார்.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது, நேற்று இவர் தனது வீட்டிலிருந்து, மோட்டார் சைக்கிளில் கண்டல்காடு பிரதேசத்தில் அமைந்துள்ள, மகாவலி கங்கை கொட்டியாரகுடாவில் மீன்பிடிக்க சென்ற போதே, தாக்குதலுக்கு உள்ளானதாகவும், அவர் சென்ற மோட்டார் சைக்கிளும் தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து மேலதிக விசாரணைகளை கிண்ணியாபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கும்பாபிஷேக பெருவிழா

**(ஆரையம்பதி தினகரன் நிருபர்)**

மட்டக்களப்பு தேற்றாத்தீவு அருள்மிகு ஆண்டாள் பிருந்தாவன கிருஷ்ணர் ஆலய மகா கும்பாபிஷேக பெருவிழா, இன்று 12 திங்கட் கிழமை பூர்வாங்க கிரியைகளுடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து வரும் நான்கு நாள் பக்திமிகு நிகழ்வில் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும், 14ஆம் திகதி வேத நாத கீத வாத்திய கோவிந்த கோசத்தோடு மகா கும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து வரும் 12 நாட்கள் மண்டலபிஷேகம் நடைபெற்று, இறுதி நாளாகிய 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆண்டாள் நாராயண சமேத திருக் கல்யாணம் மிகவும் சிறப்பான முறையில் இடம் பெற உள்ளது.

## இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு

**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றி, வேறு அலுவலகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் சேவை உதவியாளர்கள் ஆகியோரின் பணியைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு,

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜி.பஸ்மில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களான ஏ.எல்.பதுறுன்னிஸா, ஏ.எம்.றிஸ்மியா, வை.எல். மஹ்ஹாஸிர் மற்றும் சேவை உதவியாளர்கள் யூ.எல்.எம்.முனாஸ்,எஸ். எச்.நிஸார்டீன் ஆகியோர் நிகழ்வில் நினைவுப் பரிசில் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், உரையாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ் கூறுகையில், அக்கரைப்பற்று கல்வி வலயத்திலுள்ள 32 ஆயிரம் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், உத்தியோகத்தர்களுக்கு நிறைவான சேவை செய்து, இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களின் பணி மகத்தானது. அவர்கள் இடமாற்றம்

பெற்றுள்ள புதிய அலுவலகங்களிலும் திறமையாக சேவையாற்றி முத்திரை பதிக்க வேண்டும் என்றார்.

## கிழக்கில் பொலிஸ் படுகொலை; 33வது ஆண்டு நினைவுதினம்

**(பாறுக் ஷிஹான்)**



தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த சுமார் 600 பொலிஸார், படுகொலை செய்யப்பட்டு 33 ஆண்டுகள் நிறைவடைந்ததை அனுஸ்டிக்கும் ஒன்றுகூடும் நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை (11) அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தின் முன்பாக நடைபெற்றது. இந்நிகழ்வின்போது அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜய சிறி, அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டீ.ஜே.ரத்னாயக்க உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகள், பொலிஸார் ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக தமிழீழ விடுதலைப் புலிகளினால் 1990 ஆம் ஆண்டு கடத்திக் கொல்லப்பட்ட பொலிஸார் உட்பட யுத்தத்தினால் உயிர்நீத்த மற்றும் கடந்த கால யுத்தம் உள்ளிட்ட இதர காரணங்களினால் மரணமடைந்த பொலிஸாரின் குடும்பங்களில் உள்ள சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் செயற்பாடுகள் இதன் போது முன்னெடுக்கப்பட்டன.

இது தவிர நிகழ்வின் ஆரம்பத்தில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜய சிறியினால் பொலிஸ் கொடி அரை கம்பத்தில் ஏற்றப்பட்டதுடன்,

உயிர்நீர்த்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## தைபா அரபு கல்லூரிக்கு புதிய மாணவிகள் சேர்ப்பு

**(கல்முனை விஷேட,சாய்ந்தமருது விசேட நிருபர்கள்)**

சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரிக்கு புதிய மாணவிகளை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 17 சனிக்கிழமை மற்றும் 18 ஞாயிற்றுக் கிழமை ஆகிய இரு தினங்களிலும் கல்லூரியின் அதிபர் காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

ஜீ.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சை எழுதிய, அல்குர்ஆனை நன்கு ஓதத் தெரிந்த, ஆர்வமுள்ள மாணவிகள் நேர்முகப் பரீட்சையில் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கி வருகின்ற சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரியில் மௌலவியா பட்டத்திற்கான அல்ஆலிம் இஸ்லாமிய கற்கை நெறியுடன், ஜீ.சி.ஈ. உயர் தரப் பரீட்சைக்கும் மாணவிகள் தயார்படுத்தப் படுகின்றனர் என

கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எஸ். எச்.ஆதம்பாவா மதனி தெரிவித்தார்.

இதுவரை 39 மாணவிகள் இக் கல்லூரியில் இருந்து மௌலவியா பட்டம் பெற்றுள்ளனர். இவர்களுள் பல மாணவிகள் பல்கலைக்கழக அனுமதி பெற்று, உயர் கல்வி கற்று வருவதுடன் கற்கைகளை பூர்த்தி செய்த சிலர் பல்கலை பட்டம் பெற்று வெளியேறியுமுள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டார்.



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் மரம் நடுகை திட்டத்தின் கீழ், தோப்பூர் அல் ஹம்றா மத்திய கல்லூரியில் அதிபர் எஸ்.எம்.றஹீம் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (11) மரம் நடுகை முன்னெடுக்கப்பட்ட போது.

(படம்; தோப்பூர் குறூப் நிருபர்)

## சாய்ந்தமருதில் மது ஒழிப்பு பேரணி



**(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)**

சர்வதேச புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, சாய்ந்தமருது பிரதேச செயலகம் மற்றும் பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில், " புகைத்தலிலிருந்து மீண்ட ஒரு கிராமம் " எனும் தொனிப்பொருளில் மாபெரும் எதிர்ப்பு பேரணி சனிக்கிழமை (10) நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் தவிசாளர் பொறியியலாளர் எம்.எம். நசீர், நிர்வாக பணிப்பாளர் தபாலதிபர் யூ.எல்.எம். பைசர், நிதிப் பணிப்பாளர் முன்னாள் சாய்ந்தமது பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.சலீம், உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிக்கா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்ப ஊடகவியலாளர்கள் பங்காற்ற வேண்டும்

**அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர்**

**(ஒலுவில் விசேட நிருபர்)**

நாட்டின் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதற்கு ஊடகவியலாளர்கள் பெரும் பங்காற்ற வேண்டுமென, அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.எம்.ஏ. கமல் நெத்மினி தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தினால் ஊடகவியலாளர்களுக்கு நடாத்தப்பட்ட நவீன இலத்திரனியல் ஊடகம் தொடர்பான பயிற்சி செயலமர்வு சனிக்கிழமை (10) அம்பாறை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத்தின் தலைவர் வசந்த சந்திரபால தலைமையில் நடைபெற்ற இச் செயலமர்வில், மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் சக்தி மிக்க பலம் பொருந்திய ஊடகவியலாளர்கள் நாட்டின் அரசியலை தீர்மானிக்கும் சக்தியாகும். இன்று இளைஞர் சமூகம் தொழில்நுட்ப அறிவில் முன்னேறி வருகின்றார்கள். ஊடகவியலாளர்கள் காலத்திற்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். சமூகத்தின் முதலிடம் வகிக்கின்ற ஊடகவியலாளர்கள் எப்போதும் கௌரவத்துடனேயே காணப்படுகின்றார்கள்.

நாட்டிற்கும் மக்களுக்கு எப்போதும் உண்மையான பணியை வழங்குவது தான் ஒரு சிறந்த ஊடகவியலாளருக்குரிய பண்பாகும். ஊடகவியலாளர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் சிறந்தவர்களாக காணப்படுகின்றார்கள். ஊடகவியலாளர்களுக்கு நவீன தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்கு இச் செயலமர்வை ஏற்பாடு செய்த அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு தனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

## பழுதடைந்த பெரிய வெங்காயம் அழிப்பு

**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

காத்தான்குடி கடற்கரை வீதியில் பழுதடைந்த பெரிய வெங்காயம் விற்பனை செய்த லொறியினை முற்றுகையிட்ட பொது சுகாதார பரிசோதகர்கள், குறித்த லொறியிலிருந்து 300 கிலோ பழுதடைந்த பெரிய வெங்காயத்தை மீட்டுள்ளனர்.

சனிக்கிழமை (10) காத்தான்குடி கடற்கரை வீதியில் வைத்து பழுதடைந்த பெரிய வெங்காயத்தை விற்பனை செய்த லொறியை பொது சுகாதார பரிசோதகர்கள் முற்றுகையிட்டனர்

காத்தான்குடி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எம் .எம் . பஷீர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஏ.எல்.எம..ரஹ்மத்துல்லாஹ் ஆகிய இருவரும் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் நசிரீதீனின் ஆலோசனையுடன் இந்த முற்றுகை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## 1964ஆம் ஆண்டின் காணி எடுத்தல் (திருத்தல்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. அம்பகோ/3/7/அ/2/11

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல: 4-3/4/2018/LO/311

பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டிக்கும் காணியை ஒரு பகிரங்க தேவையின் நிமித்தம் அரசு பெற்றுக்கொள்வதற்கு எண்ணியிருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு இல. 2329/59 மற்றும் 2023.04.30 திகதி வெளியான இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையின் III பகுதியினை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| i. மாவட்டம் | : நுவரெலியா |
| ii. பிரதேச செயலகம் | : அம்பகமுவ கோரளை |
| iii. கிராமம் | : ககுலதென்ன |
| iv. கிராம உத்தியோகத்தர் பிரிவு | : 320- H மறே |
| v. காணியின் பெயர் | : டெல்ஹவுஸ் தோட்டம் |
| vi. வரைபட இலக்கம் துண்டிலக்கம் | : மு.வ.நு. 3449 இன் துண்டிலக்கம் 02 |
| vii. பரப்பளவு | : ஹெக்டயார் 0.0397 |

**சிதாரா ருவனி கமகே**
**பிரதேச செயலாளர்**
**அம்பகமுவ கோரளை**

**2023.05.30 திகதி**
**பிரதேச செயலகம்**
**அம்பகமுவ கோரளை**

## வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 18 -3XXX | TOYOTA | E-EE90-COROLLA | 1989 |
| 19 -8XXX | TOYOTA | STARLET EP82 | 1993 |
| KQ -6XXX | MARUTI | 800 | 2011 |
| **வேன்** | | | |
| PA -6XXX | DAIHATSU | HIJET | 2001 |
| **லொறி** | | | |
| 68 -8XXX | TOYOTA | - | 1993 |
| HM -8XXX | SUZUKI | GD-AD52T | 1999 |
| PQ -4XXX | MAHINDRA | MAXXIMO | 2011 |
| PR -3XXX | TATA | ACE | 2011 |
| PU -6XXX | MAHINDRA | MAXXIMO | 2012 |
| DAC -8XXX | TATA | ACE XPRESS | 2015 |
| DAB -2XXX | DFSK | EQ1020DR | 2015 |
| DAB -8XXX | MAHINDRA | MAXXIMO PLUS VX | 2015 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HL -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| JN -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QB -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QB -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QF -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QI -9XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QM -2XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| YI -9XXX | BAJAJ | RE 205 | 2011 |
| YL -3XXX | BAJAJ | RE 205 | 2011 |
| YO -6XXX | BAJAJ | RE 205 | 2011 |
| AAE -0XXX | BAJAJ | RE 205 | 2012 |
| ABA -5XXX | BAJAJ | RE | 2015 |
| ABN -3XXX | BAJAJ | RE | 2016 |
| **துவிச்சக்கர வண்டிகள்** | | | |
| BFB -1XXX | HONDA | DIO SCV 110 | 2017 |
| BFZ -7XXX | HONDA | DIO SCV 110 | 2017 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2023 ஜூன் 12ஆம், 13ஆம், 14ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2023 ஜூன் 15ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.

மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350

www.skillsads.com

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

# கேள்வி அறிவித்தல்

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## நகர அபிவிருத்தி அதிகார சபை

### கேள்வி அறிவித்தல்

### கடவத்தை பலநோக்கு போக்குவரத்து நிலையத்தின் தரை தளத்தில் அமைந்துள்ள 18 (பதினெட்டு) கடை அறைகளை 10 வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்குதல்

1.0 நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கடவத்தை நகர மத்தியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பலநோக்கு போக்குவரத்து நிலையக் கட்டிடத்தொகுதியின் தரை தளத்தில் அமைந்துள்ள 18 (பதினெட்டு)) கடை அறைகளை 10 வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கும் பொருட்டு கேள்விப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கடை அறைகளுக்கு உரித்தான அடிப்படை விலையை விட அதிகமாக விலைகளைச் சமர்ப்பிக்கும் விலைகளின் பிரகாரம் விற்பனைக் கூடங்களுக்கான கொள்வனவாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

| கடை அறை இலக்கம் | பரப்பளவு (சதுர அடிகள்) | மாதாந்த வாடகை ரூபா | அடிப்படை விலை (கீ மணி) ரூபா | விலைக் கோரல் பிணை முறி (BID BOND) ரூபா |
|---|---|---|---|---|
| 1,18 | 180 | 13,250.00 | 1,168,500.00 | 55,000.00 |
| 2,17 | 196 | 13,250.00 | 1,168,500.00 | 55,000.00 |
| 3,16 | 117 | 8,100.00 | 714,000.00 | 34,000.00 |
| 4,5,6,13,14,15 | 195 | 12,700.00 | 1,120,000.00 | 53,000.00 |
| 7,12 | 117 | 7,900.00 | 696,000.00 | 33,000.00 |
| 8,11 | 195 | 12,350.00 | 1,090,500.00 | 51,000.00 |
| 9 | 157 | 10,200.00 | 900,500.00 | 42,000.00 |
| 10 | 215 | 14,000.00 | 1,230,000.00 | 58,000.00 |

2.0. கேள்விப்படிவத் தொகுதியொன்றுக்கு 2000.00 ரூபா வீதம், அதற்கு இயைபுடைய அரசாங்க வரித்தொகையுடன் செலுத்தி, பத்தரமுல்ல, செத்சிரிபாய, கட்டம் 1, அலுவலக இடப்பரப்பின் 6ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை 7ஆம் மாடியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவிற்கு அல்லது கம்பஹா, மேரி பிசோ மாவத்தை, 06ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள கம்பஹா மாவட்டச் செயலகத்திற்குச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

3.0 ஒரு கேள்விப்படிவம் ஒரு கடை அறைக்கு விண்ணப்பிப்பதற்கு மாத்திரமே செல்லுபடியாகும். விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட கடை அறைகளுக்கு விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்ப்பதானால் அதற்காக வெவ்வேறாக கேள்விப்படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப்படிவங்கள் வழங்கப்படும் காலப்பகுதியில் பிரதான அலுவலகத்தின் பெறுகைப் பிரிவில் அல்லது கம்பஹா மாவட்டச் செயலகத்தில் இலவசமாக கேள்விப் படிவங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

4.0 கேள்விப் படிவங்கள் 2023-06-12ஆம் திகதி முதல் 2023-06-30ஆம் திகதி வரையில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும்.

5.0 பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் 2023-07-04ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை குறித்த நேரத்திற்கு முன் தலைவர், வருமான கேள்விச் சபை (சிறிய) நகர அபிவிருத்தி அதிகார சபை, நிதிப் பிரிவு, 6ஆம் மாடி, ''செத்சிரிபாய'', பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது பத்தரமுல்ல, செத்சிரிபாய, கட்டம் 1, அலுவலக இடப்பரப்பின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உள்ளிடல் வேண்டும் (கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'கடவத்தை கடை அறைகளுக்காக விலைமனுக்களை சமர்ப்பித்தல்' என்று குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வதற்கான குறித்த நேரம் முடிவடைந்ததன் பின் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் சகல கேள்விப்படிவங்களும் திறக்கப்படும்.

6.0 கேள்வி தொடர்பான மேலதிக தகவல்கள், தெளிவுபடுத்தல் மற்றும் கட்டிட திட்டங்கள் தொடர்பில் பரீட்சிப்பதற்கு தேவையான விண்ணப்பதாரர்கள் இயைபுடைய விபரங்களை பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'', 7ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் அல்லது கம்பஹா மாவட்ட அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(தொலைபேசி இலக்கம்: 0112875916-20, நீடிப்பு 2681 அல்லது 0113560673 / கம்பஹா மாவட்ட அலுவலகம்: 033-2234757)

**தலைவர்**
**வருமான கேள்விச்சபை (சிறிய)**
**நகர அபிவிருத்தி அதிகார சபை**
**6ஆம் மாடி, "செத்சிரிபாய",**
**பத்தரமுல்லை**

# இலங்கை முதலீட்டுச் சபை

## பெறுகை அறிவித்தல்

கீழ்க்காணும் பெறுகைக்காக பெறுகை கோரல் அறிவித்தல் 2023.06.10 (சனி) மற்றும் 2023.06.14 (புதன்) திகதிகளில் (Daily News) பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

REFURBISHMENT OF 2,000 M3/DAY CAPACITY WATER TREATMENT PLANT AT HORANA EXPORT PROCESSING ZONE

CONTRACT NO:BOI/TS/HEPZ/2023/02/08.02.033

மேற்படி பெறுகைக்காக குறித்த கேள்விப் பத்திரங்களை ஆங்கில மொழியில் தயாரிக்கப்படுவதுடன் கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களுக்கு 2023.06.10 (சனி) மற்றும் 14.06.2023 (புதன்) நாட்களில் (Daily News) பத்திரிகையில் குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படுவதாக இத்தால் அறிவித்து கொள்கிறோம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

**மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்**

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை மத்தியஸ்தானங்களில் 2023 பிப்ரவரி 28ம் திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கபடாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2023 ஜூன் 21ம் திகதி மு.ப 9.30க்கு நடைபெறும்.

| கிளை / மத்தியஸ்தானம் | மீட்கப்பட வேண்டிய கால எல்லை | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|
| கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்க்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி - கந்த வீதிஇ, கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை, யாழ்ப்பாணம், கொஹுவல நிட்டம்புவ, மாலபே. மாத்தளை, தம்புள்ளை, நவம் மாவத்தை, பொலன்னறுவை மற்றும் கிளிநொச்சி | 2023 பிப்ரவரி 28ம் திகதிக்கு முன் மீட்கபடாத தங்க நகைகள் | சியபத பினான்ஸ், தலைமை காரியாலயம், இல 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08 |

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

பதிவு இலக்கம்: PB 917PQ

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீஎல்சீ
இல 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08

## மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

## இலங்கை ஆசிரியர் சேவையில்

# வருடாந்த இடமாற்றம் 2024

1. மத்திய மாகாணத்திற்குட்பட்ட பாடசாலைகளில் சேவைபுரியும் ஆசிரியர்களிடமிருந்து 2024 ஆம் வருடத்திற்கான ஆசிரிய சேவை இடமாற்றங்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.
2. சகல விண்ணப்பப் படிவங்களும் இவ் அறிவுறுத்தல்கள் விளம்பரப்படுத்தப்பட்ட பின்னர்
   - I. வலயத்திற்குள் மற்றும் வலயங்களுக்கிடையிலான விண்ணப்பங்கள் www.centralprovinceedu.lk இணையத்தளத்தினூடாக நிகழ்நிலை முறையில் (online) 2023 ஜூன் மாதம் 30ம் திகதி அல்லது அதற்கு முன் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும்.
   - II. மாகாணங்களுக்கிடையிலான மற்றும் தேசிய பாடசாலை விண்ணப்பங்கள் 2023 ஜூன் மாதம் 30ம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில், அதிபர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. இடமாற்ற விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்கும் போது,
   - I. வலயத்தினுள் இடமாற்றம் மற்றும் வலயங்களுக்கிடையிலான இடமாற்ற விண்ணப்பங்கள் www.centralprovinceedu.lk எனும் இணையத்தளத்தின் ஊடாக மட்டுமே விண்ணப்பிக்க முடியும். (விண்ணப்பப் படிவங்கள் நிரப்பப்படும் போது உமக்கு விருப்பமான இணையத்தள வசதி உள்ள இடத்தில் நிகழ்நிலையின் ஊடாக (online) விண்ணப்பிக்கலாம் என்பதோடு, அது தொடர்பாக தொழில் நுட்ப நிலையம் மற்றும் பிரதேச கணினிவள நிலையம் (CRC) நிலையத்தினூடாக இணையத்தளத்திற்கு செல்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.)
   - II. மாகாணங்களுக்கு இடையில் மற்றும் தேசிய பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்கும் போது, மத்திய மாகாணக் கல்வி திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தியுள்ள புதிய விண்ணப்பப் படிவத்தை மட்டும் பயன்படுத்தவும். (இவ் விண்ணப்ப படிவத்தை மத்திய மாகாணத்தினுள் மிகவும் அருகில் இருக்கும் வலய கல்விக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.)
   - III. மாகாணங்களுக்கிடையிலான விண்ணப்பங்கள் - 05
   - IV. மாகாண அரச சேவையிலிருந்து தேசிய பாடசாலைகளுக்கான விண்ணப்பங்கள் - 05
   - V. தேசிய பாடசாலையிலிருந்து மாகாண பாடசாலைக்கு விண்ணப்பிக்கும் போது, தேசிய பாடசாலை பணிப்பாளரினால் குறிக்கப்படும் கால வரையறையினுள் அதற்காக வெளியிடப்படும் விண்ணப்பப் படிவத்தில் முன்வைத்தல் வேண்டும்.
   - VI. மேலே III, IV, மற்றும் V ஆகிய விடயங்களுக்கு அமைய முதல் நியமனக் கடிதம் மற்றும் நிரந்தர நியமனக் கடிதம் என்பன உறுதிப்படுத்தப்பட்ட, பிரதிகள் இணைக்கப்பட வேண்டும் என்பதுடன் உறுதியுரையும் பூரணப்படுத்தி இருக்க வேண்டும்.
4. முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் மத்திய மாகாணக் கல்வி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப் படிவங்கள், உரிய திகதியின் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் என்பன நிராகரிக்கப்படும் என்பதை விசேடமாக கருத்திற் கொள்ளவும். (விண்ணப்பப்படிவம் A4 அளவு 4 பக்கங்களில் வடிவமைக்கப்பட்டுள்ளது.)
   - ● வலயத்தினுள், வலயங்களுக்கிடையில் இடமாற்ற விண்ணப்பங்கள் தொடர்பாக மேலதிக செயற்பாடுகள் உரிய வலயக் கல்விக் காரியாலயத்தினாலும், மாகாணக் கல்வி திணைக்களத்தினாலும் இணையத்தளத்தினூடாக செயற்படுத்தப்படும்.
5. சுற்றுநிருப இல. ED/1/27/1/5/1/2007, 2007/20 மற்றும் 2007.12.13 திகதி இடப்பட்ட தேசிய ஆசிரியர் சேவை இடமாற்ற சுற்றுநிருபம் மற்றும் மத்திய மாகாணக் சபையின் தீர்மானங்களின் படி 2024ஆம் வருடத்திற்கான ஆசிரிய சேவை இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.
6. மத்திய மாகாணத்தில் ஆசிரிய சேவை இடமாற்றங்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு அமைவாக செயற்படுத்தப்படும்.
   - I. இடமாற்றத்திற்கான விண்ணப்பப் படிவம் சமர்பிக்கப்படும் போது சேவைக் காலம் 2023.01.01 ஆம் திகதிக்கு கணிக்கப்படும்.
   - II. முதல் நியமனக் கடிதத்தில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைக் கால எல்லையானது 2023.01.01 ஆம் திகதி ஆகும் போது 5 வருடங்களை பூர்த்திசெய்த ஆசிரியர்கள் இடமாற்றம் பெற உரித்துடையவராவர்.
   - III. ஒழுக்காற்று நடவடிக்கை அடிப்படையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
   - IV. மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் மத்திய மாகாணத்தினுள் குறைந்த பட்சம் 5 வருட சேவையினை பூர்த்தி செய்திருத்தலுடன் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் அவசியம்.
7. பாடசாலையில் மேலதிக ஆசிரியர் அல்லது ஒரே பாடசாலையில் 8 வருடங்கள் சேவையாற்றும் ஆசிரியர்கள் இடமாற்றம் கோராத போதிலும் விண்ணப்பபடிவமின்றியே சேவையின் தேவைகருதி அவ் ஆசிரியரை இடமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட நேரிடலாம்.
8. இடமாற்ற விண்ணப்பப் படிவம் இணையத்தளத்திற்குள் பதிவேற்றப்பட்டதும் விண்ணப்பதாரருக்கு பதிவு இலக்கம் வழங்கப்படும்.
9. மாகாணங்களுக்கிடையில் மற்றும் தேசிய பாடசாலைகளுக்கான இடமாற்ற விண்ணப்பப் படிவம் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளுக்காக வலயக் கல்விப்பணிப்பாளர் ஊடாக மத்திய மாகாணக்கல்விப் பணிப்பாளருக்கு கிடைத்த பிறகு அந்த விண்ணப்பப் படிவங்கள் மாகாண கல்விச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படும்.

**எம்.ஜீ.அமரசிரி பியதாச**
**மத்திய மாகாணக் கல்விப்பணிப்பாளர்.**

# விலைமனு அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை – மாத்தளை

மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவுக்கு தேவையான 2 Ultra Sound Scan இயந்திரங்கள் மற்றும் Dental X-ray இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்கு தேவையாக இருப்பதோடு, வைத்தியசாலை சத்திரசிகிச்சை அறை, அவசர சிகிச்சை பிரிவு, PBU பிரிவு ஆகிய பிரிவுகளில் நிறுவப்பட்டிருக்கும் மருத்துவ வாயு கட்டமைப்பை சீரமைத்து முறையாக செயற்படும் நிலைக்கு மாற்ற வேண்டி உள்ளது. அதற்காக தகுதியுடைய முகவர் நிறுவனத்திடம் இருந்து பிராந்திய பெறுகைக் குழு தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வரிசை இலக்கம் | உருப்படி | தேவையான அளவு | ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத வைப்பு | விலைமனுக்களை ஏற்கும் இறுதித் திகதி |
|---|---|---|---|---|---|
| 01 | Ultra Sound Scanner | 02 | DGH/MT/3/9/01-USS | 2,000.00 | 2023.06.23 |
| 02 | Dental X-ray Unit | 01 | DGH/MT/3/9/02-D x-ray | 2,000.00 | 2023.06.23 |
| 03 | Repairing and Commission of Pipe Medical Gas System | | DGH/MT/3/9/03-Medical Gas | 2,000.00 | 2023.06.30 |

02. இதற்காக தயாரிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களை 2023.06.12ஆம் திகதி தொடக்கம் சாதாரண கடமை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில் மற்றும் மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி திகதிகளில் மு.ப. 10.00 வரை மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலை தலைமை அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக தகைமையை பூர்த்தி செய்கின்ற அத்தாட்சி மற்றும் மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலை கணக்கு பிரிவுக்கு பணமாகச் செலுத்திய பின் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 02 பிரதிகளில் தயாரித்து மேலுள்ள அட்டவணையில் அந்தந்த பணிகளின் முன் குறிப்பிடப்பட்டிருக்கும் இறுதித் திகதிகளில் மு.ப. 10.30க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலை கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும். விலைமனுக்கள் இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுவுடன் தொடர்புபட்ட ஒப்பந்த இலக்கத்தை சரியாக குறிப்பிட வேண்டும்.

04. இலக்கம் 03இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவ வாயு கட்டமைப்பை சீரமைப்பது தொடர்பான ஒப்பந்த வேலைக்காக விலைமனுக்களை சமர்ப்பிக்கும் நிறுவனங்கள் மூலம் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன் இந்த வைத்தியசாலைக்கு வந்து குறித்த கட்டமைப்பை சிறந்த முறையில் பரீட்சித்துப் பார்த்து விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். அதற்காக முன்வைக்கும் விலைமனுக்கள் அனைத்து விபரக்குறிப்புகள், துணைக்கருவிகள் போன்ற வரைபடங்களையும் கொண்ட சரியான முறையில் முன்வைக்க வேண்டும் என்பதோடு குறித்த விலைமனுவுக்கு பின் முன்வைக்கப்படும் திருத்த விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது என்பதையும் கருத்தில் கொள்ளவும்.

06. விலைமனுக்களை ஏற்கும் காலம் முடிவுற்ற உடன் வைத்தியசாலை அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதோடு விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு அந்த சந்தர்ப்பத்திற்கு பங்கேற்க முடியும். விலைமனு ஆவணங்களை அலுவலக நேரங்களில் கட்டணம் இன்றி பரீட்சிக்க முடியும். விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை பிராந்திய பெறுகைக் குழு வசமானது.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக் குழு**
**மாவட்ட பொது வைத்தியசாலை**
**மாத்தளை**
**2023.06.09**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 யூன் 15ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 180,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123I150 | LKA18223L151 | LKA36424F148 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 70,000 | 60,000 | 50,000 | 180,000 |

ஏல விற்பனைத் திகதி : 2023 யூன் 14

தீர்ப்பனவுத் திகதி : 2023 யூன் 16

வழங்கப்படும் திகதி : 2023 யூன் 16

விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 யூன் 14, புதன்கிழமை மு.ப. 11.00

விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான பொருட்கள் வழங்குதல்

1. **வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொள்முதல் குழுவின் தலைவரினால்** வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா பிரதம பொறியியலாளர் பிரிவில் Graded Aggregates for Base Courses (ABC) பெற்றுக்கொள்வதற்காக தகுதியான மனுதாரர்களினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
வீதி அபிவிருத்தி அதிகார சபை - **www.rda.gov.lk**

தலைவர்,
பிரதேச கொள்முதல் குழு.
தலைமை பொறியியலாளர் பிரிவு.
வீதி அபிவிருத்தி அதிகாரசபை
கம்பஹா.

---

## மீட்கப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை

31.03.2022ம் திகதி வரை வன்னிப் பிராந்தியத்தில் உள்ள மக்கள் வங்கியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 17.07.2023ஆம் திகதி வரை மீட்கப்படாத நகைகள் கீழே கொடுக்கப்பட்ட திகதி மற்றும் இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஒவ்வொரு நாளும் முற்பகல் 9.00 மணிமுதல் ஏல விற்பனை நடைபெறும்.

| | |
|---|---|
| ஏலவிற்பனை திகதி | 18.07.2023 மற்றும் 19.07.2023 |
| ஏலவிற்பனை இடம் | பிராந்திய காரியாலயம், வன்னி, வவுனியா |
| அடகு வைக்கப்பட்ட கிளை | முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், முருங்கன், செட்டிக்குளம் |
| அடகு வைக்கப்பட்ட சேவை நிலையம் | புதுக்குடியிருப்பு, ஒட்டுச்சுட்டான், வவுனியா நகரம், நெடுங்கேணி, பேசாலை, கிளிநொச்சி நகரம், பளை, மல்லாவி, கனகராயன்குளம், நானாட்டான், சிலாவத்துறை |

மேற்படி ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி ரத்துச்செய்யவோ, ஒன்று சேர்க்கவோ அல்லது பிற்போடவோ வங்கிக்கு சகல அதிகாரமும் உண்டு.

**பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமைச்செயலகம், வன்னி**
**தொலைபேசி இல: 024 2225054 / 024-2222972**

PEOPLE'S BANK
Pride of the Nation

---

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு-10

இலங்கை தேசிய வைத்தியசாலைக்குத் தேவையான பின்வரும் உருப்படிகளை வழங்குவதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது, தகைமையுள்ள பதிவு செய்யப்பெற்றுள்ள நிறுவனங்கள் மற்றும் தனி நபர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம் என்பதுடன், உருப்படி ஒன்றிற்காக மீளளிக்கப்படாத ரூபா 1,500.00 இற்கான பைப்பொன்றை இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவில் செலுத்தி, பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வார வேலை நாட்களில் இவ் வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் இதற்கான நிபந்தனைகளுடன் கூடிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

உருப்படிகளிற்கான விலைமனுக்களைச் சமர்ப்பிக்கையில் மாதிரிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும் பின்னர் சமர்ப்பிக்கப்படும் மாதிரிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் மு.ப. 10.00 இற்கு இவ் வைத்தியசாலையின் கணக்காளர் பிரிவில் இவ்விலைமனுக்கள் திறக்கப்படும்.

| | உருப்படி | விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இறுதி தினம் | விலைமனுக்கள் திறக்கப்படும் தினம் |
|---|---|---|---|
| 01 | இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு சிவிளின் விசிரிகள், சுவர் விசிரிகள் மற்றும் மின் உபகரணங்களை வழங்கல் SE/05/2023-1 | 2023.07.04 | 2023.07.05 |
| 02 | இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு ஹாட்வெயார் துணை உருப்புக்களை வழங்கல் SE/02/2023-1 | 2023.07.04 | 2023.07.05 |

**வி. வைத்தியர் டப்ளியு.கே. விக்ரமசிங்ஹ**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை,**
**கொழும்பு-10.**

---

## சிறுவர்களுக்கான மஹாவிலாச்சிய கல்வி/ நிலையத்தை கூட்டிணைப்பதற்கான சட்டம்

ஹேரத் முதியன்சேலகே சமன்பிரிய ஹேரத் ஆகிய நான், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தின் கட்டளைகளின் 53 (1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "சிறுவர்களுக்கான மஹாவிலாச்சிய கல்வி நிலையத்தினை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்ட மூலமொன்றை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் சட்ட மூலத்தின் நோக்கமானது பொதுக் குறிக்கோள்களை கொண்ட மேற்கூறிய மையத்தை கூட்டிணைப்பதாகும்.

(1) தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தும் தேவைகளையும், மற்றும் எதிர்கால இலக்குகளை அடையத் தேவையான திறன்களை அபிவிருத்தி செய்யும் கல்வி மையங்களை நடாத்துதல்.

(2) தகவல் தொழிநுட்ப சேவைகளுக்கான தொழிற் பயிற்சி நிலையத்தினை நிறுவுதல்

(3) பின்தங்கிய பகுதிகளிலுள்ள இளைஞர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை வழங்க ஏற்பாடு செய்தல்.

(4) திறன்கள் மற்றும் கற்றல் மேம்படுத்தல் உரிய நேரங்களில் தேவைப்படும் அனைத்தையும் திட்டமிட்டு நடத்துதல்.

**ஹேரத் முதியன்சேலகே சமன்பிரிய ஹேரத்,**
**பாராளுமன்ற உறுப்பினர்**

---

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

Repeat Your Ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய. காலி

### சிற்றுண்டிச்சாலையை நடத்திச் செல்லல் - 2023

2023/2024 ஆம் ஆண்டு காலத்திற்காக காலி கராப்பிட்டிய வைத்தியசாலை சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்கு தகுதியுடைய விலைமனு விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பங்களை கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை பணிப்பாளருக்கு சமர்ப்பித்து கோரிக்கை கடிதத்துடன் ஆவணக் கட்டணமாக ரூப 3000.00 மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணம் ஒன்றை கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து 2023.06.12ஆம் திகதி தொடக்கம் 2023.07.04ஆம் திகதி வரை வார நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரையான காலத்தில் வைத்தியசாலை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

02. விலைமனு விண்ணப்பங்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "2023/2024 ஆம் ஆண்டுக்காக சிற்றுண்டிச்சாலை சேவையை வழங்கல்" என்று குறிப்பிட்டு 2023.07.05ஆம் திகதி மு.ப. 10.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு தலைவர், பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய, காலி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது தலைமை அலுவலகத்தின் தலைமை கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டிக்கு இடுவதை மேற்கொள்ளல் வேண்டும்.

03. விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் அந்த இடத்தில் விலைமனு விண்ணப்பங்கள் திறக்கப்படுவதோடு விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு அந்த சந்தர்ப்பத்திற்கு பங்கேற்பதற்கு அனுமதி அளிக்கப்படும்.

04. விலைமனு ஆவணங்களை கட்டணம் இன்றி தலைமை கணக்காளர் அலுவலகத்தில் பரீட்சிப்பதற்கு முடியும்.

05. அரச ஒப்பந்த நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெற்றிருக்கும் நபர்களுக்கு விலைமனு ஆவணம் வழங்கப்படமாட்டாது.

06. குறித்த விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியையேனும் ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழு வசமானது.

07. மேலதிக விபரங்களுக்கு 091-2232159 என்ற தொலைபேசி இலக்கத்தில் தலைமை கணக்காளரை அழைக்கவும்.

**தலைவர்**
**பெறுகைக் குழு**
**போதனா வைத்தியசாலை,**
**கராப்பிட்டிய, காலி.**

---

## சிறந்த தங்க நகை ஏல விற்பனை

வ/ப இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கி மகாசங்கத்தின் அடகுப் பிரதிநிதிகளாக செயற்படும் வ/ப களனி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான கீழே பெயர் குறிப்பிடப்படும் கிராமிய வங்கிக் கிளைகளில் 2022.01.01 முதல் 2022.03.31 வரை அடகு வைக்கப்பட்டு 2023.07.01 வரை மீட்கப்படாத அடகுத் தங்க நகைகள் 2023.07.01 முற்பகல் 9.00 இற்கு பியகம வீதி சிங்ஹாரமுல்லவில் அமைந்துள்ள வ/ப களனி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**கிளைகள்**

| | | |
|---|---|---|
| **வெதமுல்ல** | **பேலியகொட** | **களனி** |
| **வனவாசல** | **பேலி/பட்டிய** | **ஹிம்புட்டுவெல்கொட** |
| **பொல்ஹேன** | **திப்பிட்டிகொட** | **தொரணசந்தி** |

**தலைவர்,**
**வ/ப களனி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**பியகம வீதி,**
**சிங்ஹாரமுல்ல,**
**களனி.**
**தொலைபேசி இலக்கம்:- 0112911356/ 2987069**

---

## UTI பெர்ஷிப் (பிரைவேட்) லிமிடட், DSV பெர்ஷிப் (பிரைவேட்) லிமிடட் ஆகியவற்றின் ஒருங்கிணைத்தல்

UTI பெர்ஷிப் (பிரைவேட்) லிமிடட் நிறுவனத்தின் (PV 3379) பணிப்பாளர் சபை ("ஒருங்கிணைக்கும் நிறுவனம்) மற்றும் DSV பெர்ஷிப் (பிரைவேட்) லிமிடட் நிறுவனத்தின் (PV 128708) பணிப்பாளர் சபையினால் குறித்த நிறுவனங்கள் ஒருங்கிணைக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் குறித்த இரு நிறுவனங்களும் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்கம் கொண்ட நிறுவன சட்டத்தின் (திருத்தப்பட்ட) பிரிவு 239 இன் கீழ் ஒரே சட்டபூர்வ நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட்டு DSV பெர்ஷிப் (பிரைவேட்) லிமிடட் ஆக கருதப்படும்.

குறித்த ஒருங்கிணைப்பு செய்யப்படும் இரு நிறுவனங்களினதும் பங்குதாரர்களினால் 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்கம் கொண்ட நிறுவன சட்டத்தின் (திருத்தப்பட்ட) பிரிவு 241(5) இன் படி 2023 ஜூலை மாதம் 05 ஆம் திகதி நடைபெற்ற விஷேட பொது கூட்டமொன்றில் ஒருங்கிணைப்பதற்கு கட்டுப்பட்டுள்ளது.

ஒருங்கிணைப்புத் திட்டத்தினை பங்குதாரர்கள் ஆராய்வதற்கு அல்லது அனுமதிப்பதற்கு முன்வைப்பதுடன், அவ்வாறு அனுமதிக்கப்பட்டால், குறித்த திட்டம் 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி அல்லது நிறுவன பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் நடைமுறைபடுத்தப்படும்.

ஒருங்கிணைப்புத் திட்டத்தின் பிரதிகள் எந்தவொரு பங்குதாரருக்கும் அல்லது கடன்தாரரொருவருக்கு அல்லது ஒருங்கிணைக்கும் நிறுவனத்தின் அல்லது DSV பெர்ஷிப் (பிரைவேட்) லிமிடட் நிறுவன இணைப்பு இருக்கும் இல 72C, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு-04 எனும் அமைவிடத்திற்கு பொதுவான விற்பனை நேரத்திற்குள் சமுகம் தந்து ஒருங்கிணைப்புத் திட்டத்தின் பிரதியொன்றை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்.

**சபையின் ஆணையின் பிரகாரம்.**
**நிறுவன செயலாளர்**
**UTI பெர்ஷிப் (பிரைவேட்) லிமிடட்**
**நிறுவன செயலாளர்**
**DSV பெர்ஷிப் (பிரைவேட்) லிமிடட்**

---

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 03 மெற்றிக் தொன் விட்டமின் முன்கலவைகளை (Vitamin Premix) வழங்குதல்

**விலைமனு இல. SLTL/TB/05/2023**

1. இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 03 மெற்றிக் விட்டமின் முன்கலவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை ஊடாக, விலைமனுச் செயற்பாடானது மேற்கொள்ளப்படும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சிரேஷ்ட முகாமையாளரிமிருந்து +94-0112228533 எனும் தொலைபேசி இலக்கத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் பின்வரும் முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.30 மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையே விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. இந்தப் பெறுகையில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றுள்ள இலங்கைச் சந்தைக்கு விட்டமின் முன்கலவைகளை வழங்கும் உற்பத்தியாளர்கள் அல்லது ஏக நியமன முகவர்கள் / உற்பத்தியாளர்களினால் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு மட்டுமே விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். வெளிநாட்டு முதன்மையாளர்களினால் நியமன முகவர்கள் / அங்கீகரிக்கப்பட்ட இலங்கை முகவர்களாக நியமிக்கப்படாதவர்களின் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்படும் PCA3 சகிதம் மீளளிக்கப்படாத கட்டணமாக 6,650.00 ரூபா ரொக்கப் பணத்தை ஜா-எல, கப்புவத்த, த.பெ. இல. 17, நீர்கொழும்பு வீதி, இலங்கை திரிபோஷ லிமிடட்டின் சிரேஷ்ட முகாமையாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் செய்வதன் பேரில் 2023-06-23ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் 2023-06-26ஆம் திகதி பி. ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 2023-06-26ஆம் திகதி முதல் 2023-09-25ஆம் திகதி வரையான 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 360,000.00 ரூபா தொகைக்கான 2023-06-26ஆம் திகதி முதல் 2023-10-23ஆம் திகதி வரையான 119 நாட்கள் செல்லுபடியாகும் மத்திய வங்கியால் அனுமதிக்கப்படும் இலங்கையில் தொழிற்படும் ஒரு வர்த்தக வங்கியால் வழங்கப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. மேற்குறிப்பிடப்பட்ட நேரத்தில் (2023-06-26ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு) விலைமனுதாரர்களின் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் பின்வரும் முகவரியில் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்,**
**த. பெ. 17, நீர்கொழும்பு வீதி,**
**கப்புவத்த, ஜா-எல.**

# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**Ref No : Q 275/23**

## நுகர்வு அடிப்படையில் BLOOD GAS ANALYZER இன் வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல்

A. 5 ஆண்டு காலத்திற்காக (01 Blood Gas Analyzer இன் வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல்) இயந்திர முதலீட்டு அடிப்படையுடன் நுகர்வுக்குரிய Blood Gas Analyzer இன் வழங்கலுக்காக ஆர்வமுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

B. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

C. ரூபா மூவாயிரம் (3,000/-) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023.06.12ஆம் திகதி தொடக்கம் 2023.07.05ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 15.00 மணி வரை நுகோகொடை, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, வழங்கல்கள் அலுவலகத்திற்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை பெற முடியும்.

D. விலைமனுக்களை 2023.07.06ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, தலபத்பிட்டிய, நுகேகொடை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது சேர்ப்பது அல்லது தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுவதற்கு முடியும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.

E. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு வைத்தியசாலை சபை அறையில் 2023.06.28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது**
**வைத்தியசாலை**
**தலபத்பிட்டிய**
**நுகேகொடை**



OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# இலங்கை துறைமுக அதிகார சபை

## வழங்கல் பிரிவு – மத்திய சமையலறைக்காக 2023ஆம் ஆண்டிற்காக உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் ஆண்டிற்காக கீழ்க்காணும் பொருட்களை வழங்கும் முகமாக இலங்கை துறைமுக அதிகாரசபையில் பதிவு செய்வதற்கு விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், கூட்டுத்தாபனம், கூட்டுறவு சங்கம் உட்பட அரச நிறுவனங்கள், தனியார் மற்றும் கூட்டு நிறுவனங்கள் மற்றும் வேறு நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 01 | அரிசி (முழுமையாக கல், மணல் நீக்கப்பட்டது) | 11 | தேங்காய் எண்ணெய் |
| 02 | கருவாடு வகைகள் | 12 | கோழியிறைச்சி |
| 03 | மரக்கறி, கிழங்கு வகை, கஜு மற்றும் கஜு துண்டுகள் | 13 | பிஸ்கட் |
| 04 | தேங்காய், தேங்காய் பால்/ கிறீம் | 14 | பால்மா |
| 05 | முட்டை | 15 | டின்பால் |
| 06 | பலசரக்கு மற்றும் தானிய வகைகள் | 16 | ஜேம் |
| 07 | வாழைப்பழம் | 17 | மாஜரின் |
| 08 | வெள்ளை சீனி | 18 | எல்பீகேஸ் |
| 09 | தேயிலை/ கோப்பித்தூள் | 19 | உணவுப் பொதி பெட்டி (காட்போட்) |
| 10 | சுற்றாடலுக்கு இசைவான லன்ச் ஷீட் மற்றும் குரோசரி பேக் (7”x10” மற்றும் 9”x12”) | 20 | மீன் |
| | | 21 | குடிநீர் (போத்தலில் இடப்பட்ட) |
| | | 22 | இடியப்பம், புட்டு போன்றன. |

**நிபந்தனைகள்:**

01. வழங்குநராக பதிவு செய்வதற்கு விரும்பும் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்கள் தமது பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. மேற்படி 1-22 வரையான பொருட்கள் சார்பாக பதிவு செய்வதற்காக அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை தேவையான விண்ணப்பங்களை ஒவ்வொரு பொருளுக்கும் ரூபா 1000/- மற்றும் வெட் வரியை செலுத்திய பின்பு இல. 45, லேடன் பெஸ்டியன் வீதி, கொழும்பு-01 இல் அமைந்துள்ள வழங்கல்கள் பிரிவில் பிரதம முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.
03. வழங்கல்களுக்காக சாதாரணமாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுவதுடன் பதிவு செய்யப்படாத ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்களைக் கோரும் மற்றும் கெள்வனவு செய்யும் உரிமை துறைமுக அதிகார சபைக்கு உரியது.
04. முறையாக விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு மற்றும் சரியான நேரத்தில் பொருட்களை வழங்குவதற்கு தவறுபவர்கள் துறைமுக அதிகார சபையினால் விநியோகிக்கப்படும் ஓடர்களில் குறிப்பிடப்படும் விபரங்கள் மற்றும் மாதிரிக்கு அமைவாக சிறந்த நிலையிலுள்ள பொருட்களை வழங்குவதற்கு தவறுகின்றவர்கள் வழங்குநர்களின் பெயர் பதிவு செய்துள்ள வழங்குநர்களின் பெயர் பட்டியலில் இருந்து நீக்கப்படுவார்கள்.
05. சகல விண்ணப்பங்களும் ‘2023ஆம் ஆண்டிற்கு உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்’ என்று உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் பிரதம முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்) வழங்கல்கள் பிரிவு, இலங்கை துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பெஸ்டியன் வீதி. கொழும்பு-01 என்ற முகவரிக்கு 2023.06.08ம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும். மேற்படி முகவரியில் உள்ள பிரதம முகாமையாளரின் அலுவலகத்திலும் இவ் விண்ணப்பபங்களை ஒப்படைக்கலாம்.
06. மேலதிக விபரங்களை 2323102, 2432866, 2328342, 2320250, 2482761, 2482499 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதம முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்)**
**வழங்கல்கள் பிரிவு**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பெஸ்டியன் வீதி.**
**கொழும்பு-01.**

# இலங்கை வங்கி

## 1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.03.29 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு ஜே.எம்.ஆர்.என்.எல். குணதிலக்க அத்தாட்சிப்படுத்திய 2017.05.25ஆம் திகதிய 458ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் வசதி மீது 2022.12.18 வரையான வட்டியும் முதலுமாக 12,202,631.03 ரூபாயும் (பன்னிரண்டு மில்லியன் இருநூற்றியிரண்டாயிரத்து அறுநூற்று முப்பத்தொரு ரூபாய் மூன்று சதம்) அத்துடன் 2022.12.19ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பதின்மூன்று வீதப்படி (13%) 10,000,000.00 ரூபாய் (பத்து மில்லியன் ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் கலாகேத, குளியாப்பிட்டிய வீதி, தம்பதெனியா என்ற முகவரியைச் சேர்ந்த திரு. அபேசிங்க அப்புஹாமிலாகே சந்தன செனரத் அபேசிங்க என்பவரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.

2. பிரசித்த நொத்தாரிசு ஜே.எம்.ஆர்.என்.எல். குணதிலக்க அத்தாட்சிப்படுத்திய 2017.05.25ஆம் திகதிய 458ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் வசதி மீதான மேற்குறித்த 12,202,631.03 ரூபாயையும் (பன்னிரண்டு மில்லியன் இருநூற்றியிரண்டாயிரத்து அறுநூற்று முப்பத்தொரு ரூபாய் மூன்று சதம்) அத்துடன் 2022.12.19ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்ற முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி தம்பதெனியா கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற் குறிப்பிடப்பட்ட அட்டவணை

‘மல்வான மற்றும் (மரடகொல்ல தோட்டத்தின்) ஒரு பகுதியான சுதுமதுவம்’ என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.ஏ.பி ஜயந்த பெரேரா தயாரித்த 1995.07.20ஆம் திகதிய 660ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 30 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பற்று உடுகஹ கோரளை மேற்கு நாரம்மல பிரதேச சபை எல்லைகட்குட்பட்ட நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள இல. 1037, மரண்டகொல்ல கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள தல்கஸ்முனுவ கிராமத்தில் அமைந்துள்ளதோடு வடக்கில் இதே வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 31ஐயும் கிழக்கில் இதே வரைபடத்தில் உள்ள காணித்துண்டு R1ஐயும் (20 அடி அகலமுள்ள பாதைக்கான ஒதுக்கம்) தெற்கில் இதே வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 29ஐயும் மேற்கில் இதே வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 14ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணியானது அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் பதினைந்து பேர்ச்சுகள் (ஏ0-ரூ0-பே15) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு குளியாப்பிட்டிய காணிப் பதிவகத்தில் F1248/259 c/o T 110/75 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலும் இக்காணி, காணித்துண்டு R1 (20 அடி அகலமுள்ள பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளப்படுத்தப்பட்ட பாதை மற்றும் குறித்த 660ஆம் இலக்க வரைபடத்தில் ஏனேயோருடன் இணைந்து பொதுவாகப் பயன்படுத்தவென குறிப்பிடப்பட்டுள்ள 182ஆம் இலக்கக் காணித்துண்டு (பிரதேச சபைப் பாதைக்கான ஒதுக்கம்) என்பவற்றின் மீதான வழி உரிமையையும் கொண்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி
திரு. கே.என்.எம்.டி.பீ. தர்மகீர்த்தி
முகாமையாளர்
இலங்கை வங்கி
தம்பதெனியா

ஏலவிலை கூறுவோர் மேற்குறித்த ஆதனத்தின் உரிமைத்துவ உறுதியையும் அதனோடு இணைந்த ஆவணங்களையும் 037 226 6144 இலங்கை வங்கிக் கிளையில் பார்வையிடலாம்.

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை

# வெற்றிடங்கள்

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை (CAASL) மூலோபாய திட்டமிடல், தொழில்முறை வழிகாட்டுதல் மற்றும் கடுமையான கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் நன்கு நிறுவப்பட்ட ஒழுங்குமுறை கட்டமைப்பின் கீழ், தேசிய சட்டத் தேவைகள் மற்றும் சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு (SARPs) இணங்க பாதுகாப்பான திறமையான வழக்கமான மற்றும் சுற்றுச்சூழல் நட்புடன் தேசிய சிவில் விமானச் சேவை அமைப்பின் செயல்பாட்டை உறுதி செய்கிறது. இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையானது பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் சிறந்த தகுதி மற்றும் விரிவான அனுபவத்தைக் கொண்ட ஆற்றல் மிக்க, அனுபவமுள்ள மற்றும் சுய உந்துதல் கொண்ட பணியாளர்களைத் தேடுகின்றது.

## மேலதிக பணிப்பாளர் நாயகம்
**பதவிக் குறியீடு HM-2-2-ADG பதவிகளின் எண்ணிக்கை - 01**

**வழங்கப்படும் சம்பளம்:** (சம்பள அளவு (HM 2-2) - ரூபா 93,020 – 12 x 2,700 -125,420 - 02/2016(I) முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 183,320.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு, மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 135 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்).
- இதற்குத் தேவையான தகுதிகளைக் கொண்ட வெற்றிகரமான வேட்பாளருக்கு விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு ஏறத்தாழ 280,000.00 ரூபா.
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

### தகைமைகள் மற்றும் அனுபவம்

#### வெளிவாரி விண்ணப்பதாரிகள்

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம்

   மற்றும்

2. விமான சேவைகள் துறையில் பட்டப் பின்படிப்பு (முதுமாணி) பட்டத் தகைமை அல்லது விமான சேவைகள் சார்ந்த அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம் அல்லது சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் எட்டு (08) வாரங்களுக்குக் குறையாத விமான சேவைகள் பாதுகாப்பு, வானோடல் சேவைகள் அல்லது விமானநிலைய பணிகள் (Aerodromes), பணியாளர் உரிமங்கள், விமானச் செயற்பாடுகள், விமானத் தகுதித்துறையில் (Airworthiness) (முகாமைத்துவ மட்டம்) கற்றை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

   மற்றும்

3. கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் விமான சேவைகள் துறையில் குறைந்தபட்சம் இருபது (20) வருடங்கள் சேவை அனுபவம்.

#### உள்வாரி விண்ணப்பதாரிகள்

1. பிரதிப் பணிப்பாளர் நாயகம் (Aeronautical ஒழுங்குமுறை சேவைகள்), பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விமானப் பாதுகாப்பு ஒழுங்குமுறைகள்), பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கூட்டு வர்த்தக முகாமைத்துவம்) அல்லது பிரதிப் பணிப்பாளர் நாயகம் (வான் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஒழுங்குமுறைகள்) என்பவற்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால அனுபவம்.

   மற்றும்

2. கடந்த ஐந்து வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு, மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்

   மற்றும்

3. பல - ஒழுங்குக் குழுக்களை வழிநடத்துவதற்கும் மற்றும் தலைமை தாங்குவதற்குமான நிரூபிக்கப்பட்ட திறன், மனித மற்றும் ஏனைய வளங்களின் சரியான வளர்ச்சி மற்றும் திறமையான முகாமைத்துவத்தில் அனுபவம்

   மற்றும்

4. வருடாந்த செயற்றிறன் ''சிறந்த'' அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல்.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விமானப் பாதுகாப்பு ஒழுங்குவிதி)
**பதவிக் குறியீடு HM-2-1-DDG2 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**வழங்கப்படும் சம்பளம்:** (சம்பள அளவு (HM 2-1) - ரூபா 91,645 – 12 x 2,700 -124,045 - 02/2016(I) முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 181,945.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு, மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 135 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்).
- இதற்குத் தேவையான தகுதிகளைக் கொண்ட வெற்றிகரமான வேட்பாளருக்கு விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு ஏறத்தாழ 285,000.00 ரூபா.
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

### தகைமைகள் மற்றும் அனுபவம்

#### வெளிவாரி விண்ணப்பதாரிகள்

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம்

   மற்றும்

2. விமான சேவைகள் துறையில் பட்டப் பின்படிப்பு (முதுமாணி) பட்டத் தகைமை அல்லது விமான சேவைகள் சார்ந்த அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம் அல்லது சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் எட்டு (08) வாரங்களுக்குக் குறையாத விமான சேவைகள் பாதுகாப்பு, வானோடல் சேவைகள் அல்லது விமானநிலைய பணிகள் (Aerodromes), பணியாளர் உரிமங்கள், விமானச் செயற்பாடுகள், விமான தகுதித்துறையில் (முகாமைத்துவ மட்டம்) கற்றை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

   மற்றும்

3. கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் பணியாளர் உரிமங்கள், விமானச் செயற்பாடுகள், விமான தகுதித்துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதினெட்டு (18) வருடங்கள் சேவை அனுபவம்.

#### உள்வாரி விண்ணப்பதாரிகள்

**விருப்பத் தேர்வு 1**

வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்

**விருப்பத் தேர்வு 2**

1. பணிப்பாளர் (நிறுவனப் பயிற்சி மற்றும் பணியாளர் உரிமங்கள்), பணிப்பாளர் (விமான செயற்பாடுகள்) அல்லது பணிப்பாளர் (விமான ஒழுங்குவிதிகள் மற்றும் பணியாளர் உரிமங்கள், விமானச் செயற்பாடுகள், விமானத் தகுதித்துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால சேவை அனுபவம்.

   மற்றும்

2. கடந்த ஐந்து வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு, மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்

   மற்றும்

3. பணியாளர் உரிமம், விமானச் செயற்பாடுகள் அல்லது விமானத் தகுதித்துறையில் ஆறு (06) வாரங்களுக்குக் குறையாத ICAO வினால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிக் கற்றை நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல்

   மற்றும்

4. வருடாந்த செயற்றிறன் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல்.

   மற்றும்

5. பல - ஒழுங்குக் குழுக்களை வழிநடத்துவதற்கும் மற்றும் தலைமை தாங்குவதற்குமான நிரூபிக்கப்பட்ட திறன், மனித மற்றும் ஏனைய வளங்களின் சரியான வளர்ச்சி மற்றும் திறமையான முகாமைத்துவத்தில் அனுபவம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் (வான் போக்குவரத்து பாதுகாப்பு ஒழுங்குவிதி)
**பதவிக் குறியீடு HM-2-1-DDG4 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**வழங்கப்படும் சம்பளம்:** (சம்பள அளவு (HM 1-1) - ரூபா 91,645 – 12 x 2,700 -124,045 - 02/2016(I) முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 184,945.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு, மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 135 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்).
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

### தகைமைகள் மற்றும் அனுபவம்

#### வெளிவாரி விண்ணப்பதாரிகள்

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம்

   மற்றும்

2. விமான சேவைகள், போக்குவரத்து, பொருளாதாரம், முகாமைத்துவம், ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டமிடல் துறையில் பட்டப் பின்படிப்பு (முதுமாணி) பட்டத் தகைமை அல்லது விமான சேவைகள், போக்குவரத்து, பொருளாதாரம், முகாமைத்துவம், ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டமிடல் சார்ந்த அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம்

   மற்றும்

3. கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் போக்குவரத்து, விமான சேவை பாதுகாப்பு, முகாமைத்துவம் அல்லது ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டமிடலில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதினெட்டு (18) வருடங்கள் சேவை அனுபவம்.

#### உள்வாரி விண்ணப்பதாரிகள்

**விருப்பத் தேர்வு 1**

வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்

**விருப்பத் தேர்வு 2**

1. பணிப்பாளர் (சுற்றாடல், ஆராய்ச்சி மற்றும் செயற்றிட்டங்கள்) பணிப்பாளர் (விமானசேவை பாதுகாப்பு) அல்லது பணிப்பாளர் (வான் போக்குவரத்து மற்றும் பொருளாதார ஒழுங்குவிதிகள்) ஆக ஐந்து (05) வருட கால சேவை அனுபவம்.

   மற்றும்

2. கடந்த ஐந்து வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு, மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்

   மற்றும்

3. வருடாந்த செயற்றிறன் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல்.

   மற்றும்

4. பல - ஒழுங்குக் குழுக்களை வழிநடத்துவதற்கும் மற்றும் தலைமை தாங்குவதற்குமான நிரூபிக்கப்பட்ட திறன், மனித மற்றும் ஏனைய வளங்களின் சரியான வளர்ச்சி மற்றும் திறமையான முகாமைத்துவத்தில் அனுபவம்

## பணிப்பாளர் (Aerodromes)
**பதவிக் குறியீடு HM-1-1-D2 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**வழங்கப்படும் சம்பளம்:** (சம்பள அளவு (HM 1-1) - ரூபா 80,295 – 15 x 2,270 -114,345 - 02/2016(I) முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 170,595.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு, மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 115 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்).
- இதற்குத் தேவையான தகுதிகளைக் கொண்ட வெற்றிகரமான வேட்பாளருக்கு விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு ஏறத்தாழ 225,000.00 ரூபா.
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

### தகைமைகள் மற்றும் அனுபவம்

#### வெளிவாரி விண்ணப்பதாரிகள்

**விருப்பத் தேர்வு 1**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் பௌதிக விஞ்ஞானம், வான் பரப்பு பொறியியல், வான் போக்குவரத்து, வானூர்தி பொறியியல் அல்லது சிவில் பொறியியல் துறையில் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம்

   மற்றும்

2. விமான சேவைகள் துறையில் பட்டப் பின்படிப்பு (முதுமாணி) பட்டத் தகைமை அல்லது விமான சேவைகள் சார்ந்த அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம் அல்லது சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் நடாத்தப்படும் ஆறு (06) வாரங்களுக்குக் குறையாத Aerodrome சான்றிதழ் கற்கை நெறியை வெற்றிகரமான நிறைவு செய்திருத்தல் அல்லது சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் அங்கீகரிக்கப்படும் நிகரான வேறேதும் தகைமைகள்

   மற்றும்

3. கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம். அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் Aerodrome செயற்பாட்டுத் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் சேவை அனுபவம்.

**விருப்பத் தேர்வு 2**

1. பட்டப் பின்படிப்புத் தகைமை (விமான சேவைகள் துறையில் முதுமாணி பட்டம்) அல்லது விமான சேவைகள் சார்ந்த அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம் அல்லது சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் நடாத்தப்படும் ஆறு (06) வாரங்களுக்குக் குறையாத கற்கை நெறியை வெற்றிகரமான நிறைவு செய்திருத்தல் அல்லது சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் அங்கீகரிக்கப்படும் நிகரான வேறேதும் தகைமைகள்

   மற்றும்

2. கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம். அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் Aerodrome துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதின்மூன்று (13) வருடங்கள் சேவை அனுபவம்.

#### உள்வாரி விண்ணப்பதாரிகள்

**விருப்பத் தேர்வு 1**

வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமை களைப் பெற்றிருத்தல்

**விருப்பத் தேர்வு 2**

பின்வரும் சகலதையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. Aerodrome துறையில் முகாமைத்துவ வகுதி (MM1-1) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலத்தை திருப்திகரமான பூர்த்தி செய்திருத்தல்
2. கடந்த ஐந்து (5) வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு, மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்
3. சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் நடாத்தப்படும் ஆறு (06) வாரங்களுக்குக் குறையாத Aerodromes மற்றும் Aerodrome சான்றிதழ் கற்கை நெறியை வெற்றிகரமான நிறைவு செய்திருத்தல்
4. கடந்த ஐந்து (05) வருடங்களுக்கான வருடாந்த செயற்றிறன் மதிப்பீட்டில் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல்.

## பணிப்பாளர் (விமான பதிவு மற்றும் விமான தகுதித்துறை)
**பதவிக் குறியீடு HM-1-1-D7 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**வழங்கப்படும் சம்பளம்:** (சம்பள அளவு (HM 1-1) - ரூபா 80,295 – 15 x 2,270 -114,345 - 02/2016(I) முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 170,595.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு, மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 115 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்).
- இதற்குத் தேவையான தகுதிகளைக் கொண்ட வெற்றிகரமான வேட்பாளருக்கு விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு ஏறத்தாழ 305,000.00 ரூபா.
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

### தகைமைகள் மற்றும் அனுபவம்

#### வெளிவாரி விண்ணப்பதாரிகள்

**விருப்பத் தேர்வு 1**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் வானூர்தி பொறியியல் அல்லது பொறிமுறை பொறியியல் துறையில் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம்

   அத்துடன்

2. விமான சேவைகள் துறையில் பட்டப் பின்படிப்பு (முதுமாணி) பட்டத் தகைமை அல்லது விமான சேவைகள் சார்ந்த அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம் அல்லது சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் நடாத்தப்படும் ஆறு (06) வாரங்களுக்குக் குறையாத விமானப் பாதுகாப்பு / விமான தகுதித்துறை (முகாமைத்துவ மட்டம்) கற்கை நெறியை வெற்றிகரமான நிறைவு செய்திருத்தல் அல்லது சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் அங்கீகரிக்கப்படும் நிகரான வேறேதும் தகைமைகள்

   மற்றும்

3. கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம். அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் விமானப் பராமரிப்புப் பொறியியலாளராக குறைந்தபட்சம் பத்து (10) வருட கால அனுபவம்.

**விருப்பத் தேர்வு 2**

1. விமான சேவைகள் சார்ந்த அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம் அல்லது சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் நடாத்தப்படும் ஆறு (06) வாரங்களுக்குக் குறையாத விமான தகுதித்துறையில் அரசாங்க விமானப் பரீட்சகர் உட்பட விதானப் பராமரிப்பு பயிற்சிக் கற்கை நெறியை பின்பற்றியிருத்தல் வேண்டும். அல்லது சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் அங்கீகரிக்கப்படும் நிகரான வேறேதும் தகைமைகள்

   மற்றும்

2. விமானப் பராமரிப்புப் பொறியியலாளராக குறைந்தபட்சம் இருபது (20) வருட கால அனுபவம்.

#### உள்வாரி விண்ணப்பதாரிகள்

**விருப்பத் தேர்வு 1**

வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமை களைப் பெற்றிருத்தல்

**விருப்பத் தேர்வு 2**

பின்வரும் சகலதையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. விமான தகுதித்துறையில் முகாமைத்துவ வகுதி (MM1-1) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலத்தை திருப்திகரமான பூர்த்தி செய்திருத்தல்
2. கடந்த ஐந்து (5) வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு, மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்
3. சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் நடாத்தப்படும் ஆறு (06) வாரங்களுக்குக் குறையாத அரசாங்கப் பாதுகாப்பு பரீட்சகர் விமான தகுதித்துறை மற்றும் விமான பராமரிப்புத் துறையில் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்படும் உயர்தர பயிற்சிக் கற்கை நெறியை வெற்றிகரமான நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
4. கடந்த ஐந்து (05) வருடங்களுக்கான வருடாந்த செயற்றிறன் மதிப்பீட்டில் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல்.

## பணிப்பாளர் (விமான செயற்பாடுகள்)
**பதவிக் குறியீடு HM-1-1-D6 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**வழங்கப்படும் சம்பளம்:** (சம்பள அளவு (HM 1-1) - ரூபா 80,295 – 15 x 2,270 -114,345 - 02/2016(I) முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 170,595.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு, மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 115 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்).
- இதற்குத் தேவையான தகுதிகளைக் கொண்ட வெற்றிகரமான வேட்பாளருக்கு விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு ஏறத்தாழ 260,000.00 ரூபா.
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

### தகைமைகள் மற்றும் அனுபவம்

#### வெளிவாரி விண்ணப்பதாரிகள்

**விருப்பத் தேர்வு 1**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் இயற்கை விஞ்ஞானம், வான் போக்குவரத்து, வான்பரப்பு அல்லது வானூர்தி பொறியியல் துறையில் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம்

   அத்துடன்

2. விமான சேவைகள் துறையில் பட்டப் பின்படிப்பு (முதுமாணி) பட்டத் தகைமை அல்லது விமான சேவைகள் சார்ந்த அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் இணை அங்கத்துவம் அல்லது சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் நடாத்தப்படும் ஆறு (06) வாரங்களுக்குக் குறையாத விமானப் பாதுகாப்பு / விமான செயற்பாடுகள் (முகாமைத்துவ மட்டம்) பயிற்சிக் கற்கை நெறியை வெற்றிகரமான நிறைவு செய்திருத்தல் அல்லது சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் அங்கீகரிக்கப்படும் நிகரான வேறேதும் தகைமைகள்

   மற்றும்

3. கூட்த்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம். அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் வர்த்தக விமானமோட்டியாக அல்லது விமானம் அனுப்புபவராக (Flight Dispatcher) குறைந்தபட்சம் பத்து (10) வருட கால அனுபவம்.

**விருப்பத் தேர்வு 2**

1. விமான சேவைகள் சார்ந்த அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம் அல்லது சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் நடாத்தப்படும் ஆறு (06) வாரங்களுக்குக் குறையாத அரசாங்க விமானப் பரீட்சகர் / விமான செயற்பாடுகள் உட்பட பயிற்சிக் கற்கை நெறியை பின்பற்றியிருத்தல் வேண்டும். அல்லது சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் அங்கீகரிக்கப்படும் நிகரான வேறேதும் தகைமைகள்

   மற்றும்

2. கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம். அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் வர்த்தக விமானமோட்டியாக அல்லது விமானம் அனுப்புபவராக (Flight Dispatcher) குறைந்தபட்சம் பத்து (10) வருட கால அனுபவம்.

#### உள்வாரி விண்ணப்பதாரிகள்

**விருப்பத் தேர்வு 1**

வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்

**விருப்பத் தேர்வு 2**

பின்வரும் சகலதையும் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1. விமான செயற்பாடுகள் துறையில் முகாமைத்துவ வகுதி (MM1-1) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலத்தை திருப்திகரமாக பூர்த்தி செய்திருத்தல்
2. கடந்த ஐந்து (5) வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு, மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்
3. சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் நடாத்தப்படும் ஆறு (06) வாரங்களுக்குக் குறையாத அரசாங்கப் பாதுகாப்பு பரீட்சகர் உட்பட விமான செயற்பாடுகள் துறையில் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்படும் உயர்தர பயிற்சிக் கற்கை நெறியை வெற்றிகரமான நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
4. கடந்த ஐந்து (05) வருடங்களுக்கான வருடாந்த செயற்றின் மதிப்பீட்டில் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல்.

## பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்)
**பதவிக் குறியீடு HM-1-1-D12 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**வழங்கப்படும் சம்பளம்:** (சம்பள அளவு (HM 1-1) - ரூபா 80,295 – 15 x 2,270 -114,345 - 02/2016(I) முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 173,595.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு, மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- எரிபொருள் கொடுப்பனவு மாதத்திற்கு 115 லீட்டர் (அந்த நேரத்தில் உள்ள எரிபொருள் விலையில்).
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

### தகைமைகள் மற்றும் அனுபவம்

#### வெளிவாரி விண்ணப்பதாரிகள்

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் ஒரு இளமானிப் பட்டம்

   மற்றும்

2. கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச் சபை / நிறுவனம். அரசு சார்ந்த நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதின்மூன்று (13) வருட கால அனுபவம்.

#### உள்வாரி விண்ணப்பதாரிகள்

**விருப்பத் தேர்வு 1**

வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப் படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்

**விருப்பத் தேர்வு 2**

தகவல் மற்றும் தொடர்பாடல் துறையில் முகாமைத்துவ வகுதி (MM1-1) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலத்தை திருப்திகரமான பூர்த்தி செய்திருத்தல்

## சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (விமானம் பறக்கும் செயற்பாடுகள்)
**பதவிக் குறியீடு MA-5-3-OP 1 பதவிகளின் எண்ணிக்கை - 01**

**வழங்கப்படும் சம்பளம்:** (சம்பள அளவு (MA 5-3) - ரூபா 46,375 – 10 x 1,135 – 20 x 1,240 – 82,525 - 02/2016(I) முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்)

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 110,875.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு, மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- இதற்குத் தேவையான தகுதிகளைக் கொண்ட வெற்றிகரமான வேட்பாளருக்கு விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு ஏறத்தாழ 270,000.00 ரூபா.
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

### தகைமைகள் மற்றும் அனுபவம்

#### வெளிவாரி விண்ணப்பதாரிகள்

1. Instrument Rating சகிதம் வர்த்தக விமானமோட்டி உரிமம் மற்றும் உறைநிலை வான் போக்குவரத்து விமானமோட்டி உரிம ஒப்புதல்

   மற்றும்

2. Flight Instructor Rating சகிதம் 500 மணித்தியாலங்களுக்குக் குறையாத அறிவுறுத்தல்கள் அல்லது 1000 மணித்தியாலங்களுக்குக் குறையாத மொத்த பறக்கும் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## வயதெல்லை

| பதவிகள் | வயதெல்லை | குறிப்புகள் |
|---|---|---|
| மேலதிக பணிப்பாளர் நாயகம் / பிரதிப் பணிப்பாளர் நாயகம் / பணிப்பாளர் | 35 - 55 வயதுக்கிடையில் | இலங்கை விமானப்படை, வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனம், உள்ளூர் விமான சேவைகள் அல்லது பறக்கும்பாடசாலைகள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. |
| சிவில் விமானசேவை பரீட்சகர்கள் | 22 - 45 வயதுக்கிடையில் | இலங்கை விமானப்படை, வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனம், உள்ளூர் விமான சேவைகள் அல்லது பறக்கும் பாடசாலைகள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. |

- மேலதிக தகவல்கள், பதவி விபரங்கள், விசேட தொழில்நுட்பக் கொடுப்பனவிற்கான தேவைப்பாடுகள் மற்றும் நிலையான விண்ணப்பப் படிவத்தை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் www.caa.lk எனும் உத்தியோகபூர்வ இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்
- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த பதவி / பதவிகளுக்காக தகுதியை நிரூபிக்க தகுதிகள் மற்றும் அனுபவத்திற்கான ஆவண ஆதாரங்களின் பிரதிகளுடன் விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்
- நிலையான விண்ணப்பப் படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். எந்தவொரு அரசாங்க நிறுவனத்திலும் சேவை செய்யும் விண்ணப்பதாரர்கள் நிறுவனத்தின் தலைவர் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.
- உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பின்வரும் முகவரிக்கு 2023-06-26ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபால் மூலம் employment@caa.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அவை அங்கீகரிக்கப்படும்.
- விண்ணப்பங்களை சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை, இல. 152/1, மினுவாங்கொட வீதி, கட்டுநாயக்க எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
- ஒன்றுக்கு மேற்பட்ட பதவிக்காக விண்ணப்பிப்பதாயின், ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியான விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- தகுதித் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வு / பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

**சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் / பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை,**
**இல. 152/1, மினுவாங்கொட வீதி,**
**கட்டுநாயக்க.**
**2023-06-12.**

# சிறு விளம்பரம்


## மோட்டார் வாகனங்கள்

108

### நிஸான் கார் விற்பனைக்கு

SP GY-0739 Nissan cefiro, 1999, Car அதியுய ர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி. இல. 310, காலி வீதி, கொ ழும்பு 03. தொலைபேசி 0714542 9 58
035385

117




### வேன்கள் விற்பனைக்கு

539260 Nissan, 1988, வேன் அதியு யர் விலைக்கு வெ லிபெல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 0 7 1 1 210 8 10
035381

54 5 6 3 4 Toyota Tow n a c e - 1989, அதி யு யர் விலை க்கு வெ லிபெல் பினான்ஸ் பி எல்சி இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி : 0714542 9 58
035389

122



### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

SG YX - 7076 Bajaj, 2012, SP HA-3582 Bajaj 2002, Three-wheel அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி. இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபே சி 0 7 1 1 2 1 0 8 1 0
035393

www.adz.lk
it's what you want

---

அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்

நீதி, சிறைச்சாலைகள் நடவடிக்கை மற்றும் அரசியலமைப்பு சட்ட மறுசீரமைப்பு அமைச்சு

## அறிவியல் அதிகாரி (Scientific Officer) (ஒப்பந்தம்) பதவிக்கு ஆட் சேர்த்தல்

**அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் விஞ்ஞான அலுவலர் (ஒப்பந்தம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்துகொள்வதற்காக தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

மின்னஞ்சல் முகவரி மற்றும் வட்ஸ்அப் இலக்கம் உட்பட சுயமாகத்தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமொன்று, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர், அரசாங்க இரசாயனப்பகுப்பாய்வாளர் திணைக்களம், இல. 31, இசுரு மாவத்தை, பெலவத்த, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் "விஞ்ஞான அலுவலர் (ஒப்பந்தம்) பதவிக்கு ஆட் சேர்த்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் : 2023.06.26**

1. பதவி : அறிவியல் அலுவலர்
2. வெற்றிடங்களின் எண்ணிக்கை : 15
3. பதவி நியமனத் தன்மை : ஒப்பந்தம்
4. கால எல்லை : 30 மாதங்கள்
5. மாதாந்த சம்பளம் :
   - I. ரூபா 47,615/- மற்றும் அரச அலுவலர்களிற்கு அரசினால் அவ்வப்போது வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகள் (உ+ம்: வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு, வரவு செலவு, கொடுப்பனவு, தொலைபேசிக் கொடுப்பனவு)
   - II. ஊழியர் சேமநல நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். (சேவை பெறுநரின் பங்களிப்பு 8% சேவை வழங்குநரின் பங்களிப்பு 12%)
6. ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் :
   - I. இலங்கைப் பிரசையாக இருத்தல்
   - II. சிறந்த நல்ஒழுக்கமுள்ளவராக இருத்தல்
   - III. பதவிக்கான கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கான உடல் மற்றும் உள ஆரோக்கியம் பெற்றுள்ளவராக இருத்தல்.
   - IV. ஆட்சேர்ப்புக்கான அனைத்துத் தகைமைகளையும் இவ் அறிவித்தல் வெளியிடப்படும் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தி இருத்தல்.
7. வயதெல்லை : 35 வருடங்களிற்குக் கீழ்
8. கல்வித் தகைமைகள் :
   - I. பதவி : அறிவியல் அலுவலர் (ஒப்பந்தம்) - நீதி/ சட்ட மருத்துவ ஆய்வுகூடம் பதவிகள் 09
   - (அ) முதலாம் அல்லது இரண்டாம் தரச் சித்தியுடன் இரசாயனவியல் விஞ்ஞானத்தில் விஷேட பட்டம்

   அல்லது

   - II. புள்ளி விபரம்

| தொடர் இலக்கம் | தகைமை/ தகவுத்திறன்கள் | புள்ளி |
|---|---|---|
| 1 | கல்வித் தகைமைகள் | 80 |
| 2 | ஆட்சேர்ப்புக்கான துறை அனுபவம் | 10 |
| 3 | நேர்முகத்தேர்வில் காட்டும் திறன் | 10 |

10. **ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள்**
    - I. குறித்த தினத்தன்று பணியை ஏற்றுக்கொள்ளத் தவறும் அல்லது நிராகரிக்கும் அல்லது பணியை ஏற்காது தவிர்த்து இருக்கும் விண்ணப்பதாரர்களின் நியமனத்தை இரத்துச் செய்யும் அதிகாரம் நியமனம் செய்யும் அலுவலருக்கு உரித்தாகும்.
    - II. நேர்முகத் தேர்வுக்கு சமுகமளித்தல் மாத்திரம் நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமைகளிற்கான பூரணத்துவம் எனக் கணிக்கப்பட்ட மாட்டாது.
    - III. அரசாங்க சேவை தொடர்பாக ஏற்கனவே இயற்றப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் இயற்றப்படவுள்ள நிபந்தனைகள், உத்தரவுகள் மானியங்கள், விதிமுறைகள் மற்றும் சட்டதிட்டங்கள் இந்நியமனங்கள் தொடர்பாகவும் அமுலாகும்.
    - IV. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக தீர்மானிக்கும் அதிகாரம், அரசாங்க இரசாயனப்பகுப்பாய்வாளருக்கு உரித்தாகும்.
11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரமாகும் இவ்அறிவித்தலின் மொழிபெயர்ப்புகளில் எந்தவொரு பொறுத்தமற்ற அல்லது அநுகூலமற்ற கருத்துக்கள் இடம் பெறின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலில் காணப்படும் விடயங்கள் அமுலாக்கப்படும்.

**தீபிகா செனெவிரத்ன**
**அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர்.**
**2023 ஜூன் 12.**

---

Repeat Your ad For Better Offers

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

*சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு*

சப்ரகமுவ மாகாண சபை

## பெறுகை அழைத்தல்

சப்ரகமுவ மாகாண சபையின் சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில்கள் அமைச்சினால் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் (NCB) முறைமையின் கீழ் பின்வரும் பதார்த்தங்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்காகத் திறந்த விலைமனுக்கோரப்படுகின்றது.

| விலைமனு இலக்கம் | விபரம் | விலைமனுப் படிவக் கட்டணம் ரூபா | விலைமனுப் பிணைத் தொகை ரூபா |
|---|---|---|---|
| SRIM25/ 2023/ DIND/04 | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு முன்வரும் 06 மாதங்களிற்கு நூல் வழங்கல் | 3,000.00 | 200,000.00 |
| | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்வரும் 06 மாதங்களிற்கு டை (DYE) இரசாயனப் பதார்த்தங்களை வழங்கல் | 1,500.00 | 15,000.00 |

2023.06.14 முதல் 2023.07.06 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை அமைச்சின் அலுவலகத்தில் விலைமனுப்படிவங்களைப் பரிசீலனை செய்து கொள்ளலாமென்பதுடன், இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, வழங்குநரின் எழுத்துருவ விண்ணப்பமொன்றுடன், மேற்படி படிவக் கட்டணத்தை இலங்கை வங்கியின் இரத்தினபுரி கிளைக்கணக்கு இலக்கம் 0001016456 இன் கீழ், செயலாளர், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு என்ற பெயரில் வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து இவ்வலுவலகத்தில் விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

குறித்த விலைமனுப்படிவங்களுடன் மேற்படி பெறுமானத்திற்கான, செயலாளர் சமூக நலன்புரி நன்னடத்தை, மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி என்ற பெயரில் உடன் காசாக மாற்றிக் கொள்ளக்கூடியவாறு, அரச அங்கீகாரம் பெற்றுள்ள வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்ட நிபந்தனைகளற்ற (unconditional, on demand) விலைமனுப் பிணையமொன்று அல்லது குறித்த தொகையை இலங்கை வங்கியின் இரத்தினபுரி கிளையின் கணக்கு இலக்கம் 0001016456 இற்கு செயலாளர், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு என்ற பெயரில் வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். குறித்த அனைத்து நிபந்தனைகளும் மற்றும் விபரக்குறிப்புகளும் விலைமனுப்படிவங்களுடன் வழங்கப்படும்.

விலைமனு நிபந்தனையின் பிரகாரம் பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள், 2023.07.07 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம். தபாலில் நேரிடும் தாமதங்கள் தொடர்பாக பொறுப்பேற்கப்படமாட்டாது.

விலைமனுத்திறத்தல் 2023.07.07 அன்று பி.ப. 2.30 இற்கு (அளவில்) மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் எழுத்துருவ அனுமதிபெற்றுள்ள நபரொருவர் சமுகமளித்திருக்கலாம். குறித்த தினமானது, அரசாங்க விடுமுறை தினமொன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்டால், அதற்கடுத்த அலுவல தினம் விலைமனுத்திறக்கப்படும் தினமாகக் கருதப்படல் வேண்டும்.

விலைமனுவை முழுமையாக அல்லது பகுதிகளாக அல்லது ஏற்றுக்கொள்ளும், நிராகரிக்கும் அல்லது அது தொடர்பான தீர்மானிக்கும் உரிமை பெறுகைக்குழுவின் தலைவருக்கு உரித்தாகும்.

**ஏ.எஸ்.ஜே. கொடெல்வத்த,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு,**
**கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில்கள் அமைச்சு**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம் - இரத்தினபுரி,**
**தொ.பே. - 045-2222145, 045-2228137**

---

## கேள்விக்கான அழைப்பு !

### வடமேல் மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்

### ஆரம்ப சுகாதார சேவை அமைப்பை வலுவூட்டும் வேலைத் திட்டத்தின் கீழ் மருத்துவ உபகரணங்களை வழங்குதல், உருவாக்குதல் 2023ஆம் ஆண்டு

மருத்துவ உபகரணங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் பராமரித்தலுக்காக 2023 ஜூன் 12ம் திகதி மு.ப. 9.00 முதல் 2023 ஜூலை 05 மு.ப. 10.00 வரை கீழ்க்காணும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

02. குருநாகல், நீர்கொழும்பு வீதி, வடமேல் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் காசாளரிடம் 2023 ஜூன் 12ம் திகதி மு.ப. 9.00 முதல் 2023 ஜூலை 04 பி.ப. 3.00 வரை கீழ்க்காணும் கேள்வி வைப்பை செலுத்தி கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் கேள்வி ஆவணங்களை அரச வேலை செய்யும் மேற்படி தினம் மற்றும் நேரங்களில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

| கோவை விபரம் | மருத்துவ உபகரண விபரம் | அளவு | கேள்விப் பிணை | மீளளிக்கப்பட-ாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|
| NWP/PDHS/FN08/ME1/2023/1 | Anesthetic Machine with Ventilator | 5 | 350,000.00 | 10,000.00 |
| NWP/PDHS/FN08/ME1/2023/2 | Baby Warmer | 2 | 50,000.00 | 2,500.00 |
| NWP/PDHS/FN08/ME1/2023/3 | Caphnograph Multi Monitor ( High End ) | 7 | 420,000.00 | 13,500.00 |
| NWP/PDHS/FN08/ME1/2023/4 | CTG Machine | 10 | 90,000.00 | 2,500.00 |
| NWP/PDHS/FN08/ME1/2023/5 | Defibrillator | 7 | 77,000.00 | 2,500.00 |
| NWP/PDHS/FN08/ME1/2023/6 | Dermatological Laser System | 1 | 100,000.00 | 2,500.00 |
| NWP/PDHS/FN08/ME1/2023/7 | Diathermy Machine | 4 | 60,000.00 | 2,500.00 |
| NWP/PDHS/FN08/ME1/2023/8 | Electric Muscles Stimulator | 1 | 9,000.00 | 1,000.00 |
| NWP/PDHS/FN08/ME1/2023/9 | Laparoscopic System (High end) | 1 | 350,000.00 | 5,000.00 |
| NWP/PDHS/FN08/ME1/2023/10 | Mini Autoclave | 14 | 140,000.00 | 4,000.00 |
| NWP/PDHS/FN08/ME1/2023/11 | Mortuary Cooler | 3 | 180,000.00 | 5,000.00 |
| NWP/PDHS/FN08/ME1/2023/12 | Multi Monitors | 10 | 600,000.00 | 15,000.00 |
| NWP/PDHS/FN08/ME1/2023/13 | Neonatal ventilator | 2 | 120,000.00 | 3,500.00 |
| NWP/PDHS/FN08/ME1/2023/14 | OT Lamp Over head | 5 | 250,000.00 | 4,000.00 |
| NWP/PDHS/FN08/ME1/2023/15 | OT Table | 7 | 525,000.00 | 15,000.00 |
| NWP/PDHS/FN08/ME1/2023/16 | Hematology analyzer | 9 | 400,000.00 | 10,000.00 |

04. பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் " Supply of Medical Equipment 2023" மற்றும் கோவை விபரத்தை குறிப்பிட்டு 2023 ஜூலை 05 மு.ப. 10.00 இற்கு முன் பிரதம கணக்காளர், வடமேல் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, நீர்கொழும்பு வீதி, புவக்கஸ்சந்தி, குருநாகல் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மேற்படி முகவரியில் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

05. 2023 ஜூலை 05 மு.ப. 10.15 இற்கு வடமேல் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

06. இக் கேள்வி கோரல் பற்றிய மேலதிக விபரங்களை தெளிவுபடுத்திக் கொள்வதற்காக 037-2223231, 037-2223479, 037-7393390 என்ற தொ.பே. இலக்கத்தை அழைத்து வடமேல் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பிரதம கணக்காளரிடம் விசாரிக்கவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்,**
**வடமேல் மாகாணகம்,**
**குருநாகல்.**

---

கமி நவீகரண வ்யாபृதிய / விவசாய நவீனமயமாக்கல் திட்டம் / Agriculture Modernization Project

THE WORLD BANK

கமத்தொழில் அமைச்சு / Ministry of Agriculture

Funded by The European Union

## கமத்தொழில் அமைச்சு
## விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம்
### திட்ட ஊழியர்களின் ஆட்சேர்ப்பு

போட்டிரீதியான மற்றும் சந்தைப்படுத்தலுக்கான பொருட்களை உற்பத்தி செய்தல், சந்தை தேவைக்கான திறனை மேம்படுத்தல் மற்றும் வர்த்தக மயமாக்கலை அதிகரிக்கும் நோக்கிற்கு சிற்றுடைமை விவசாயிகளுக்கு உதவுவதற்கு நாட்டின் கூட்டு மூலோபாயத்துடன் (CPS) உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் நிதி உதவியோடு கமத்தொழில் அமைச்சு விவசாயத்துறையை நவீனப்படுத்தும் திட்டத்தை (ASMP) செயற்படுத்தி வருகிறது. திட்ட அமுலாக்கல் காலத்தின் எஞ்சிய காலம் சுமார் 18 மாதங்கள் இருப்பதோடு திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு 90.23 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் (உலக வங்கியின் கடன் 64.23 அமெரிக்க டொலர்களுடன் ஐ.ஒ. மானியம் 26.00 அமெரிக்க மில்லியன் டொலர்கள்). 2019.03.05 இன் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின்படி கொழும்பில் அமைந்துள்ள திட்ட முகாமைத்துவ பிரிவின் (PMU) பின்வரும் பதவி நிலையை பூர்த்தி செய்வதற்கு கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விவசாய விஞ்ஞானி (**PS – 3**) - 01 பதவி
(திட்ட முகாமைத்துவ பிரிவு - கொழும்பு)

01. விவசாய விஞ்ஞானி (**PS 3**)
- தேவையான தகைமைகள்

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
**அல்லது**
தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு இணையான தகைமை ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமை.
**அல்லது**
தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் முறை நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட ஒரு இணை அங்கத்துவம்/ அதனையொத்த ஒரு தொழில்முறை தகைமை.
**அத்துடன்**
முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவம்

II. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
**அல்லது**
தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு இணையான தகைமை ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகைமை.
**அல்லது**
தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட ஒரு இணை அங்கத்துவம்/ அதனையொத்த ஒரு தொழில்முறை தகைமை.
**மற்றும்**
தொடர்புடைய துறையில் பட்டப் பின்படிப்பு பட்டம் அல்லது தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட கூட்டு நிறுவன/ பட்டய அங்கத்துவம் அல்லது அதனையொத்த தொழில்முறை தகைமை.
**அத்துடன்**
முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 08 ஆண்டுகள் அனுபவம்

III. அகில இலங்கை அரசாங்க சேவை ஒன்றில் வகுப்பு 1 அதிகாரி அல்லது தொடர்புடைய துறையில் அதனையொத்த அந்தஸ்து.
**அத்துடன்**
வகுப்பு 1 பதவியில் குறைந்தது 03 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.
- வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களில் தொழில் அனுபவம், உலக வங்கி நிதியளிக்கப்பட்ட திட்டங்களுக்கு முக்கிய முன்னுரிமை அளிக்கப்படும்.
- பழப் பயிர்கள் தொடர்பில் பிரதானமாக செயற்படுவதால், பழ பயிர்ச்செய்கை மற்றும் இன மேம்பாடுகள் உள்ள பணி அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமைகளாக கருதப்படும்.
- விண்ணப்ப இறுதித் திகதியில் 64 வயதுக்கு மேற்பட்ட அபேட்சகர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்களாவர்.

**தேர்வு முறை:** தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

**சம்பள அளவு:** 2019.03.05 இன் 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் அடிப்படையிலான சம்பளம்.

**பணி நிலை**

2019.03.05 ஆம் திகதியிடப்பட்ட 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய அனைத்து நியமனங்களும் மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்பங்கள்:**

அனைத்து விண்ணப்பதாரர்களும் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் விபரத்துடன் சுயவிபரக் கோவையை சேர்த்து தமது விண்ணப்பங்களை கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு கிடைப்பதற்கு 2023 ஜூன் 26ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தற்போது அரச/ அரச சார்பு சேவைகளில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

- விண்ணப்பத்தைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

**செயலாளர்**
**கமத்தொழில் அமைச்சு**
**விவசாயத் துறையை நவீனப்படுத்தும் திட்டம்**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை**

---



Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to: classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals

# கேள்விக்கான அழைப்பு

(இலங்கை அரசின் மானிய செயற்றிட்டம்)

## விவசாயத் திணைக்களம் - பழைய கலஹா வீதி, பேராதனை

பேராதனை, விவசாயத் திணைக்களத்தின், செயற்றிட்ட மற்றும் பயிற்சி நிலையத்தின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பொருட்களின் பெறுகைக்காக இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன. 2023.06.12 முதல் 2023.06.30 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை செலுத்தி மாதிரிகள் அடங்கிய ஆவணங்களை கீழேயுள்ள முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| கேள்வி இலக்கம் | கொள்வனவு செய்யும் பொருட்கள்/ சேவைகள் | கேள்வி வைப்பு | | |
|---|---|---|---|---|
| | | மீளளிக் கப்படாத | காசாக செலுத்து வதாயின் | வங்கிப் பிணையொன்றை சமர்ப்பிப்பதாயின் |
| செதி/ப/6/2/2023-80 | பயிர் பைகள் 100,000 பீடை எதிர்ப்பு வலைகள் 120 மற்றும் பயிர் அடைப்பு 40ஐ கொள்வனவு செய்தல் | ரூ. 2500.00 | ரூ. 62,500.00 | ரூ. 125,000.00 |
| செதி/ப/6/2/2023-81 | Icecream Dispenser 02இ Fruit Juice Dispenser 04 மற்றும் Hot Beverage Dispenser 10ஐ கொள்வனவு செய்தல் | ரூ. 1500.00 | ரூ. 13,650.00 | ரூ. 27,300.00 |
| செதி/ப/6/2/2023-82 | மேசையுடன் பூங்கா குடை 60ஐ கொள்வனவு செய்தல் | ரூ. 1500.00 | ரூ. 6,000.00 | ரூ. 12,000.00 |

செதி/ப/6/2/2023-80 இற்காக பி.ம.ச. 13ஆம் செயற்றிட்ட வரிசை 8.1 இல் தரப்பட்டுள்ளவாறு குறித்த விண்ணப்பதாரிகள் 1987- இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான பதிவாளரின் கீழ் பதிவு செய்திருப்பதுடன், அங்கு பதிவுச் சான்றிதழின் உறுதி செய்தபிரதியொன்றை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2023.07.04 மு.ப. 10.30 இற்கு முடிவடையும் நகல் பிரதிகளுடன் தயாரிக்கப்பட்ட பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை அதற்கு முன்பு பதிவுத் தபாலில் கீழ்க் காணும் முகவரிக்கு அல்லது விவசாயத் திணைக்களத்தின் செயற்றிட்ட மற்றும் பயிற்சி நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள ஆவணத்தில் குறிப்பிட்டு அப் பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் பொருட்களின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் ஏற்கப்பட்டு முடிவடையும் வேளையில் அவ் இடத்திலேயே கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விகளைச் சமர்ப்பிப்போருக்கு அல்லது அவர்களது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு மாத்திரம் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**செயற்றிட்டப் மற்றும் பயிற்சி நிலையம்,**
**விவசாயத் திணைக்களம்,**
**பழைய கலஹா வீதி, பேராதனை.**

**தொ.பே. இலக்கம் - 081-2389127**

---

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

SRI LANKA IMMIGRATION AND EMIGRATION

## ஆர்வ வெளிப்பாட்டுக்கான விலைமனுக்கோரல் (EOI)

**குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்காக 5,000,000 இலத்திரனியல் கடவுச்சீட்டுகள் (e-Passports) மற்றும் 500,000 'N' தொடர் இயந்திரம் மூலம் படிக்கக்கூடிய வெற்று கடவுச்சீட்டுகள்**
**'N' series blank Machine Readable Passports (MRPs)**
**கொள்வனவு செய்வதற்கு ஆர்வமுள்ள, தகுதியான திறமையான தரப்பினரரினால் அந்தந்த அரசாங்கங்கள் ஊடாக ஆர்வத்தினை வெறிப்படுத்துதல்**

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களமானது ICAO தரநிலைகளுக்கு இணங்க இலத்திரனியல் கடவுச்சீட்டுகளை வழங்குதல், செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் கடவுச்சீட்டு வழங்கும் செயல்முறையை ஒழுங்குபடுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது.

**செயற்திட்டத்தின் நோக்கம்**

1) இலத்திரனியல் கடவுச்சீட்டுகள் (e-Passports) மற்றும் 'N' தொடர் வெற்று இயந்திரம் மூலம் படிக்கக்கூடிய கடவுச்சீட்டுகள் (MRPs) வழங்கல்
2) கடவுச்சீட்டுகள் தனிப்பயனாக்கல் அலகு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட கடவுச்சீட்டுகளை தனிப்பயனாக்கல் செய்தல்.
3) குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கான தேவையான வன்பொருளுடன் கடவுச்சீட்டு தனிப்பயனாக்கல் மென்பொருளை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் செயல்முறைப்படுத்துதல்.

**தகைமைகள்**

இந்த கொள்முதலில் பங்கேற்க விரும்பி, கடந்த ஏழு வருட (07) காலத்தில் (2016-2022) குறைந்தது இரண்டு (02) ஒத்த தன்மை மற்றும் ஒரே மாதிரியான அளவு ஒப்பந்தங்களை முடித்தவர்கள் அல்லது நடைமுறையிலுள்ள மற்றும் அந்தந்த அரசாங்கங்கள் / அத்தகைய அரசாங்கங்களின் வெளிநாட்டு தூதரகங்கள் மூலம் மற்றும் அந்தந்த அரசு அல்லது இலங்கையில் உள்ள தூதரகம் / உயர் ஸ்தானிகராலயத்தின் மூலம் ஆர்வத்தினை வெளிப்படுத்தலாம். மேலும், பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பதாரருக்கு அந்த ஆர்வ வெளிபாட்டினை சமர்ப்பிப்பதற்கு சட்டரீதியான தடைகள் இருக்கக்கூடாது.

**ஆர்வ வெளிப்பாட்டினை சமர்ப்பிப்பதற்கான நடைமுறை**

1) ஆர்வம் காட்டும் விண்ணப்பதாரர் **2023.06.12** ஆம் திகதியிலிருந்து **2023.07.10** ஆம் திகதி வரை திங்கள் முதல் வெள்ளிக்கிழமைக்கிடையில் அலுவலக நாட்களில் **09:00** மணி முதல் **15:00** மணி வரை சமர்ப்பித்து மீளச்செலுத்தப்படாத **இலங்கை ரூபாயில் ஐம்பதாயிரம் (ரூ.50,000.00)** ஆவணக்கட்டணத்தை **பிரதான கணக்காளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 14வது மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லயில்** செலுத்தி அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணமுறை **பணவடிவத்தில்** செலுத்தப்பட வேண்டும்.

2) பூர்த்தி செய்யப்பட்ட ஆர்வ வெளிபாட்டினை **2023-07-11 ஆம் திகதி 14:00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சினால் நியமிக்கப்பட்ட பெறுகை குழு (CAPC),**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,**
**14வது மாடி, "சுஹுருபாய",**
**ஸ்ரீ சுபூதிபுர வீதி,**
**பத்தரமுல்ல, இலங்கை.**

3) ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்தினை அதிகாரப்பூர்வ இணையதளமான www.pubsec.gov.lk இல் பெற்றுக்கொள்ளலாம் மேலும் வேலை நாட்களில் 09:00 மணி முதல் 15:00 மணி வரை அமைச்சினால் நியமிக்கப்பட்ட பெறுகை குழுவின் செயலாளரிடமிருந்து +94112887697/ +94112887307 (நீடிப்பு : 307) தொலைநகல் +94112887784 மற்றும் ca@pubsec.gov.lk மின்னஞ்சல் மூலம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
அமைச்சினால் நியமிக்கப்பட்ட பெறுகை குழு (CAPC),
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு,
14வது மாடி, "சுஹுருபாய",
ஸ்ரீ சுபூதிபுர வீதி,
பத்தரமுல்ல. இலங்கை

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மட்டக்களப்பு

**கிழக்கு மாகாணம்**

## ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை வலுவூட்டல் திட்டம் (PSSP) – 2023

## நிதியிடல் - உலக வங்கி

மட்டக்களப்பு RDHS அலுவலகத்தில் அலுவலக தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு பிராந்திய பெறுகைக் குழு, மட்டக்களப்பு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மூலம் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வ. இல. | குறிப்பு இலக்கம் | தேவையான உருப்படி | அளவு | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | BT/RDHS/FH/PO/PSSP/FUR/01 | அலுவலக பணியிட மேசை 4 in 1 | 20 | 1,500.00 |
| | | மழை அங்கி | 450 | |

**விலைமனு நிபந்தனைகள்**

- மட்டக்களப்பு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு எழுத்துமூலம் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து,
- மட்டக்களப்பு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின், 012 சுப்பர் கிரேட் கிளை, இலங்கை வங்கி 0002699216 என்ற கணக்கு இலக்கத்திற்கு மீளளிக்கப்படாத கட்டணத்தை வைப்புச் செய்து,
- வர்த்தகப் பதிவு சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட சான்றிதழுடன்
- தமது உற்பத்திகளுக்கான உள்ளூர் முகவராக உங்களது நிறுவனத்தை நியமித்ததன் சான்றிதழ்/ கடிதம் ஒன்றுடன்

எந்த ஒரு ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர், முகவர் அல்லது பரிந்துரைக்கப்பட்டவர் 2023.06.12ஆம் திகதி தொடக்கம் 2023.07.04ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை வேலை நாட்களில் இந்த அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் இருந்து விலைமனு விண்ணப்பத்தை பெற முடியும்.

1. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023.07.05ஆம் திகதி மு.ப. 10.30 அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், மட்டக்களப்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது மட்டக்களப்பு RDHS அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்பு பெட்டிக்கு இட வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை 02 பிரதிகளில் தயாரித்தல் வேண்டும் என்பதோடு அசல் மற்றும் நகல் என இரு வெவ்வேறு கடித உறைகளில் மூடப்பட்டு முத்திரையிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "Reference No" என்று குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
2. அனைத்து விலைமனுக்களும் மொத்த விலைமனு பெறுமதியின் 1% விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையின் பெறுமதி மூடப்படும் திகதியில் இருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
3. பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. எந்த ஒரு தெளிவையும் 065 – 2222007 என்ற தொலைபேசி இலக்கத்தில் கணக்காளரிடம் இருந்து பெற முடியும்.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**மட்டக்களப்பு**
**2023.06.12**

---

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

**பாதுகாப்பு அமைச்சு**

## இலங்கை, பாதுகாப்பு அமைச்சிற்கு ஐந்து வருடங்களுக்கு செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் ஒன்பது (9) கார்களை வாடகைக்கு அமர்த்துதல்

**Contract No.: MOD/SUP/08/02/01/2023**

1. இலங்கை பாதுகாப்பு அமைச்சிற்காக ஐந்து வருட கால எல்லைக்கு செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் ஒன்பது (9) கார்களை வாடகைக்கு அமர்த்துவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் சார்பாக பாதுகாப்பு அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் இப்போது முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

   கொள்முதல் செய்ய வேண்டிய வாகனங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் பின்வருமாறு:

| பெறுகை குறிப்பீடு | வாகனங்களின் விளக்கம் | எண்ணிக்கை | விலைமனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| MOD/SUP/08/02/01/2023 | இலங்கை பாதுகாப்பு அமைச்சிற்காக ஐந்து வருட கால எல்லைக்கு செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் ஒன்பது (9) கார்களை வாடகைக்கு அமர்த்துதல் | 09 எண்ணிக்கை | 1,620,000.00 | 25,000.00 |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 0112430860-9 (நீடிப்பு 10504), என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக, 011-2 433517 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாக, **modsupplysl@gmail.com** என்ற மின்னஞ்சலூடாக ஸ்ரீ ஜயவர்தனபுரகோட்டே, பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி, பாதுகாப்பு அமைச்சு, வழங்கலுக்கான கணக்காளரிடமிருந்து பெற்று 20-23.06.12 ஆம் திகதியிலிருந்து 2023.07.04 ஆம் திகதி வரையும் பொது மற்றும் வங்கி விடுமுறைகள் நீங்கலான எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. மேலேயுள்ள பெறுகைக்காக தகைமையுள்ள விலைமனுதாரர்கள் சட்டபூர்வமான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வர்த்தக பெயர்கள் நியதிச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட வர்த்தக பெயர் கட்டளைச்சட்டத்தின் (49 ஆம் அத்தியாயம்) கீழ் வழங்கப்பட்ட கம்பனியொன்றின் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றும் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க (படிவம் 48) பணிப்பாளர்களின் 17 ஆம் இலக்க சட்டத்தின் விபரங்களினதும் பிரதியொன்றையும் விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பதிவின் மூலப்பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுதாரர் நலன்களின் மோதலை கொண்டிராமலும் விலைமனுதாரரின் பெயரானது தேசிய பெறுகை முகவராண்மை / ஆணைக்குழுவினால் தடைசெய்யப்பட்ட கம்பனிகளின் பட்டியலில் சேர்க்கப்படாமலுமிருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் இலங்கை ரூபா தவிர்ந்த ஏனைய நாணயங்களில் விலைமனுக்கோரல்களை சமர்ப்பிக்காமலும் இருப்பதுடன் நிபந்தனையுள்ள விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ளன.
5. 2023.06.12 ஆம் திகதியிலிருந்து 2023.07.04 ஆம் திகதி வரையும் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் சார்பாக மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே, பாதுகாப்பு தலைலையலுவலக கட்டிடத்தொகுதியின் பாதுகாப்பு அமைச்சின் வழங்கல் கிளையிலிருந்து பாதுகாப்பு அமைச்சின் வழங்கலுக்கான கணக்காளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்ய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. 2023.07.05 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023.07.05 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுரகோட்டே, பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி, பாதுகாப்பு அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். விலைமனுதாரரின் சார்பாக சமுகமளிக்கும் பிரதிநிதிகள் நிறுவனத்திலிருந்து சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்ற கடிதமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. விலைமனுக்கோரல் ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள கால எல்லை வரையும் விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் பின்வருமாறு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   i. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவதுமான எந்தவொரு வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.
   ii. பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல்.
   iii. மேலே குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கானதாகவிருத்தல்.
   iv. விலைமனுக்கோரல் ஆவணங்களின் 9 ஆம் பிரிவில் அடக்கப்பட்டுள்ள படிவத்தில், நிபந்தனையற்றதும் விண்ணப்பிக்கும் போது இலகுவாக பெறத்தக்கதான விலைமனுப் பிணையொன்றுடனும் 2023.07.05 ஆம் திகதியிலிருந்து 2023.11.01 ஆம் திகதியன்று வரையும் 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.
9. பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதியானதாகும் என்பதுடன் காலத்திற்கு காலம் வழங்கப்படும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கைகளில் எந்தவொரு மாற்றங்களையும் மேற்கொள்வதற்கான உரிமையை கொள்வனவுக்காரர் கொண்டுள்ளார்.
10. விலைமனுக்களை திறக்கும் நாளுக்கு ஆகக் குறைந்தது மூன்று (3) வேலை நாட்களுக்கு முன்னராக விலைமனு திறத்தலில் பங்குபெறும் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற நபரானவர் அவரது பெயர், தேஅஅ/ கடவுச்சீட்டின் இலக்கம் ஆகியவற்றை பாதுகாப்பு அமைச்சின் I ஆம் பிரதான நிதியியல் அலுவலருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கும்படி விலைமனுதாரர்கள் அறிவுரை வழங்கப்படுகின்றனர். தொலைநகல் இலக்கம்: 011-2433517.
11. மேலதிக தெளிவுறுத்தல்களுக்கு, தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்,

**கணக்காளர் (வழங்கல்),**
**பாதுகாப்பு அமைச்சு,**
**பாதுகாப்பு தலைமையலுவலக கட்டிடத்தொகுதி,**
**ஸ்ரீ ஜயவர்தனபுரகோட்டே.**

**தொலைபேசி: 0112430860-9 (நீடிப்பு: 10504)**
**தொலைநகல் இலக்கம்: 011 2 433517**
**மின்னஞ்சல்: modsupply@gmail.com**

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு.**

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

# ஷானக்க, ஹசரங்கவுக்கு அமெரிக்க லீக் தொடரில் ஆட அனுமதி மறுப்பு



அமெரிக்காவில் முதல் முறை நடைபெறவுள்ள டி20 லீக்கில் பங்கேற்பதற்கு இலங்கை மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் தலைவர் தசுன் ஷானக்க மற்றும் வனிந்து ஹசரங்கவுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இலங்கை வீரர்களுக்கு இரு வெளிநாட்டு லீக்குகளில் ஆடுவதற்கு மாத்திரமே அனுமதி அளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதை அடுத்தே இந்த இருவரதும் அனுமதி மறுக்கப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் தலைமை நிர்வாகி ஆஷ்லி டி சில்வா ஆங்கில பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

முதலாவது மேஜர் லீக் டி20 தொடர் எதிர்வரும் ஜூலை 13 தொடக்கம் 30 ஆம் திகதி வரை டெக்சாஸிலுள்ள கிராண்ட் பிரைரி அரங்கில் நடைபெறவுள்ளது. இதில் ஷானக்க சியாட்டில் ஓர்கஸ் அணியிலும் ஹசரங்க வொசிங்டன் பிரீடம் அணியிலும் ஒப்பந்தமாகியுள்ளனர்.

“வருடத்திற்கு லங்கா பிரீமியர் லீக் மற்றும் முன்மொழியப்பட்டிருக்கும் டி10 லீக் உட்பட நான்கு லீக்குகளில் ஆட மாத்திரமே அனுமதி அளிக்க நாம் (இலங்கை கிரிக்கெட்) தீர்மானித்துள்ளோம். எனவே அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது” என்று டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஷானக்க இந்திய பிரீமியர் லீக்கில் குஜராத் டைடன்ஸ் அணிக்காக ஆடியதோடு பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் பெஷாவர் சல்மி அணிக்காகவும் பங்கேற்றார். அவர் சர்வதேச லீக் டி20 தொடரில் டுபாய் லீக் அணியிலும் இடம்பெற்றிருப்பதால் ஓர் ஆண்டில் மூன்று வெளிநாட்டு லீக் தொடர்களில் ஆடுகிறார்.

மறுபுறம் வனிந்து ஹசரங்க ஏற்கனவே ஐ.பி.எல் தொடரில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கும் ஐ.எல். டி20 தொடரில் டெசேர்ட் வைப்பர்ஸ் அணிக்கும் ஆடுகிறார்.

தேசிய அணியில் இடம்பெற தவறி இருக்கும் பானுக்க ராஜபக்ஷ இந்த ஆண்டில் நான்கு வெளிநாட்டு லீக்குகளில் ஆடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

‘சில வீரர்கள் இரண்டுக்கு மேற்பட்ட லீக்குகளில் ஆடியுள்ளனர் என்பது உண்மைதான், ஆனால் எதிர்காலத்தில் அவர்கள் இரண்டு வெளிநாட்டு லீக்குகளில் மாத்திரமே அனுமதிக்கப்படுவார்கள்’ என்று இலங்கை கிரிக்கெட் செயலாளர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஹசரங்க இந்த ஆண்டு பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் குவெட்டா கிளாடியேட்டர்ஸ் அணிக்காக ஆடவிருந்தபோதும் பணிச் சுமையால் வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகக் கிண்ணத்திற்கு தகுதிபெற சிம்பாப்வே பயணித்தது இலங்கை

## ‘அழுத்தம் இல்லை’ என்கிறார் தசுன்



உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் பங்கேற்பதற்காக கடந்த சனிக்கிழமை (10) சிம்பாப்வே நோக்கி புறப்பட்டுச் சென்ற இலங்கை அணித் தலைவர் தசுன் ஷானக்க, இந்தியாவில் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறும் உலகக் கிண்ணத்திற்கு இலங்கை தகுதி பெறும் என்று உறுதியாக நம்புவதாக தெரிவித்தார்.

கடந்த 42 ஆண்டுகளில் முதல் முறையாக இலங்கை அணி உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெறவில்லை. உலகக் கிண்ண சுப்பர் லீக்கில் முதல் எட்டு அணிகளுக்குள் முன்னேறாத நிலையிலேயே இலங்கைக்கு இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனால் மேற்கிந்திய தீவுகள், அயர்லாந்து, போட்டியை நடத்தும் சிம்பாப்வே மற்றும் அமெரிக்க உட்பட 10 அணிகள் பங்கேற்கும் தகுதிகாண் போட்டியில் இலங்கை ஆட வேண்டி உள்ளது.

“எந்த அழுத்தத்தையும் நான் உணரவில்லை. கடந்த இரு டி20 உலகக் கிண்ணப் போட்டிகளையும் கருத்தில் கொண்டால், இது நான் ஆடும் மூன்றாவது தகுதிகாண் சுற்றாகும்” என்று சிம்பாப்வே புறப்பட்டுச் செல்லும் முன்னர் ஷானக்க தெரிவித்தார்.

“அமெரிக்கா, நெதர்லாந்து மற்றும் அயர்லாந்து போன்ற நாடுகள் கடந்த ஒரு தசாப்தத்தில் தமது கிரிக்கெட்டை வளர்த்துக்கொண்டுள்ளன. துரதிருஷ்டவசமாக கடந்த சில ஆண்டுகளில் நாம் திறமையை வெளிப்படுத்தாததாலேயே தகுதிகாண் போட்டியில் ஆட வேண்டி ஏற்பட்டுள்ளது” என்றும் அவர் குறிப்பிட்டார்.

“இதில் எந்த அழுத்தமும் இல்லாதபோதும், இது எமக்கு நல்ல சவாலாக இருக்கும் என நான் நினைப்பதோடு எம்மால் வெற்றிபெற முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்” என்றார்.

ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிராக எதிர்வரும் ஜூன் 19 ஆம் திகதியில் நடைபெறும் போட்டியுடன் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளை ஆரம்பிக்கும் இலங்கை தொடர்ந்து ஓமான், அயர்லாந்து மற்றும் ஸ்கொட்லாந்து அணிகளுடன் மோதவுள்ளது.

முன்னதாக இலங்கை அணி நெதர்லாந்து மற்றும் அமெரிக்காவுடன் பயிற்சிப் போட்டியில் ஆடவுள்ளது. இந்தத் தகுதிகாண் போட்டியில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகளே அடுத்த உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறும்.

இதில் இலங்கை வலுவான அணி ஒன்றுடன் சிம்பாப்வே பயணித்துள்ளது.

# இந்திய–பாகிஸ்தான் இடையிலான ஆசிய கிண்ண இழுபறிக்குத் தீர்வு

## இலங்கைக்கும் போட்டியை நடத்த வாய்ப்பு



ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியை இரு நாடுகளில் நடத்தும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பரிந்துரைத்த கலப்பு முறைக்கு ஆசிய கிரிக்கெட் கௌன்சில் ஒப்புதல் அளிக்க வாய்ப்பு உள்ளதாகவும், இதில் இந்தியா தமது போட்டியை ஆடும் பொதுவான மைதானமாக இலங்கை தேர்வு செய்யப்படவிருப்பதாகவும் செய்தி வெளியாகியுள்ளது.

இந்த முறையின்படி தொடரின் 13 போட்டிகளில் நான்கு தொடக்கம் ஐந்து ஆட்டங்கள் பாகிஸ்தானில் நடத்தப்படவுள்ளது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் போட்டிகள் மற்றும் இந்தியா இடம்பெற்றால் இறுதிப் போட்டியும் இலங்கையில் நடத்தப்படும்.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்று நம்பகமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி ‘கிரிக்கின்போ’ இணையதளம் செய்தி வெளியிட்டுள்ளது. இந்தத் தொடர் எதிர்வரும் செப்டெம்பர் 1 தொடக்கம் 17ஆம் திகதி வரை நடைபெறும். இதில் பாகிஸ்தானில் நடைபெறும் போட்டிகள் லாகூரில் இடம்பெறவுள்ளது.

ஆசிய கிண்ணத்தை நடத்துவது குறித்த சர்ச்சை தீர்க்கப்பட்டிருப்பது இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண போட்டி மற்றும் 2025ஆம் ஆண்டு பாகிஸ்தானில் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ண தொடர்கள் குறித்த இழுபறிகளுக்கு தீர்வு காண்பதாக உள்ளது. இது உலகக் கிண்ணத்திற்காக பாகிஸ்தான் அணி இந்தியா பயணிப்பதற்கான இணக்கம் ஒன்றை எட்டுவதை இலகுவாக்கியுள்ளது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மற்ற நாட்டுக்கு பயணிக்க தயக்கம் காட்டிய நிலையிலேயே கலப்பு முறையில் போட்டியை நடத்த பரிந்துரைக்கப்பட்டது. இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்த நிலையில் தொடரை நடத்தும் உரிமையை தக்கவைக்கும் முயற்சியாகவே பாகிஸ்தான் இந்த கலப்பு முறையை பரிந்துரைத்தது.

இதில் பொதுவான இடமாக முன்னர் ஐக்கிய அரபு இராச்சியத்தை பாகிஸ்தான் பரிந்துரைத்தது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் போட்டியின் டிக்கெட் விற்பனையில் இலாபம் ஈட்டும் முயற்சியாகவே பாக். கிரிக்கெட் சபை இந்த பரிந்துரையை செய்திருந்தது. எனினும் செப்டெம்பர் நடுப்பகுதியில் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நிலவும் கடுமையான வெப்பம் குறித்து பங்களாதேஷ் கவனத்தை எழுப்பியது.

பாக். கிரிக்கெட் சபை தலைவர் நஜாம் செதி, சில வாரங்களுக்கு முன்னரே ஓமான் கிரிக்கெட் சபை தலைவரும் ஆசிய கிரிக்கெட் கௌன்சில் துணைத் தலைவருமான பங்கஜ் கிம்ஜியிடம் இந்த கலப்பு முறை பற்றிய பரிந்துரையை முன்வைத்தார். தற்போதைய அரசியல் பதற்றத்திற்கு மத்தியில் இந்திய அணி பாகிஸ்தான் வர மறுக்கும் நிலையில் அதற்கு தீர்வாகவே இந்த கலப்பு முறை இருந்தது.

எனினும் கலப்பு முறையில் போட்டியை நடத்துவதற்கு தயக்கம் இருந்த நிலையில் ஒட்டுமொத்த தொடரையும் நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை விருப்பம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஒரு தருணத்தில் கலப்பு முறையில் போட்டியை நடத்த இலங்கை மற்றும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபைகளும் தயக்கத்தை வெளியிட்டிருந்தன.

எதிர்வரும் ஒருநாள் உலகக் கிண்ணத்தை ஒட்டி 50 ஓவர் வடிவத்தில் நடைபெறும் இம்முறை ஆசிய கிண்ணத் தொடரில் ஆறு அணிகள் பங்கேற்கின்றன. இதில் நேபாளத்துடன் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஒரே குழுவில் ஆடவுள்ளன. மற்றக் குழுவில் இலங்கை, பங்களாதேஷ் மற்றும் ஆப்கான் அணிகள் இடம்பெற்றுள்ளன.

இறுதிப் போட்டி உட்பட மொத்தம் 13 போட்டிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2022 வடிவத்தைப் போன்றே குழு நிலை போட்டிகளில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் ‘சுப்பர் போர்’ சுற்றுக்கு முன்னேறவுள்ளன. அதில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறும். இதில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் பட்சத்தில் மூன்று முறை பலப்பரீட்சை நடத்த வாய்ப்பு கொண்டதாக அட்டவணை உள்ளது.

# டெஸ்ட் சம்பியனானது ஆஸி.



இந்திய அணியை 209 ஓட்டங்களால் வீழ்த்திய அவுஸ்திரேலிய அணி உலக டெஸ்ட் சம்பியன்சிப் கேடயத்தை வென்றது.

லண்டன், ஓவல் மைதானத்தில் நேற்று (11) நிறைவடைந்த போட்டியில் 444 ஓட்ட வெற்றி இலக்குடன் ஐந்தாவது நாளில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இந்திய அணி 234 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. ஒருவரும் அரைச் சதத்தைக் கூட பெறவில்லை.

அதிரடியாக பந்துவீசிய நெதன் லியோன் 4 விக்கெட்டுகளை பதம்பார்த்ததோடு ஸ்கொட் பொலன்ட் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்

முன்னதாக அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் ஸ்டீவன் ஸ்மித் (121) மற்றும் ட்ரவிஸ் ஹெட்டின் (163) சதத்தின் உதவியோடு 469 ஓட்டங்களை பெற்றதோடு இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 296 ஓட்டங்களையே குவித்தது.

இந்நிலையில் ஆஸி. அணி இரண்டாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுகளை இழந்து 270 ஓட்டங்களை பெற்று இந்திய அணிக்கு சவாலான வெற்றி இலக்கை நிர்ணயித்தது.

இதன்மூலம் உலக டெஸ்ட் சம்பியன்சிப்பை வென்ற இரண்டாவது அணியாக அவுஸ்திரேலியா பதிவானது. கடந்த பருவத்தில் இறுதிப் போட்டியில் இந்தியாவை தோற்கடித்து நியூசிலாந்து சம்பியனானது.

# சம்பியன்ஸ் லீக்: முதல்முறை மான்செஸ்டர் சிட்டி வெற்றி



இன்டர் மிலான் கழகத்தை 1–0 என்ற கோல்களால் வீழ்த்திய மான்செஸ்டர் சிட்டி அணி முதல் முறை சம்பியன்ஸ் லீக் கிண்ணத்தை வென்றது.

ஸ்தான்பூல் அதாதுர்க் ஒலிம்பிக் அரங்கில் கடந்த சனிக்கிழமை இரவு நடந்த போட்டியின் 68ஆவது நிமிடத்தில் ரொட்ரி அடித்த கோல் சிட்டி அணியின் வெற்றி கோலாக இருந்தது. இதன்மூலம் பிரீமியர் லீக் சம்பியன் மற்றும் எப்.ஏ கிண்ண வெற்றியாளரான மான்செஸ்டர் சிட்டி, இந்த மூன்று கிண்ணங்களையும் வென்ற இரண்டாவது இங்கிலாந்து கழகமாக பதிவானது.

முன்னதான 1999ஆம் ஆண்டு மான்செஸ்டர் யுனைடட் பிரீமியர் லீக், எப்.ஏ கிண்ணம் மற்றும் சம்பியன்ஸ் லீக்கை வென்றமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய கால்பந்தின் மிகப்பெரிய கழக மட்ட கிண்ணத்தை சிட்டி முதல் முறை வென்றபோதும் அதன் பயிற்சியாளர் பெப் கார்டியோலா ஒரு பயிற்சியாளராக இந்தக் கிண்ணத்தை வெல்வது இது மூன்றாவது முறையாகும்.

## சர்வதேச செய்திகள்

# ரஷ்யாவுக்கு எதிரான உக்ரைனின் பதில் படை நடவடிக்கை ஆரம்பம்



தமது நாட்டின் மீது படையெடுத்துள்ள ரஷ்ய இராணுவத்திற்கு எதிரான பதில் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி வொலொடிமிர் செலன்ஸ்கி அறிவித்துள்ளார். எனினும் இது பற்றிய மேலதிக விபரங்களை அவர் வெளியிடவில்லை.

உக்ரைன் தலைநகர் கீவில் கடந்த சனிக்கிழமை (10) இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே செலன்ஸ்கி இந்த அறிவிப்பை வெளியிட்டார். உக்ரைன் சென்றுள்ள கனடா நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுடன் இணைந்து நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே இது பற்றி கூறினார்.

உக்ரைனின் பதில் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகும் உக்ரைனிய படைகளுக்கு கணிசமான இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமர் புட்டின் ஒரு தினத்திற்கு முன்னர் வெளியிட்ட அறிவிப்பு குறிப்பித்து செலன்ஸ்கியிடம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்தார். ‘உக்ரைனில் பதில் தாக்குதல் மற்றும் தற்காப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது எந்தக் கட்டத்தில் எந்த அளவில் இருக்கிறது என்பதை நான் கூறப்போவதில்லை’ என்று உக்ரைன் ஜனாதிபதி பதிலளித்தார்.

# காட்டுக்குள் 40 நாட்கள் தனியே உயிர் தப்பிய சிறுவர்கள் மீட்பு



கொலம்பியாவின் அமேசன் காட்டில் பல வாரங்கள் தனியே உயிர் தப்பிய நான்கு சிறுவர்களும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் தமது குடும்பத்தினருடன் இணைந்துள்ளனர்.

உடன்பிறந்தவர்களான 13, ஒன்பது, ஐந்து மற்றும் ஒரு வயதுடைய இந்த சிறுவர்களின் உடல் நிலை பலவீனமாக இருந்த நிலையில் தமது குடும்பத்தினரை கண்டு மகிழ்ச்சியுடன் உள்ளதாக அவர்களின் தாத்தாவான பிடன்சியோ வலென்சியா தெரிவித்துள்ளார்.

அவர்கள் மிகக் குறைவாகவே பேசுவதாகவும் இருவர் விளையாட ஆரம்பித்து விட்டார்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காட்டில் இராணுவத்தினர் மற்றும் உள்ளூர் மக்கள் ஒரு மாதத்திற்கு மேல் தேடுதல் நடத்திய நிலையில் இந்த நான்று சிறுவர்களும் கடந்த வெள்ளிக்கிழமை (09) கண்டுபிடிக்கப்பட்டனர்.

அவர்கள் சென்ற விமானம் கடந்த மே 1ஆம் திகதி விபத்துக்குள்ளானதை அடுத்தே இந்த சிறுவர்கள் காணாமல் போயினர். இவர்களின் தாய் மற்றும் இரு விமான ஓட்டிகளும் அந்த விபத்தில் கொல்லப்பட்டனர்.

காட்டுக்குள் சிறுவர்களின் காலடித் தடங்கள் மற்றும் இவர்கள் கடித்து வீசிய பழங்கள் என உயிருடன் இருப்பதற்கான அடையாளங்கள் தெரிந்ததை அடுத்தே தீவிர தேடுதல் இடம்பெற்றது. இதில் மூத்தவரான 13 வயது லெஸ்சி என்ற சிறுமி மற்ற சிறுவர்களை காட்டுக்குள் வழிநடத்தி உள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூன் மாதம் 12ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.